Reg.No: QD/76/NEWS/2005

விலை 15/=

# ஈழநாதம்

மட்டக்களப்பு பதிப்பு


பக்கம் – 24

வார வெளியீடு

நாதம் - 02 யூலை 15 - 21 / 2005 வெள்ளி - 11







## பொறுத்தது போதும்!

## ? எதனை நோக்கி

## ஆட்டம் காணவைத்த அதிசயன்




## சமாதானம் பேசிக்கொண்டு சண்டைக்கு தயாரான சிங்கள அரசு



## வாகரை மக்களின் வாழ்வை....

## சிந்தனைக்கு

தர்மமும் உண்மையும் எம் பக்கம் சார்ந்திருக்கின்றன, அதுவே எமது பலம். அதர்மமும்-பொய்மையும் எதிரியின் பக்கம் சார்ந்திருக்கின்றன, அதுவே அவனின் பலவீனம். ஈற்றில் வெற்றி கொள்வது நாம், ஏனெனில் என்றுமழியாத தர்மம் எமக்குப் பக்க பலமாக இருக்கின்றது



தமிழீழ தேசியத் தலைவர்

ஈழநாதம்
கிழக்குப்பதிப்பு EEZHANATHAM
பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை.
தொலைபேசி:- 065-2226110,
078-8723447, 078-8722960.
இணையத்தளம் : www.battieezhanatham.com
www.battieelanatham.com
மின்னஞ்சல் : batti@eezhanatham.com
editor@battieelanatham.com
15.07.2005

# கட்டமைப்பு மீது கல் எறி வீச்சு

சுனாமிப் பொதுக் கட்டமைப்பு கைச்சாத்திடுவதற்கு முன்னரே பேரினவாதிகள் பலத்த எதிர்ப்புத் தெரிவித்தனர். இதில் கை ஒப்பமிட்டால் ஈழராஜ்ஜியம் கிடைத்துவிடும் எனக் குத்துக் கரணம் அடித்தனர் பிக்குகள். கொடுத்தால் ஆட்சியைக் கவிழ்த்து விடுவோம் என்றனர் பேரினவாதக் கட்சியான ஜே. வி. பி. இறுதியில் அம்மணி கட்டமைப்பினைக் கைச்சாத்திடுவதற்கான அனுகூலங்களைக் கடைப்பிடித்தார். இப்போது சுனாமிக் கட்டமைப்பு கைச்சாத்திடப்பட்டுள்ளது. அது கையொப்பமிட்ட நாட்களிலிருந்து இன்னும் நகரவேயில்லை. அதற்கு உயிர் இருக்கிறதா? எதிர்காலத்தில் ஓராண்டுக்குள் விதிக்கப்பட்ட பணிகளை அது நிறை வேற்றுமா என்பது கேள்விக்குறியாகவுள்ளது. ஏனெனில் பொதுக் கட்டமைப்பு கைச்சாத்திடப்பட்டபோது அதன் நோக்கம் அதிகாரம் குறித்து வார்த்தைகளால் கூறப்பட்ட எவையும் இன்னும் நிறைவேறவில்லை. இருண்டுதான் கிடக்கின்றது. இப்போதும் அப்படித்தான்.

கையொப்பமிட்ட காலத்தில் இருந்து இற்றைவரை இயங்காமல் இருக்கும் இந்த சுனாமிக் கட்டமைப்பினை கல் எறிந்து கொல்வதற்கு எத்தனை கொலை காரர்கள் கூட்டம். ஒரு பக்கம் புத்த பிக்குகள் தமது பௌத்த மத வலிமையைக் கருவியாக்கி கட்டமைப்பினை அழித்து விடுவதற்கான வேலைகளில் ஈடுபடுகின்றனர். மறுபுறம் பேரினவாத கட்சியான ஜே. வி. பி காரர்களின் வீராப்பு வார்த்தைகள் விமல்வீரவன்ச, சோமவன்ச, ரிஸ்வின் சில்வா ஏன்? சிவப்புச் சட்டை அணிந்த தாடிக்காரர்கள் எல்லோரும் அந்தக் கட்டமைப்பினைக் கொல்வதற்கு கல்லெறிந்து கொண்டிருக்கிறார்கள். ஆட்சியைக் கவிழ்ப்போம் என அம்மணியை மிரட்டி பயன் ஏற்படாத நிலையில் சிறிலங்காவின் சட்ட, நீதித் துறைக்குள் கட்டமைப்பைச் சிக்கவைத்து காயமேற்படுத்த முனைகின்றனர்.

அவர்களோடு இணைந்து அவர்கள் செல்லப் பிள்ளைகளாக வளர்த்து வரும் தேசப்பற்றுள்ள இயக்கம் இதில் அங்கம் வகிப்பவர்கள் இனவாதத்தில் மூழ்கியுள்ள பிக்குகள் இவர்களும் நோர்வேத் தூதரகம் வரைச் சென்று கொடி எரித்து, கலவரம் செய்து களைத்துப் போயுள்ளனர். காரணம் இப்போது பொதுக் கட்டமைப்பிற்கு உயிர் இல்லை என்பது இவர்களுக்கு நன்றாகத் தெரியும். உயிர்ப்பு தெரியுமானால் மீண்டும் காயப்படுத்த கல் எறிவார்கள். இதேவேளை சிறுபான்மையினமான முஸ்லிம் அரசியல்வாதிகளும் ஆளுக்கொரு கோணத்தில் நின்று கல் எறிகிறார்கள். எதற்காக கட்டமைப்பில் தங்கள் பிரதிநிதித்துவத்தையும் இணைத்துக் கொள்வதற்காகத்தான்.

முஸ்லிம் மக்களிடையே முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை முன்நிறுத்தி ஒட்டு மொத்தமாக உரிமை கோருவதற்கு எந்தத் தரப்புமில்லாத நிலையில் இவ்வாறானதொரு பிரச்சினை கலவரங்களையும் உருவாக்கின்றது. உண்மையில் சுனாமிப் பேரலை ஏற்பட்ட பின்னர் தமிழர் தாயகத்தின் புனரமைப்புப் பணிகளுக்கு தனியான கட்டமைப்புத் தேவை என தமிழர் தரப்பு வலியுறுத்தியபோது முஸ்லிம் அரசியல் பிரதிநிதிகளிடமிருந்து எந்த அபிப்பிராயமுமில்லை. ஏனெனில் அவர்கள் தமிழினத்தின் விடுதலைக்காக தமிழர் தரப்பால் கோரப்படும் நியாயமான கோரிக்கைகளுக்கு இசைவான போக்கை வெளிப்படுத்துவதில்லை. எல்லாம் சரி என வந்த பிற்பாடு பங்குபோடும் பாணியில் தமது அரசியல் இலாபத்தைத் தேடிக் கொள்ள முஸ்லிம் அரசியல்வாதிகள் முனைகின்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் பொதுக் கட்டமைப்பினை வலியுறுத்திய போது தமிழர் தாயகத்துக்கு இது மிகவும் அவசியம் என்பதை முஸ்லிம் தரப்பு வலியுறுத்தவில்லை. அப்படி ஒரு வலியுறுத்தலும் தமிழ் மக்களின் கோரிக்கைகளுக்கு, போராட்டங்களுக்கு இசைவான போக்கை முஸ்லிம் சமூகம் கடைப்பிடித்திருக்குமானால் தமிழர் தாயகத்தின் உரிமைகளை மிக இலகுவாக வென்றெடுத்திருக்க முடியும். தொடர்ச்சியாக சிங்கள தலைமைத்துவங்களுக்கு மாலை போடும் கலாசாரத்தைக் கொண்டிருப்பார்களானால் தமிழ் மக்களுடனான ஒட்டு உறவில் கூட விரிசல் போக்கு தொடர் கதையாகிக் கொண்டு செல்லும் என்பது குறிப்பிடத் தக்கது.

இத்தகைய நிலையில்தான் உயிர்ப்பின்றி பொதுக்கட்டமைப்புக் கிடக்கின்றது. இதனை இயங்கச் செய்வதற்கான ஊசி மருந்து ஏற்ற வேண்டிய பொறுப்பு அம்மணி அவர்களிடம்தான் உள்ளது. அவரும் இது எப்படியாவது கொல்லப்பட்டு விட்டும் என எண்ணி விட்டார் போன்றுதான் நிலைமைகளை அவதானிக்கும் போது புலப்படுகிறது. இன்னும் பிரதிநிதிகள் தெரிவாகவில்லை. சுனாமியால் பாதிப்புற்ற மக்கள் வேதனையை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர். தேர்தலும் சிம்மாசனமும்தான் தற்போது சிறிலங்கா அரசியலில் அதிமுக்கிய விடயங்களாகத் தெரிகிறதே தவிர கட்டமைப்பினை இயங்க வைத்து கரையோர வாழ் மக்களின் மீள் புனரமைப்புப் பணிகளை வேகமாக மேற்கொள்ளும் எண்ணங்களில்லை என்பது தெளிவாகின்றது.

# யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு கடிதம்

## யாழ்ப்பாணத்திலிருந்து அன்புக்குரிய -- தென்தமிழீழ மக்களுக்கு --

ஈழநாதம் மட்டக்களப்புப் பதிப்பின் விநியோகஸ்தர் கன்னமுத்து அரசகுமார் சுட்டுக் கொல்லப்பட்ட செய்தி இங்கு பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது. முந்திய மடலை அனுப்பிய பின்னரே இத்துயரச் செய்தி கிடைத்தது. பத்திரிகை விநியோகம் செய்தவருக்கே இந்த நிலைமை என்றால், உவ்விட நிலைமைகள் எவ்வளவு மோசமாக உள்ளதென்பது தெளிவாகத் தெரிகின்றது.

அதேநேரம் அரசகுமாரின் குடும்பத்திற்கு வேறு வருமானம் உண்டா? அவர்கள் எவ்வாறு தமது குடும்பத்தைக் கொண்டு செல்லப் போகின்றார்கள் என்பன கவலையைத் தரும் பதில்களாகத்தான் உள்ளன. இலட்சியக் கருத்துக்களைச் சுமந்துகொண்டு சென்ற அரசகுமாரின் குடும்பத்தினருக்கு யாழ்ப்பாண மக்களின் கவலையை இம் மடல் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊடகவியலாளர்களை ஒவ்வொருவராக அழித்தார்கள். இப்பொழுது ஊடக விநியோகஸ்தரை அழிக்க முற்பட்டுள்ளனர். விடுதலைக்காக ஆயுதம் ஏந்தியதாக அன்று பெருமை பேசியவர்களின் துப்பாக்கிகள் இன்று தமிழினத்தை அடிமைப்படுத்தப் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறு செய்வதற்கு இவர்களுக்குத் தனிப் பலம் உண்டா? என்பது கேள்விக்குரியதே.

இவர்களின் பெயரைப் பாவித்துக்கொண்டு, இவர்களின் உதவியுடன் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரே இவ்வாறு படுகொலைகளைப் புரிவது அனைவரும் அறிந்த இரகசியமே. மொத்தமாகப் பார்த்தால் செய்தித்தாள்களின் கருத்துக்களுக்குப் பதில் சொல்ல முடியாதவர்கள், தங்கள் துரோகச் செயல்கள் அம்பலமாவதைப் பொறுக்கமுடியாத கோழைகளின் செயலே அரசகுமாரின் கொலையாகும்.


நிற்க, ஆழிப் பேரலை வந்து அழிவுகளைக் கொடுத்திருந்தாலும் ஒரு நன்மையை அது செய்துள்ளது என்று முன்னர் எழுதியிருந்தேன். சந்தேகக் கண்ணுடன் வாழ்ந்த தமிழ் மக்களையும் முஸ்லிம் மக்களையும் ஒன்றாக்கிவிட்டது ஆழிப் பேரலை என்று தான் முன்பு எழுதியிருந்தேன். ஆனால் பொதுக்கட்டமைப்பை வைத்து அவ்வொற்றுமையைக் குழப்பி விடுவார்களோ? என்ற கவலை தற்பொழுது ஏற்பட்டுள்ளது.

பொதுக்கட்டமைப்பு என்று அழைத்தால் அது புலிகளின் கட்டமைப்பு என்று பொருள்படும் என்பதால் அதன் பெயரைக் கூட மாற்றியுள்ளார்கள். தற்பொழுது 'சுனாமிக்குப் பின்னான நடவடிக்கை முகாமைத்துவக் கட்டமைப்பு' என்று நீளமாகப் பெயர் சூட்டியுள்ளார்கள். இக்கட்டமைப்பில் புலிகளின் கோரிக்கைகள் முழுவதும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. துயருற்ற மக்களின் நலன் கருதிப் பல விட்டுக்கொடுப்புக்களுடன் புலிகள் இதில் கையொப்பமிட்டுள்ளார்கள்.

முஸ்லிம்கள் தரப்பில் இதில் கையொப்பமிட அனுமதிக்கப்படவில்லை, முஸ்லிம்களுக்கு உரிய அங்கீகாரம் வழங்கப்படவில்லை., போதிய பிரதிநிதித்துவம் கொடுக்கப்படவில்லை என்று கூறப்படுகின்றது. இக்கட்டமைப்பை எதிர்த்து ஜே.வி.பி, ஹெல உறுமய ஆகியன நீதிமன்றம் சென்றது போன்று முஸ்லிம் தரப்பினரும் வழக்கு வைக்கப் போவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதே நேரம் இக்கட்டமைப்பை வைத்து தமிழ் மக்களிடையே மோதலை உருவாக்கவும் சிலர் முயன்று வருகின்றனர்.

பொதுக்கட்டமைப்புக் கூடவே கூடாது என்று ஜே.வி.பி குரல் எழுப்புகின்றது. அதே ஜே.வி.பி முஸ்லிம்களுக்குப் போதிய பிரதிநிதித்துவம் கொடுபடவில்லை என்று கண்ணீர் வடிக்கிறது. இதிலே காணப்படுகின்ற முரண்பாட்டைப் பற்றிய கவலை எதுவுமின்றிச் சில முஸ்லிம் அமைப்புக்கள் ஜே.வி.பியுடன் கைகோர்த்துள்ளமை எவ்வளவு விசித்திரமானதாகும்.

இவ்வமைப்புக்களுக்கு மக்களிடையே எவ்வளவு செல்வாக்கு உள்ளது என்பது தெரியவில்லை.



செய்தி:- சமாதான சூழலை நெருக்கடிக்குள் தள்ளியுள்ள அரசின் நிழல் யுத்தம்.... அரசியல் ஆய்வாளர்கள் அச்சம்.

ஆனால் தமிழ், முஸ்லிம் உறவை இலகுவில் உடைத்து விட முடியாது என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டுள்ளது. சில நாட்களுக்கு முன்னர் நான் பயணம் செய்த பொழுது சில ஆரோக்கியமான, ஜதார்த்த நிலைமைகளை உள்ளடக்கிய உரையாடல்களை அவதானித்தேன். அவ்வுரையாடல்கள் தமிழ் - முஸ்லிம் உறவுகள் வளர்ச்சிப் பாதையில் செல்ல வழிவகுக்கும் என்ற நம்பிக்கையை எனக்கு ஏற்படுத்தியது. அதனைத் தங்களுடன் பகிர்ந்து கொள்வதில் பயன் உண்டாகும் என்ற எண்ணத்தில் இதனை வரைகின்றேன்.

நான் பயணித்துக் கொண்டிருந்த வண்டியில் சில இளைஞர்களும் பயணம் செய்து கொண்டிருந்தார்கள். அவர்கள் யுத்த நிறுத்தம், பேச்சுவார்த்தை, சுனாமி, பொதுக் கட்டமைப்புப் பற்றி அலசி ஆராய்ந்து கொண்டிருந்தார்கள். மிகவும் ஆழமான கருத்துக்களை அவர்கள் எடுத்து வைத்தார்கள். இவர்கள் யாராக இருக்கலாம் என்ற கேள்வி என் உள்ளத்திலே எழுந்தது. பல்கலைக் கழக மாணவர்களாக இருக்கக் கூடும் என்ற சந்தேகமும் என்னுள்ளே எழுந்தது. ஆனால் அவர்களுடன் பேச்சுக் கொடுத்ததில் எனது சந்தேகம் சரியானதே என்று உறுதிப் படுத்திக்கொண்டேன்.

ஆம் அவர்கள் தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் என்பது உறுதியாயிற்று. அத்துடன் அவர்கள் எனக்கும் நண்பர்கள் ஆனார்கள். வயதில் பெரிய வேறுபாடு கொண்ட நானும், அவர்களும் நண்பர்கள் ஆனதற்கு அவர்களது தெளிவான சிந்தனைகள், கருத்துக்கள், என்பனவற்றுடன் தமிழ் மொழியே தாய் மொழி என்ற உறவும் காரணங்களாக அமைந்திருந்தன.

அவர்கள் பிரச்சினையை அணுகிய விதம், புதிய சிந்தனை இஸ்லாமிய இளைஞர்களிடம் ஏற்பட்டு வருவதை உணர்த்துவதாக இருந்தது.

அடிப்படையில் தமிழ்மக்களும் , முஸ்லிம் மக்களும் சிங்களப் பேரினவாதத்தின் அடக்கு முறைகளுக்கு ஒரே விதமாகவே ஆட்பட்டுள்ளார்கள் என்பதை அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

தந்தை செல்வாவின் காலத்திலிருந்து இன்று வரையான காலப்பகுதி நிகழ்வுகளை நன்கு ஆராய்ந்தார்கள். தமிழ், முஸ்லிம் ஒற்றுமைக்காகச் செல்வா பாடுபட்டதை நினைவு கூர்ந்தார்கள். தந்தை செல்வாவைத் தலைவராக ஏற்றுக்கொண்டவர்கள் பிற்காலத்தில் எப்படியெல்லாம் மாறிவிட்டார்கள் என்று பட்டியல் போட்டார்கள். தந்தை செல்வா அறப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்ததும் பண்டார நாயக்கா பேச்சுவார்த்தைக்கு அழைத்ததை நினைவுபடுத்தியவர்கள் போராடுபவர்களுடன் தானே பேச முடியும் அதுதானே உலகில் நடைபெறும் வழக்கம். ஏன் அவர்கள் கூறியதை கேட்க ஆச்சரியமாய் இருந்தது.

தந்தை செல்வாவுடன் பேசி ஒப்பந்தம் செய்த பண்டாரநாயக்கா ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்தார். அவருக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த சிறிமாவோ கணவனின் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதாகக் கூறிப் பின்னர் மீறினார். தந்தை செல்வா போராட்டம் நடத்தினார். அதற்குப் பின்னர் அறப்போராட்டம் ஆயுதப் போராட்டமாக மாறியது. ஆயுதப் போராளிகளுடன் யுத்தநிறுத்தம் செய்தார் ஜே.ஆர் திம்புவில் போராளிகளுடன்தானே பேச்சுவார்த்தை நடந்தது.

அப்பொழுது சிறிலங்காப்படைகள் யுத்த நிறுத்த மீறல்களில் ஈடுபட்டனர். பேச்சுவார்த்தை முறிவடைந்தது, யுத்தம் தொடங்கியது. பின்னர் பெங்களூரில் ஒரு பேச்சுவார்த்தை, அதுவும் முறிய மீண்டும் போர்வெடித்தது. இதே போன்று பிரேமதாசாவுடன் புலிகள் யுத்த நிறுத்தம் செய்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். பேச்சுவார்த்தை முறிவடைந்து போர் மீண்டும் மூண்டது. சந்திரிகாவுடன் புலிகள் யுத்தநிறுத்தம் செய்து பேசினர். பேச்சுவார்த்தை முறிந்து யுத்தம் உக்கிரமடைந்தது. ரணிலுடன் யுத்த நிறுத்தம் செய்து பேசினர் புலிகள். தேக்க நிலையடைந்தது பேச்சுவார்த்தை. ஆனால் முறிவடையவில்லை. ஆட்சி மாற்றம் ஏற்பட்டுத் தற்பொழுதும் யுத்த நிறுத்தம் தொடர்கின்றது.

தமிழ் மக்களின் பிரச்சினையும், முஸ்லிம்களின் அடிப்படைப் பிரச்சினையும் ஒன்றே என்பதால் இவர்களின் கூற்றுச் சரிப்பட்டு வராது என்று அவர்கள் தெளிவாகக் கூறினார்.

புதிய சிந்தனை இஸ்லாமிய இளைஞர்களிடம் ஏற்பட்டுள்ளதைக் கேட்டு மகிழ்ச்சியடைந்த நான் அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டேன்

இக்கடிதம் மிகவும் நீண்டு விட்டது. ஆனாலும் நல்ல செய்தியைத் தந்துள்ளேன் என்று கூறி இதனை முடித்துக் கொண்டு அடுத்த மடலில் சந்திக்கிறேன்.

அன்புடன்
மாசிலான.

# தனி மனித வீரத்தால் சிங்கள அரசை ஆட்டம் காண வைத்த அதிசயன்

மனித நாகரீகத்தின் வளர்ச்சிப் போக்கு எந்தளவு விண்ணை முட்டி விட்டதோ அதே அளவு மனிதனின் தியாக உணர்வுகளும், அர்ப்பணிப்புக்களும், கொடைகளும் வளர்ச்சியடைந்து விட்டதை நாம் அனைவரும் கருத்தில் கொள்ள வேண்டும். அஞ்ஞானத்தை வென்று விட்டதாகச் சொல்லும் விஞ்ஞானம் மெய்யான தியாகத்திடமும், தற்கொடையிடமும் தோற்றுப் போய் விட்டது வெறும் சொல்லல்ல. மெய்மையின் உயிரோட்டமாகவே இன்றளவும் மனிதத்துள் பேசப்பட்டு வருவது மனிதர்களின் தியாகமே.

காற்றை விட கடுகதியில் செல்லுமளவு விஞ்ஞானம் வளர்ந்திருந்தாலும், விண்ணையே முட்டி விட்ட விஞ்ஞானத்தில் மனிதனின் நெஞ்சுரத்தையும், அதன் உறுதியையும் முட்டி விட முடியாமல் போய் விட்டது என்றே சொல்லலாம். அதிலும் தாயக விடுதலையை நேசிக்கும் ஒரு விடுதலைப் போராளியின் நெஞ்சுரத்தை இன்றளவும் தொட்டுப்பார்க்கவும் இல்லை என்றே கூறலாம். அப்படித் தொட்டுப் பார்த்திருந்தால் தாயக விடுதலையில் எத்தனை எத்தனையோ தியாகங்களையும், அர்ப்பணிப்புக்களையும் மயிர்க் கூச்செறியும் உயிர்க் கொடைகளையும் செய்து விண்ணகத்தின் மன்னர்களாய் சென்று விட்ட மாவீரர்களின் கதைகளை எத்தனை எத்தனை அதிசயங்களாய் உலகிற்கு அறிமுகப்படுத்திருக்க வேண்டும். உலக அதிசயங்களை விட இன்று எம்மிடையே உயர்ந்திருக்கும் அதிசயம், எங்கள் மண்ணிற்காய் தம் உயிர் தந்து தமிழர்களின் மானம் காத்த மாவீரர்களின் தியாக உணர்வாகும்.

அந்த அற்புதமானவர்களின் உணர்வுகளில் தான் எத்தனை எத்தனை அதிசயங்கள், மிகை ஒலி எனப் பிரகாசிக்கின்றன. வீரத்திற்கும், தீரத்திற்கும் பெயர் போன அவர்கள் வாழ்வின் அர்த்தத்தை அறிவோமாயின் எம்மை நாமே வியந்து கொள்வோம்.

காலம் காலமாய் அடிமைகளாயும், போரின் கொடுமையால், ஊரூராய் ஏதிலிகளாயும் திரிந்த தமிழினத்தை மீட்சி பெற வைக்க தமிழர்களின் உயிரோட்டமாய்




உருவான தமிழீழ தேச விடுதலைப் போரானது, ''தமிழீழம்'' என்ற கருவைச் சுமர்ந்து நின்ற போது அது சந்தித்த வேதனைகள், கொடுமைகள், இழப்புக்கள், அழிவுகள் என்பனவற்றைச் சொல்லிவிடவோ, எழுதி விடவோ முடியாது. எனவே தான் தமிழீழக் கருவை சுகப்பிரசவமாக்கிடவும், தமிழீழ சிசுவைக் கொடிய சிங்களத்திடம் இருந்து காத்திடவும், விலை மதிக்க முடியாத தமது உயிர்களைக் கொடையாக்கிடத் துடிதுடித்து நின்றார்கள் எம் தாயகக் குழந்தைகள்.

சிங்களக் கொடியவர்களால் வெட்டி எறிந்திட்ட மக்களையும், கொடூரமாய் அழித்திட்ட தேச உறவுகளையும், வெட்டி சாய்த்திட்ட பிஞ்சுக் குழந்தைகளையும், வேணுமென்றே சிதைக்கப்பட்ட எம் தேச சொத்துக்களையும், இவற்றை விட சிங்கள வெறியர்களின் இன்னோரன்ன கொடூரங்களையும் தம் கண்களால் கண்டு மனம் வெதும்பிப் போன தமிழ்த்தாயின் புதல்வர்கள் ஈழ தேசத்தின் விடுதலைப்போரே தமக்கான நிரந்தரத் தீர்வாகும் என எண்ணி விடுதலைப் போராட்டத்தில் தாங்களாகவே முன் வந்து இணையத் தொடங்கினர்.

தமிழ் மக்களைக் காக்க வேண்டுமாயின் தங்களது உயிர்களே அதற்கான சிறந்த ஆயுதம் என திடமாக நம்பியவர்களின் வரிசையில் தனித்துவமான வழியைப் பின்பற்றிய போராளி லெப்.சீலனும் ஒருவனான்

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு உறுதியான அடித்தளமிட்ட தேசியத் தலைவர் அவர்களின் வழி தொடர்ந்து போராட்டத்தில் இணைந்து கொண்டவன் தாயக விடுதலைப் போரை விரிவாக்கி, அதை ஒரு தேசிய இயக்கமாக உருவாக்கி, சிங்கள இன வெறியர்களின் ஆக்கிரமிப்புக்களை உடைத்து, அதே சிங்கள ஆக்கிரமிப்புக் கரங்களுக்கு விலங்கிட வேண்டும் எனத் துடித்தவனின் கனவு வெறும் நனவாகவில்லை. இன்றைய போரரங்கின் வெற்றியும், படைத் துறையின் சாதனையும் அதை இலகுவாக்கியுள்ளது. பேரினவாதத்தைத் திணித்தவர்களே இன்று தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஒற்றுமையையும், தமிழ் மக்களின் பேரினக் குழுச் சேர்க்கையையும் கண்டு அஞ்சுகின்றனர். இவை எல்லாவற்றுக்கும் அன்று மகுடமிட்டவன் லெப். சீலன் லூகாஸ் சாள்ஸ் அன்ரனி ஆகும்.

சம காலத்தில் இந்தப் புனிதன் பிறந்த திருகோணமலையில் சிங்கள மிலேச்சர்கள் புத்தர் சிலை வைத்து புத்தரின் பேரால் இன அழிப்பு, ஆதிக்க மேலாண்மை, திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் என்ற மேலாதிக்க வெறியாட்டங்களைச் செய்ய முனைவதை நாம் அறிந்ததே. இவற்றைத் தடுக்க பல்லாயிரக்க ணக்கான மக்கள் அணியாகத் திரண்டு எதிர்க்க முயன்றும் எதுவுமே முடியாத கதையாகி விட்டது. அத்துமீறி புத்தர் குந்த வைக்கப்பட்ட இடத்தில் இருந்து குண்டூசிமுனை அளவும் நகர்த்த முடியாத நிலை உருவாகி விட்டது.

புத்தர் சிலையை எடுத்தெறிந்து தமிழ்த் தேசியத்தைக் காப்பாற்றுவது ஒன்றும் திருகோணமலை மக்களுக்கு கடுமையான அல்லது சிக்கலான விடயமல்ல. அரசியல் ராஜதந்திர நகர்வுகளைச் சிதைத்து விடக் கூடாது என்பதற்காகவே திருமலை மக்கள் பொறுமை காக்கின்றனர். இந்த மக்களுக்கு வீரமும், விவேகமும், துணிவும் இயல்பிலேயே கலந்திருக்கின்றது. இதனது உண்மைத் தன்மையை வாசகர்கள் லெப். சீலனின் வீர வரலாற்றைக் கற்றுக் கொள்வதில் இருந்து அறிந்து கொள்ளலாம்.

லெப் சீலனின் 22வது நினைவு தினத்தையொட்டி எழுதப்படும் அவனது வீர வரலாறுகளில் சிலவற்றை மாத்திரமே என்னால் தொட்டுக் காட்ட முடியும். அவனது ஏனைய வீர வரலாறுகளை அறியுமிடத்து விஞ்ஞான யுகம் விஞ்சிட முடியாத அஞ்ஞானத்தின் அதிசய மனிதன் ஒருவனின் வரலாற்றைத் திறந்து பார்க்க முடியும்.

இற்றைக்கு 26 வருடங்களுக்கு முன் சிங்களக் கொலை வெறியர்களின் அட்டூழியங்கள் தாண்டவமாடிய காலம் அது. திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட அந்தப் பள்ளிப் பருவ மாணவனான லூகாஸ் சாள்ஸ் அன்ரனி சிங்களப் பேரினவாத அரசை தனியொரு மனிதனாக நின்று எதிர்த்த வீர வரலாறு நடைபெறுகின்றது. உண்மையில் சொல்லப் போனால் உலகிலேயே ஒருதனி நாட்டை தனிமனிதனாக நின்று எதிர்த்தவன் இவன் ஒருவனே என்று பெருமையாகச் சொல்ல முடியும். இந்தளவு துணிவு அவனுக்கு எப்படி வந்ததென்பதை எவராலும் ஊகித்துச் சொல்ல முடியாமல் போய் விட்டது. இந்தத் தனிப் பெறும் முயற்சியில் மெஞ்ஞானத்தில் இவன் ஒரு விசித்தர மனிதனாகவே உருவாகி விட்டது மனிதயியலின் உண்மையாகும். 1979ம்

க.மிரேசு

ஆண்டு ஆகஸ்ட் மாதம் கொண்டு வரப்பட்ட சிறிலங்கா ஜனநாயக சோசலிச குடியரசின் புதிய ஜனாதிபதியாகவும், தமிழ் மக்களைப் பொறுத்த வரை நயவஞ்சகக் கொடுங்கோலனாகவும் பதவியேற்கவிருந்த ஜே.ஆர் ஜெயவர்த்தனாவின் பதவியேற்பு வைபவத்தினை முதன்மைப்படுத்தி, தமிழீழ தாயகப் பிரதேசத்திலும் விழாக்கள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. இந்த வைபவத்தின் ஒரு பகுதி திருகோணமலை இந்துக்கல்லூரியில் நடைபெற ஆயத்தமாகி இருந்தது. இந்த நிகழ்வில் சிறிலங்காவின் தேசியக் கொடி ஏற்றும் வைபவமும் நடைபெறவிருந்தது. சிங்கள அரச அதிகாரிகள், மக்கள் என திரண்டிருக்க, பிரமுகர் ஒருவரினால் கொடியேற்றப்பட்டது. எல்லோரும் கொடியேறுவதை ஆவலுடன் பார்த்த வண்ணமிருந்தனர். ஆனால் அந்தக் கூட்டத்தில் ஒருவனாக நின்ற லூகாஸ் சாள்ஸ் அன்ரனி மட்டும் கொடி எரிந்து சாம்பலாகும் சம்பவத்தைக் காண ஆவலுடன் இருந்தான்.

எல்லோரும் எதிர்பார்த்தது போலவும் ஜே.ஆரின் ஆதிக்க ஆசையின் படியும் கொடி தமிழர் நிலத்திலும் ஏறியது. ஆனால் கம்பத்தின் உச்சிக்குச் சென்ற கொடி பறக்கவில்லை. மாறாக பற்றி எரிந்தது. எரிந்தது சிங்களக் கொடி மட்டுமல்ல, சிங்கள ஆக்கிரமிப்பாளர்களின், தமிழ் மண்ணை ஆளும் ஆசையும் அந்தக் கணத்திலே பற்றி எரிந்ததை சிங்களம் உணர்ந்தது. கூடியிருந்த பிரமுகர்களுக்கும் மக்களுக்கும் என்ன நடக்கிறது என்று அறிந்து கொள்ள முடியாதளவு பதற்றம், பரிதவிப்பு. ஆனால் தமிழ் மக்களின் மானத்தினை தனி ஒருவனாக இருந்து காத்த லூகாஸ் சாள்ஸ் அன்ரனிக்கு அளவு கடந்த ஆனந்தம். மட்டற்ற மகிழ்ச்சி. சிங்களவன் தமிழ் மண்ணின் மகிமையை உணர்ந்து கொள்ள வேண்டும். எங்கள் மண்ணில் கால் பதிப்பதைவிட்டு வெளியேற வேண்டும் என்பதை எதிரிக்கு உணர்த்தியவனாய், தமிழினத்திற்காய் தான் செய்த வீரச்செயலினை எவரிடமும் சொல்லி விடாது வீடு திரும்புகின்றான்.

எதிரியே எங்கள் மண்ணில் கால் வைத்தால் இது மட்டுமல்ல இனியும் கொடி, மட்டுமல்ல உன் கொட்டமும், கோட்டையும், பாசறையும் எரியும் என நினைத்து நின்மதியாய் இருந்தவனை சந்தேகத்தின் பேரில் கைது செய்து சித்திரவதை செய்த போதும் இறுதிவரை தனது மனதைத் திடப்படுத்தி எதையுமே சொல்லாமல் தன் நிலையில் பிடிவாதமாய் இருக்கின்றான். ஆன்ம உறுதி கொண்டு தேசிய விடுதலையை மனதில் வரித்துக் கொண்ட அந்த வீரனை அந்த ஆக்கிரமிப்பாளர் களால் ஒன்றுமே செய்து விட முடியாத நிலையில் விடுதலை செய்கின்றனர். தனி மனிதனாக நின்று ஒரு அரசாங்கத்தை ஆட்டுவித்த அந்த வீரனின் விடுதலையோ அவனை தமிழீழத்தின் மிகச் சிறந்த விடுதலைப் போராளியாக்கியது.

தமிழினத்தின் கொடுமைகளையும், அவலங்களையும் தன் கண்ணெதிரே கண்டவன் லெப்.சீலன். எனவே தான் அவனது மனப் பிரமை தமிழ்த் தேசியத்தின் விடுதலையின் பால் கவனத்தை ஈர்த்தது. நான் முன்னமே சொன்னது போல் லெப். சீலன் மனிதருள் வித்தியாசமான உணர்வுகளைக் கொண்டவன். உலக விடுதலை இயக்கங்களில் எந்தவொரு விடுதலைப் போராளியும், விடுதலைப் போராட்டத்தில் தன்னை இணைத்துக் கொண்ட பிறகே வீரத்துடன் போராடுவதும், சாதனைகளைச் செய்வதும் விடுதலை தேடியும் மக்களுக்காய் தியாகம் செய்வதுமாக இருப்பான்.

ஆனால் எமது தாயக விடுதலைப் போராட்டத்தில் எமது தலைவனும் இயக்கம் ஆரம்பிப்பதற்கு முன்பே தானே முன் வந்து முன்நின்று விடுதலைப் பாதையில் செயற்படத் தொடங்கினார். அவரின் வழித் தோன்றலாக லெப் சீலனும் சிங்கக் கொடி எரிப்பினூடாக தாயக விடுதலையைத் தேர்ந்தெடுத்தவனாவான். சீலனைப் போன்ற வீரர்களை விடுதலைக்கு முந்திய விடுதலையின் வழிகாட்டி அல்லது விடுதலைப் படையின் மீட்பர்! என்று சொல்வது சிறந்ததாகுமா? என் பதை வாசகர்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

தனி மனிதனாக விடுதலைப் பாதையை தேர்ந்தெடுத்த லெப். சீலன் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின் தனிப் பெரும் வீரனாய், தளபதியாய் சாதனை



யாளனாய் விடுதலைப் பாதைக்கு முதல்வனாய் இருந்து தமிழீழக் கனவை நனவாக்க மயிர்க் கூச்செறியும் உயிர்க் கொடையைத் தந்தவன் லெப். சீலன்.

தனது தனி மனித செயல் வலுவுடன் புரட்சிகர இயக்கத்தில் இணைந்து தன்மை முழுமையாக தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தில் இணைத்துக் கொண்டு பல சாதனைகளைச் செய்தான். தலைவரின் வழிநடத்தலின் முன் நின்று உழைக்கவென 1980ன் ஆரம்ப காலத்தில் போராட்டத்தில் இணைந்து கொண்டான். குடும்பத்தின் வறுமை தனது நெஞ்சை வருடிய போதும் விடுதலையை ஆழமாக நேசித்தவனாக உள் நுழைந்தான்.

லெப் சீலனின் தேசப் பற்று, பணிவு, ஒற்றுமை, ஒழுக்கம், ஆர்வம், நம்பிக்கை, இடைவிடாத உழைப்பு, இலட்சிய உறுதி என்பன தலைவர் அவர்களுக்குப் பிடித்து விடவே லெப் சீலன் விடுதலைக்கு வித்திட வந்தவன் என்பதை உணர்ந்து அவனுக்கு ஆயுதப் பயிற்சியைக் கொடுத்தார். ஆயுதப் பயிற்சியை முடித்து தனது திறமையினால் போர் நுணுக்கங்களைக் கற்று ஆற்றல் மிகுந்த சிறந்த கெரில்லாத் தலைவனாகினான். போரியல் வாழ்வில் அவன் சாதித்தது ஏராளம். அவன் சாதித்ததை விட தலைவருடன் இணைந்து இயக்கத்தை வளர்க்கப் பாடுபட்டவர்கள் ஏராளம் எனச் சொல்வது பொருந்தும்.

1981ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் வைத்து 2 இராணுவத்தினரைச் சுட்டுக் கொன்ற சண்டையில் சீலன் காட்டிய அபார துணிச்சலினால் 1982ம் ஆண்டு விடுதலைப் புலிகளின் தாக்குதல் தளபதியாக தலைவரால் நியமிக்கப்பட்டான். அதே ஆண்டு ஜே.ஆர்.ஜெயவர்த்தனா யாழ்பாணம் வந்த போது அதை எதிர்த்து யாழ் காரைநகர் கடற்படைத் தளத்தில் இருந்து சென்ற வாகனத் தொடர்



மீது பொன்னாலைப் பாலத்தில் தாக்குதல் நடத்தினான் அதன் பின் ஒக்டோபர் 27ம் திகதி சாவகச்சேரி பொலிஸ் நிலையம் சீலனின் தலைமையில் தாக்கப்பட்டு 33 ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. இந்தத் தாக்குதலே தமிழரின் விடுதலைப் போராட்டம் அடுத்த கட்டத்திற்குச் செல்லும் நிலையை உருவாக்கியது. இந்தத் தாக்குதலில் கயமடைந்த போதும் ஆயுதங்களைக் கைப்பற்றுவதிலேயே கவனமாக இருந்தான். இதன் பின்னர் கந்தர் மடத் தாக்குதல். காங்கேசன்துறை வெடி பொருட்கள் மீட்பு. தேசத் துரோகிகளுக்கு எதிரான சண்டை என பல தாக்குதல்களைச் செய்த அந்த வீரன் உலக விடுதலைப் போராட்ட வரலாற்றிலும், உலக படைத்துறை சார் வரலாற்றிலும் என்றும் நடந்திராத அற்புதத்தை தனது உயிரால் நிகழ்த்தினான்.

1983ம் ஆண்டு ஜூலை 15ம் திகதி மீசாலையில் மறைவிடம் ஒன்றில் லெப். சீலனும் அவனது சக போராளிகளும் மறைந்திருந்த போது தேசத்துரோகி ஒருவனால் அந்த இடம் காட்டிக்கொடுக்கப்பட்டது. தனது மறைவிடத்தை எதிரி சுற்றிவளைக்க தன்னிட மிருந்த ஆயுதத்தைப் பாதுகாக்கவும், இரகசியத்தைக் காக்கவெனவும் நினைத்து சீலன் அவ்விடத்தை விட்டு வெளியேறுகிறான்.

மறைந்து ஓடிய போது எதிர்ப்பட்ட வெட்ட வெளியில் பட்டப்பகலில் எதிரிகளோடு சண்டை செய்தே வெளியேற வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகி விட்டான். எனவே சீலனின் துப்பாக்கி சடசடக்கின்றது. சீலனுடன் கூடவே வந்த ஆனந்தும் அவனுடன் இன்னொரு வீரனும் நூற்றுக்கும் மேற்பட்ட சிங்கள எதிரிகளோடு சமராடுகின்றனர். சீலன் தனக்கே உரித்தான போர் அநு பவத்துடன் மூர்க்கமாகத் தாக்கி பின்வாங்கிய போது எதிரிகளின் துப்பாக்கிக் குண்டு சீலனின் உடலைப் பதம் பார்க்கின்றது. காயமடைந்த பின்பும் சீலன் தனது துப்பா க்கியை இயக்கி சில எதிரிகளைச் சுடுகின்றான். மீண்டும் ஒரு குண்டு அவனைத் துளைக்க அவனது உயிர்த் தோழன் ஆனந் அவனை தூக்கி காப்பாற்ற முயற்சி செய்கின்றான். உயிர் போகும் நிலையில் தன் உயிரைக் காக்க நினைக்காத சீலன் ஆனந் என்னைச் சுட்டு விட்டு ஆயுதத்தை அண்ணையிடம் கொண்டு போய்க் கொடு என்றான்.

தன் தளபதியைத் தன் உயிருக்கு உயிரான தோழனை, தமிழ் மக்களின் மெய்யான வீரனை ஆனந்தால் எப்படி சுட முடியும். சீலன் மீண்டும் மீண்டும் சொல்கிறான். கடைசியில் ஆனந் இது எனது கட்டளை. என்னைச் சுடடா சுடு.... சுட்டு விட்டு அண்ணையிடம்


(தொடர்ச்சி 23ம் பக்கம்.......)

# காலக்கெடுக்குள் அகப்பட்டு

# கொண்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம்

## சமாதானம் பேசிக்கொண்டு சண்டைக்குத் தயாரான சிங்கள அரசு

ஜெயா



"பந்தயத்தில் ஓடுவோம். அதற்கு முன் உன்னுடைய முழங்காலை மட்டும் முறித்து விடுகின்றேன்" - சிறிலங்கா அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட தினம் முதற்கொண்டு இப்படி ஒரு எண்ணத்தில்தான் செயற்பட்டு வருகின்றது.

'சமாதானம்' என்கின்ற பெயரில் ஒரு நீண்ட இழுத்தடிப்பை மேற்கொண்டு, அந்தக் கால அவகாசத்தில் தனது படைப்பலத்தை அதிகரிப்பதுடன், புலிகளையும் இராணுவ ரீதியாகப் பலவீனப்படுத்தும் நோக்கத்தில்தான் சிறிலங்கா அரசாங்கம் புரிந்துணர்வு ஒப்பந்தம் என்கின்ற ஒரு ஏற்பாட்டிற்கே வந்தது. ஸ்ரீலங்கா அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே படைவலுச் சமநிலையில் ஒன்று ஏற்பட்டதைத் தொடர்ந்ததான் இரண்டு தரப்பினருக்குமிடையே யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது. புரிந்துணர்வு ஒப்பந்தமும் ஏற்பட்டது. ஆனால் சமாதானம் என்கின்ற பொறியினுள் விடுதலைப் புலிகளைச் சிக்க வைத்துவிட்டு, தனது இராணுவப் பலத்தை ஸ்திரப்படுத்துவதுடன், புலிகளின் இராணுவப் பலத்தைச் சிதைத்துவிடலாம் என்கின்ற அடிப்படையில்தான் சிறிலங்கா அரசும், அதற்கு ஆலோசனை வழங்கிக்கொண்டிருந்த நாடுகளும், சிந்தித்தன: செயற்பட்டன.

விடுதலைப் புலிகள் தமது போராளிகளின் பாதுகாப்பான போக்குவரத்திற்கு 14 நாட்கள் காலக்கெடு விதித்துள்ள நிலையில், ஸ்ரீலங்கா அரசு யுத்தத்தில் கொண்டுள்ள மோகம் பற்றியும், ஒரு யுத்தத்திற்காக அது மேற்கொண்டுள்ள தயாரிப்புக்கள் பற்றியும், சமாதான காலத்தில் புலிகள் மீது அது தொடுத்துவந்த நிழல் யுத்தம் பற்றியும் ஆராய்வதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்:

**பாதுகாப்பு வலைப்பின்னல்:**

சமாதானத்தை நோக்கிய ஒரு பயணமாக இந்த விடயம் வெளிக்காண்பிக்கப்பட்டாலும் கூட, ஆரம்பம் முதலே புலிகளின் இராணுவப் பலத்தைச் சிதைக்கும் நடவடிக்கைகளில் சிறிலங்கா அரசாங்கம் ஈடுபட்டு வந்தது என்பது அனைவருமே அறிந்த ஒரு விடயம்.

ஆரம்பத்தில் ஐ.தே.கட்சி அரசாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுவார்த்தை மும்முரமாக நடைபெற்றுக்கொண்டு இருந்த காலப்பகுதியில், சர்வதேச பாதுகாப்பு வலைப்பின்னல் (International Security Network) என்கின்ற பாதையில் ஸ்ரீலங்கா அரசாங்கம் பயணிக்க ஆரம்பித்தது. அதாவது பேச்சுவார்த்தையில் அரசாங்கம் திட்டமிட்டு மேற்கொண்ட இழுத்தடிப்புக்களில் அதிருப்தியுற்று, புலிகள் மாற்று நடவடிக்கைகள் எதிலும் ஈடுபட்டுவிடக்கூடாது என்கின்ற நோக்கத்தில் இந்த சர்வதேச பாதுகாப்பு வலைப்பின்னலை கவனமாக விரித்திருந்தார்கள். அத்தோடு, புலிகளுக்கு எதிராகவும், தமிழ் மக்களுக்கு எதிராகவும் சிறிலங்காப் படையினர் ஆரம்பித்திருந்த படுகொலைகளினால் விடுதலைப் புலிகள் கோபம் அடைந்து யுத்தத்தில் குதித்து விடக்கூடாது என்கின்ற அச்சமும், அவர்கள் இந்தப் பாதுகாப்பு வலைப்பின்னலை மேற்கொள்வதற்கு மற்றொரு காரணம். இந்தியாவிற்கு திருகோணமலை எண்ணெய்க் குதங்களைக் கையளித்தது, பலாலி விமான ஓடுபாதையைத் திருத்தும் பணியினை இந்தியாவிடம் ஒப்படைத்தது, அமெரிக்காவுடன் எல்லை கடந்த சேவை ஒப்பந்தம் (Accusation and Cross Service Agreement) கைச்சாத்திடத் திட்டமிட்டது... என்று நிறையக் காரியங்களைச் சளைக்காமல் செய்து வந்தது.

இது ஒருபுறம் இருக்க, சமாதானப் பேச்சுவார்த்தை இடம்பெற்ற காலப்பகுதி முழுவதுமே, ஸ்ரீலங்கா அரசு விடுதலைப் புலிகளுக்கு எதிராக இராணுவ ரீதியான அணுகுமுறைகளையே பிரயோகித்து வந்ததும் குறிப்பிடத்தக்கது. அரசியல் ரீதியாக தமிழ் மக்களைக் குறிவைத்து 'சமாதானத் திருவிழா', 'சமாதான கழியாட்டம்', 'சமாதான விளையாட்டு', சமாதான விற்பனை'... என்று சமாதானத்தின் பெயரால் உளவியல் பேரைத் திட்டமிட்டு கட்டவிழ்த்துவிட்ட அதேவேளை, இராணுவ ரீதியாக பல புலனாய்வு நடவடிக்கைகளையும் மேற்கொள்ள ஆரம்பித்தது. இராணுவப்புலனாய்வுப் பிரிவினரையும், இராணுவத்தினருடன் சேர்ந்தியங்கும் தமிழ் ஒட்டுப் படையினரையும் பயன்படுத்தி தமிழ் முஸ்லிம் கலவரத்தை திட்டமிட்டு ஏற்படுத்தியது. புலிகளுக்கு நெருக்குதல்களை ஏற்படுத்தும் நோக்கத்திலேயே சிறிலங்காப் படைத்தரப்பு இந்த நடவடிக்கைகளில் ,ஈடுபட்டது. யுத்த நிறுத்த காலத்தில், கிழக்கில் தமிழ் முஸ்லிம் உறவில் விரிசல்களை ஏற்படுத்துவதில் ஸ்ரீலங்கா இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும், அவர்களுடன் இணைந்து செயற்படும் தமிழ் ஒட்டுப்படையினரும் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருந்தது பல சந்தர்ப்பங்களில் நிரூபணமாகியுள்ளது.

> "சமாதானப் பேச்சு வார்த்தை இடம்பெற்ற காலப்பகுதி முழுவதுமே, சிறிலங்கா அரசு விடுதலைப்புலிகளுக்கு எதிராக இராணுவ ரீதியான அணுகுமுறைகளையே பிரயோகித்து வந்ததும் குறிப்பிடத்தக்கது. அரசியல் ரீதியாக தமிழ் மக்களைக் குறிவைத்து 'சமாதானத் திருவிழா', 'சமாதானக் கழியாட்டம்', 'சமாதான விளையாட்டு', 'சமாதான விற்பனை'.... என்று சமாதானத்தின் பெயரால் உளவியல் போரைத் திட்டமிட்டு கட்டவிழ்த்துவிட்ட அதேவேளை, இராணுவ ரீதியாக பல புலனாய்வு நடவடிக்கைகளையும் மேற்கொள்ள ஆரம்பித்தது."

**புலனாய்வுச் சதிகள்:**

2002ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 15ம் திகதி, அக்கரைப்பற்றில் அப்துல் வஜீட் என்ற 24 வயது முஸ்லிம் வாலிபன் இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டதைத் தொடர்ந்து அப்பிரதேசத்தில் பெரும் பதட்டம் ஏற்பட்டது. கடத்தப்பட்டதாகக் கூறப்பட்ட வாலிபன் ஈ.பி.டி.பி. அமைப்பைச் சேர்ந்தவன் என்பதால், இது புலிகளின் வேலையாகத்தான் இருக்கவேண்டும் என்று கூறிக் கொதித்தெழுந்த அப்பிரதேச முஸ்லிம்கள், ஆர்ப்பாட்டம், ஹர்த்தால், கடையடைப்பு என்று இறங்கியிருந்தனர். தமிழ் மக்களை தாக்கி, வன்முறைகளில் அவர்கள் இறங்கிவிடக்கூடிய அபாயமும் அங்கு காணப்பட்டது. அப்பிரதேசத்தில் மூன்று தினங்கள் தொடர்ந்து ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கும் அளவிற்கு நிலமை மிக மோசமாக இருந்தது. தமது அமைப்பிற்கும் இந்தக் கடத்தலுக்கும் சம்பந்தமில்லை என்று விடுதலைப் புலிகள் தெரிவித்திருந்த போதிலும் அவர்களை நம்புவதற்கு எவரும் தயாராக இருக்கவில்லை.

இச்சம்பவம் நடைபெற்று மூன்றாம் நாள் 18ம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை, கடத்தப்பட்டதாகக் கூறப்பட்டவனின் வீட்டை பொலிஸார் திடீரென்று சுற்றிவளைத்தபோது, குறிப்பிட்ட வாலிபன் தனது வீட்டில் சாவகாசமாக அமர்ந்திருப்பதைக் கண்டு அவனைக் கைது செய்தார்கள்.

கைதுசெய்யப்பட்டு பொலிஸாரால் விசாரிக்கப்பட்ட வாலிபன், 'வெளிநாடு செல்வதற்கு தனக்கு பணம் தேவைப்பட்டதால், ஸ்ரீலங்கா இராணுவப் புலனாய்வுப் பிரிவின் இந்த கடத்தல் நாடகத்திற்கு தான் சம்மதித்ததாகத் தெரிவித்தான்.

கொழும்பில் இருந்து விசாரணைகளுக்காகச் சென்றிருந்த விஷேட இரகசியப் பொலீஸ் குழு ஒன்று விசாரணைகளை நடாத்திவிட்டு, 'புலிகளுக்கும் இந்தச் சம்பவத்திற்கும் எந்தத் தொடர்பும் கிடையாது' என்று தெரிவித்தார்கள். இந்தக் கடத்தல் விவகாரம் தமிழ் -முஸ்லிம் சமூகங்களுக்கிடையில் மோதலை ஏற்படுத்தி, சமாதான முயற்சிகளைச் சீர்குலைப்பதற்காக ஸ்ரீலங்காப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட சதி என்று உறுதியானது.

இதேபோன்று 21.05.2003 அன்று விடுதலைப் புலி உறுப்பினரான பூவண்ணன் (காத்தமுத்து கோணேஸ்வரன்) என்பவர் சுட்டுக்கொல்லப்பட்டு,



அவரது சடலம் முஸ்லிம் கிராமமான நிந்தவூரில் கொண்டு சென்று போடப்பட்டது. இந்த விடயம் தமிழ் மக்கள் மத்தியில் பாரிய உணர்வலைகளை ஏற்படுத்தியிருந்ததுடன், முஸ்லிம்களுக்கு எதிராக தமிழ் மக்களை கிளர்ந்தெழச் செய்யவும் காரணமாக இருந்தது.

கொலை செய்யப்பட்ட பூவண்ணன், விடுதலைப் புலிகளின் தேசியப் புலனாய்வுப் பிரிவைச்சேர்ந்த முக்கிய உறுப்பினர். காரைதீவு பணிமனையில் பணியாற்றிக்கொண்டிருந்தவர். இவர் கொலை செய்யப்பட்டதும், இவரது உடல் தனி முஸ்லிம் கிராமம் ஒன்றின் நடுவில் கண்டெடுக்கப்பட்டதும், விடுதலைப் புலி உறுப்பினர்கள் மத்தியிலும் பாரிய சினத்தை ஏற்படுத்தியிருந்தது.

எந்த நேரத்திலும் எதுவும் நடந்துவிடலாம் என்று மக்கள் அச்சம் அடைந்திருந்த நேரத்தில், விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு-அம்பாறை அரசியல்துறைப் பணியகம் ஒரு அறிக்கையை வெளியிட்டிருந்தது. 'தமிழ், முஸ்லிம் மக்கள் விழிப்பாக இருங்கள்' என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட அந்த அறிக்கையில், "காரைதீவில் வைத்து ஈ.பி.டி.பி. கும்பலினால் கடத்திச் செல்லப்பட்ட பூவண்ணன் கொலை செய்யப்பட்டு, அவரது சடலம் முஸ்லிம் கிராமமான நிந்தவூரில் போடப்பட்டதாகத்" தெரிவிக்கப்பட்டிருந்தது.

"தமிழ் முஸ்லிம் மக்கள் மத்தியில் குரோதத்தைத் தோற்றுவித்து இரு சமூகங்களுக்கும் இடையில் இனமோதலை ஏற்படுத்தி வேடிக்கை பார்க்கும் நோக்கத்தில் இந்தச் சம்பவம் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக" புலிகள் தமது அறிக்கையில் தெரிவித்திருந்தார்கள். கடைசியில் இந்தச் சதியில் ஸ்ரீலங்காப் புலனாய்வுப் பிரிவினர் சம்பந்தப்பட்டிருந்தது தெரியவந்தது.

2003ம் ஆண்டு மே மாதம் 15ம் திகதி நள்ளிரவு ஹுசைன் என்ற 27 வயது முஸ்லிம் இளைஞர் வெட்டிக் கொலை செய்யப்பட்ட நிலையில் அவரது உடல் மட்டக்களப்பிலுள்ள கிண்ணையடி என்ற தமிழ் கிராமத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஓட்டமாவடி, வாழைச்சேனைப் பிரதேசங்களில் பதட்டநிலை ஏற்பட்டதுடன், தமிழ் முஸ்லிம் கலவரம் ஒன்றும் தோன்றுவதற்கான ஏதுநிலையும் உருவானது.

ஆனால் இந்தக் கொலைச் சம்பவத்தின் உண்மையான சூத்திரதாரிகள் பின்னர் பொலிஸாரினால் கண்டுபிடிக்கப்பட்டு, கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து, இந்தச் சம்பவம் பற்றிய உண்மைகள் வெளிவர ஆரம்பித்தன.

ஹஜ்ஜி என்ற ஸ்ரீலங்கா இராணுவப் புலனாய்வுப் பிரிவு உயரதிகாரியே இந்தக் கொலையைப் புரிந்து, உடலை தமிழ் கிராமத்தில் கொண்டு சென்று போட்டது பின்னர் பொலிசாரால் கண்டுபிடிக்கப்பட்டது.

இதேபோன்று கருணாவின் பெயரில் கிழக்கில் படுகொலைக் கலாசாரத்தைக் கட்டவிழ்த்துவிட்டு புலிகளுக்கு எதிரான புலனாய்வு யுத்தத்தை முன்னெடுத்துவரும் ஸ்ரீலங்கா இராணுவப் புலனாய்வுப் பிரிவினர், 'சமாதானம்' என்கின்ற இந்தக் கால அவகாசத்தை, புலிகளைப் பலவீனப்படுத்தவதற்கு எந்த அளவிற்குப் பயன்படுத்த முடியுமோ அந்த அளவிற்குப் பயன்படுத்தி வருகின்றாகள்.

**படைக்குவிப்பு:**

இந்த 'சமாதான'(??) காலத்தில் சிறிலங்காப் இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவினர் விடுதலைப் புலிகளுக்கு எதிரான உளவியல் போரை ஒருபக்கம் மேற்கொண்டு வரும் அதேவேளை, மறு பக்கம் ஸ்ரீலங்கா அரசாங்கம் தன்பங்கிற்கு தனது முப்படைகளின் பலத்தை பலமடங்கு அதிகரித்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

(தொடர்ச்சி 23ம் பக்கம்)

# பொறுத்தது போதும்!



"தன்மானத் தலைவரே! தமிழ் மக்கள் அணி திரண்டு விட்டார்கள்! தமிழினம் போராடத் தயாராகி விட்டது. பொறுத்தது போதும்! பொங்கி எழுங்கள்!"

இது வெறும் வரிவடிவங்களல்ல. கிழக்கு மக்களின் உணர்ச்சிப் பிரபாகம். தேசியத் தலைவனை மீண்டும் போர் முரசம் கொட்டும்படி தென்தமிழீழ மக்கள் விடுத்திருக்கும் வேண்டு கோள். உண்மையில் தமிழினம் வீரம் செறிந்து விட்டது. விடுதலைக்கான துணிவும் உற்சாகமும் உயிர்த்துடிப்பும் பன்மடங்காகப் பரிணமித்து விட்டதனையல்லவா இது வெளிப்படுத்துகிறது!

நீண்டதொரு போர் விடுதலைக்காக தமிழினம் களமாடி வெற்றி முரசம் கொண்ட போர் சிங்களப் பேரினவாதம் தமிழினத்தின் உரிமைகளை வழங்காது தமிழினத்தின் இரத்தத்தைக் குடித்து மகிழ்ந்து விளையாடிய போது தமிழின விடுதலைக்காகப் புறப்பட்ட பெருந்தலைவன். அவன் பின்னால் ஆயிரமாயிரம் வீரமறவர்கள். அண்ணன் ஆணையிட்டால் மறுகணம் காற்று நுழையாவிடத்திலும் கரும்புலிகள் புகுந்து பகைமை அழிக்கும் மனோதிடம்.

சாதாரண ஒரு கெரில்லாப் போராட்டம். அப்போது சிங்களதேசம் தமிழ் தேச விடுதலைப் போராட்டத்தை சிறு துரும்பாகவே கருதினர். முளையில் அழித்து விடலாம் என சிங்களத் தலைமைகள் பெருமிதம் கொண்டன. சிங்களப் படைச்சிப்பாய்களின் வலிமையே பெரியதென நினைத்துக் கொட்டிய வீராப்பு வசனங்கள் ஈற்றில் தமிழர் சேனையை வெல்ல முடியாது என வரலாறு எழுதிவிட்டது. இற்றைக்கு ஒரு பத்து வருடங்களுக்கு முன்பிருந்து தமிழின விடுதலைப் போராட்டத்தை அழித்து விடுவதற்காக எத்தனையோ உலக நாடுகள் சிங்கள தேசத்திற்கு உதவி வழங்கினர். விடுதலைப் போராட்டம் பயங்கரவாதமாகச் சித்தரிக்கப்பட்டது.

தமிழினத்திற்கு என்று எந்த வொரு பிரச்சினையும் இல்லை என்பதைச் சிங்களத் தலைமைகள் உலக நாடுகளிடம் பொய்ப்பிரசாரம் செய்தனர். உண்மைதான் அந்நிய ஏகாதிபத்திய சக்திகளின் கைகளில் இருந்த ஆட்சியதிகாரம் சிங்களத் தலைமைகளுக்கு மாறிய போது சில தமிழர்களும் அந்தச் சிங்கக் கொடியைத் தேசியக் கொடியாக அங்கீகரித்து நின்றனர். இதனை உலக நாடுகளும் இலங்கையில் சிறுபான்மையினங்கள் அரசியல் ரீதியான உரிமைகளை இழந்து அல்லல் படுகின்றனர் என்பதை உணரவில்லை.

எனினும் தமிழினத்தின் போராட்டம் வீரியம் பெற்றது. சிங்களப் படைகளின் கொடூரத்தாக்குதலில் உயிர் தப்பி ஆயிரமாயிரம் தமிழ் உறவுகள் ஐரோப்பிய நாடுகளுக்குப் புலம் பெயர்ந்தனர். சிங்களப் படைகளின் கொடூரங்களை சர்வதேச சமூகத்திற்கு உணர்த்தினர். அத்தகைய நிலையில் தமிழர் தாயகத்தில் சிறிலங்கா கூலிப் படைகள் மேற்கொண்ட மனித உரிமை மீறல்கள் எல்லாம் ஒன்று திரண்டு சர்வதேச சமூகத்தை தமிழினத்தின் மீதான போராட்டத்தின் பால் ஈர்த்தது.

தமிழினத்தின் மீது சிங்கள அரசுகள் போர் தொடுத்த போது யுத்த இராணுவ தளபாட உதவி அளித்த நாடுகள்கூட பின்னர் சமாதான வழிமுறைகளைப் பின்பற்றுங்கள் என ஏன் குரல் கொடுத்தனர். தமிழ் மக்களின் தாயகப் பிரதேசம் வடக்குக் கிழக்கு. இங்கே தமிழின விடுதலைக்கான போராட்டம் வளர்ச்சியடைந்து விட்டது. சிங்கள தேசம் தமது படை வலிமையால் விடுதலைப் போராட்டத்தை அழிக்க முடியாது திண்டாடியது. இந்தக் கட்டத்தில் தான் சமாதானத்திற்கான குரல் உரத்து ஒலித்தன.

வெல்ல முடியாத இலக்கு என எதிரிகள் அகந்தை கொண்டிருந்த ஆனையிறவுப் பெரும் தளம் கூட ஈற்றில் வீரவேங்கைகள் வென்று தமிழினத்தின் வீரத்தை வெளிப்படுத்தினர். யாழ்குடா நாடே முற்று முழுதாக போராளிகளால் அரைப்பிறை வடிவ வியூகத்திற்குள் சிக்குண்டு மீட்கப்படும் நிலையில் சமாதானப் பேச்சுக்கான கதவு திறந்ததும், போர் நிறுத்தமும் உண்மையில் இதற்கு ஏன் சிங்கள அரசு இணங்கியது என்பதை இப்போது தமிழினம் நன்றாகப் புரிந்து விட்டது.

சிங்கள அரசு போர் ஓய்வு நிலையைச் சாதகமாகப் பயன்படுத்தி மீண்டும் ஒரு பாரிய போருக்கான தயார்படுத்தலுக்கான கால அவகாசமாகவே இதனைப் பயன்படுத்தத் தொடங்கியிருக்கிறது. மறுபுறம் விடுதலைப் போராட்டத்தைப் பல வடிவங்களில் பலவீனப்படுத்துவதற்கான முயற்சிகள். அத்துடன் தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடர்பாக சர்வதேச சமூகத்திடமிருக்கும் நல்லவிப்பிராயத்தைச் சீர் குலைப்பது. இதற்கான சூழ்ச்சித் திட்டங்களே இப்போது அரங்கேறி வருகின்றன.

ஏனெனில் போர்நிறுத்தம் கைச்சாத்திடப்பட்டு மூன்றாண்டுகள் கடந்து விட்டது. சமாதானப் பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதா? இல்லை! ஐக்கிய தேசிய முன்னணி அரசு ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடாத்தியது. ஏழாவது சுற்றுப் பேச்சுவார்த்தை நடை பெற்றதா? இல்லை. போர்நிறுத்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு சிங்களப் படைகள் ஆக்கிரமித்திருக்கும் தமிழ் மக்களின் குடி நிலப் பரப்புக்களை விட்டு வெளியேறி மீள் குடியமர்வுக்கான ஒரு இசைவான போக்கைக் கடைப்பிடித்தா? இல்லை.

மாறாக வெளிநாடுகளில் இருந்து போர்க் கப்பல்கள், போர் விமானங்கள், யுத்த டாங்கிகள், நவீன இராணுவ தளபாடங்களைக் கொள்வனவு செய்வதிலும், தமது படைப் பலத்தைக் கட்டி எழுப்புவதிலே ஆர்வமாக சிங்கள தேசம் உள்ளது. போதாக்குறைக்கு இந்தியாவுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கை. இதன் மூலம் பலவகையிலும் தமது இராணுவ பலத்தை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைதான் இது.

இதே வேளை தமிழர் தாயகத்தில் தேசவிரோத சக்திகளுக்கு போர் நிறுத்தத்திற்கு மாறாக ஆயுத உதவிகளை வழங்கிவரும் சிறிலங்கா அரசும் படைப் புலனாய்வுப் பிரிவினரும் தேசவிரோத ஆயுதக் கும்பல்களும் இணைந்து தமிழ்த் தேசியத்தை நேசிக்கும் தமிழ் மக்கள் மீதும் போராளிகள் மீதும், தாக்குதல் நடாத்துவது சமாதானத்தின் மீது கொண்டிருந்த எஞ்சிய நம்பிக்கையையும் சிதறடித்து விட்டது எனலாம். இவை ஒருபுறமிருக்க திடீர் என ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தம் தமிழர் தாயகத்தை வெகுவாக அழிவடைய வைத்து விட்டது.



சிங்கள அரசு தமிழர் தாயகத்தில் சுனாமி புனரமைப்புப் பணிகளைப் பாரபட்சமின்றி சரியான முறையில் மேற்கொள்ளாது என்பது சர்வதேச சமூகமே உணர்ந்து விட்டது. எனவேதான் பொதுக் கட்டமைப்பினை நிறுவி தமிழர் தாயகத்தில் புனரமைப்புப் பணிகளை விடுதலைப்புலிகள் முன்னெடுக்க வேண்டும் என வலியுறுத்தினர். சிங்களப் பேரினவாத சக்திகள் பொதுக் கட்டமைப்பு விவகாரத்தை மிகைப்படுத்தி இன முரண்பாடுகளை உருவாக்கி அரசியல் நெருக்கடிகளை ஏற்படுத்திய போதும் சர்வதேச சமூகத்தின் மிகப் பெரியதொரு அழுத்தத்தில் சிக்கியிருந்த ஜனாதிபதி அதனைக் கைச்சாத்திடும் காரியத்தை செய்து முடித்து விட்டார்.

ஆனால் அத்தோடு தமது காரியம் நின்றுவிட்டதாக நினைத்து தற்போது கண் அயர்ந்து தூங்குகிறார் போல் தான் அவரது நடவடிக்கைகள் இருக்கின்றன. ஏனெனில் பொதுக்கட்டமைப்பு கையொப்பமிட்ட பிற்பாடு அதில் விதந்துரைக்கப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்தி விரைவான செயற்பாட்டுடன் மிக வேகமாக நகர்வுகளை மேற்கொள்வதன் மூலமே பாதிக்கப்பட்ட மக்களுக்கான புனர்வாழ்வுப் பணிகளை முன்னெடுக்க முடியும். ஆனால் அவை அசாத்தியமற்றதாகவே இருக்கிறது. கையொப்பமிடப்பட்ட பிரதிகள் பயில் கோப்புகள் மடிபட்டு இருக்கின்றது. இன்னும் பிரதிநிதிகள் நியமிக்கப்படவில்லை.

ஒரு பக்கம் மூன்றாம் தரப்பாக முஸ்லிம் சமூகம் கையொப்பமிட வேண்டும் என முண்டு பிடித்து நிற்கின்றனர். மறுபுறம் வழக்குக்கு மேல் வழக்குகளை பேரினவாத சக்திகள் சிறிலங்கா நீதிமன்றங்களில் தாக்கல் செய்து கொண்டிருக்கின்றனர். மொத்தத்தில் இந்த சுனாமிப் பொதுக்கட்டமைப்பு எந்த வகையிலும் இயங்கக் கூடாது என்பதே பேரினவாதத்தின் குறிக்கோளாக இருக்கின்றது. ஆழிப் பேரலையால் பாதிப்புற்ற இரண்டு கிலோ மீற்றர் கடலோரப் பகுதியைக் கூட புனரமைப்புச் செய்வதற்கு பௌத்தமத மேலாண்மைவாதம் ஆதிக்கம் செலுத்தி நிற்கின்றது.

இவ்வாறான நிலையில் இன்னும் சிங்கள ஆட்சித் தலைமைகளை நம்பிக் கொண்டிருப்பதால் பயனில்லை என்பதை தமிழர் தாயகத்தில் தமிழினம் உணர்ந்து விட்டது. போர் நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட காலகட்டத்தில் தமிழினம் சமாதானத்தின் விருப்பை வெளிப்படுத்திருபிருந்தனர். வடக்கிலும் கிழக்கிலும் பல்கலைக் கழக சமூகங்கள் பொங்கு தமிழ் நிகழ்வை நடாத்தியிருந்தனர். நீண்டதொரு போரைத் தாங்கிய தமிழர் தாயகம் பொருளாதாரம் நலிவுற்று நின்ற நிலையில் தொடர்ச்சியான போர் இன்னும் அவர்களது வாழ்வியலில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

மக்களின் விருப்பையும் உணர்வையும் தேசியத்தலைவரும் ஆழமாகப் புரிந்து கொண்டார். மக்களுக்காகவே விடுதலை. மக்கள் எதை விரும்புகின்றார்கள் அதைப் பெற்றுக் கொடுப்பதே பெரும் தலைவன் விருப்பாகவும் இருந்தது. எனினும் சமாதானப் பேச்சுக்கள், சுனாமிப் பொதுக்கட்டமைப்பு இயங்காமை. தொடர்ச்சியாக தமிழர் தாயகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் தேசவிரோத செயற்பாடுகள் என்பன மக்களை நம்பிக்கை இழக்கச் செய்து விட்டது. சமாதான வழிமுறைகளூடாக நாம் சமாதானத்தை வென்றெடுக்க முடியாது. போராடித்தான் வென்றெடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் தமிழினம் "பொறுத்தது போதும் பொங்கியெழு தலைவா" என இந்த வேண்டுகையை விடுத்துள்ளனர். வடக்கில் அண்மையில் இந்த வேண்டுகை விடுக்கப்பட்ட நிலையில் தற்போது கிழக்கு மக்களும் முழுமூச்சாக இந்த வேண்டுகையை விடுத்துள்னர். அண்மையில் தமிழர் தாயகம் எங்கும் கரும்புலிகள் தினம் உணர்வெழுச்சியுடன் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கரும்புலிகள் மாவீரர் திருவுருவப் படம் தாங்கிய ஊர்தி சிறிலங்கா படையினர் கட்டுப்பாட்டுப் பகுதியிலும் மக்கள் வழிபாட்டுக்காக உலா வந்தது. நீலாவணை தொடக்கம் வாழைச்சேனை வரை ஊர்தி உலா வந்த சமயம் வீதியின் இரு மருங்கிலும் பொது மக்கள், மாணவர்கள் நின்று வணக்கம் செலுத்தினர். ஆங்காங்கே நிறைகுடம் வைத்து தேங்காய் உடைத்து வழிபட்டனர். விடுதலை வரலாற்றில் பல வெற்றிகளை ஈட்டித் தந்த இந்தச் சிரஞ்சீவிகள் பூசிக்கப்பட வேண்டியவர்கள் என்பதை மக்கள் நிறைகுடம் வைத்து தேங்காய் உடைத்து தமது உணர்வுகள் மூலம் வெளிப்படுத்தியுள்ளனர்.

அது மட்டுமன்றி மட்டக்களப்பு மாவட்ட அரசியல்த் துறைப் பொறுப்பாளர் இளந்திரையன் அவர்களிடம் தேசியத் தலைவரிடம் கையளிக்குமாறு பல நூற்றுக்கணக்கான பொது மக்கள் கையொப்பமிட்ட மனுக்களைக் கொடுத்துள்ளனர். போரைத் தொடங்குமாறு கோரும் அந்த மனுக்களில் தெரிவித்திருப்பதாவது:-

........"அமைதி, சமாதானம் என்று கூறிப் பொறுமை காப்பது இன்று மடமையாகும். எனவே "பொறுத்தது போதும் பொங்கி எழுவோம்" எங்கள் விடுதலைப் போராட்டத்தை வெற்றிப் பாதையில் வழி நடத்தி வருபவர் நீங்கள். வரலாறு படைத்த எங்கள் தலைவரே களம் காணவாருங்கள்.

ஈழப் போராட்டத்தின் இறுதிக் கட்டப் போர் தொடங்கட்டும் உலகப் போராட்ட வரலாறுகளின் ஈழவிடுதலைப் போராட்டத்தை சிறப்பாக வெற்றியுடன் வீரத்துடன் முன்னெடுத்து நடாத்தும் எங்கள் மதிப்பிற்கும், அன்பிற்கும் பாத்திரமான தன்மானத் தலைவரே. தமிழ் மக்கள் அணி திரண்டு விட்டார்கள். வாருங்கள் புறப்படுங்கள். உங்களை நம்பியிருக்கும் தமிழினம் போராடத் தயாராகி விட்டது. ஆணையிடுங்கள்....... ஆணையிடுங்கள். பொறுத்தது போதும் பொங்கியெழுங்கள். தமது பொறுமையை பலவீனமாகக் கருதும் பகைவர்களுக்குப் பாடம் புகட்ட வாருங்கள்........" இவ்வாறு வீரம் செறிந்த வைர வரிகளை மனுவில் செதுக்கி தேசியத் தலைவருக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

அதே போன்று அம்பாறை மாவட்ட மக்களும் போரைத் தொடங்கு மாறு தேசியத் தலைவருக்கு வேண்டு கோள்விடுத்துள்ளனர். அம்பாறை மாவட்ட தமிழர் மேம்பாட்டுப் பேரவை, அம்பாறை மாவட்ட கடற்றொழிலாளர் சமாஜம், அம்பாறை மாவட்ட மகளிர் அமைப்பு என்பன இணைந்து இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர். சமாதானத்தை எதிர்பார்த்துக் காத்திருந்த காலம் இனிப் போதும். என இவர்கள் தமது வேண்டு கோளில் வலியுறுத்தியுள்ளனர். இவற்றை உற்று நோக்குகையில் தமிழினம் விடுதலையை வென்றெடுக்க வேண்டும். என்ற உணர்வில் மேலோங்கி நிற்கின்றனர்.

தேசியத் தலைவனின் வழி நடத்தலின் பின் தொடர தமிழினம் தயாராகி விட்டது.ஏனெனில் கிழக்கில் பிரதேச வாதத்தை புகுத்தி தமிழ்த் தேசியத்திற்கு எதிராக எத்தனித்த சதி முயற்சிகள் எல்லாம் தற்போது பலிக்கவில்லை. மக்கள் தேசவிடுதலை உணர்விலும், தேசியத் தலைவனின் பற்றுறுதியிலும் பிணைந்து நிற்கின்றனர்.

இனி இறுதிப் போரைத் தொடங்க வேண்டிய பொறுப்பு தற்போது தமிழினத்தால் தேசியத்தலைவருக்குச் சுமத்தப்பட்டுள்ளது. சிங்கள அரசின் அசைவுகள் எதிர்வரும் நாட்களில் எவ்வாறு அமையப் போகின்றதோ அதிலிருந்துதான் தலைவரின் தீர்மானம் நிச்சயிக்கப்படும் என்பது உறுதி.


**பிரவீனா**



# வாகரை மக்களின் வாழ்வை அழித்த வல்லரக்கன் சுனாமி!

அச்சுதன்

வல்லரக்கன் சுனாமியால் வாகரைப் பிரதேசத்தின் அழிவுகள் ஏராளம் ஏராளம். உயிர் உடமைகள் மற்றும் தொழில்



கள், தொழில்சார் கூடங்கள் யாவும் தரையோடு தரையாகி விட்ட காட்சிகள் மனங்களை மடியவைப்பதுடன் கண்ணீரையும் சொரியவைக்கின்றது.

கடந்த வருடம் சுமத்ரா தீவை அண்டிய கடற்பரப்பில் ஏற்பட்ட நிலநடுக்கத்தை அடுத்து தெற்காசியாவின் 10ற்கு மேற்பட்ட நாடுகளைப் பதம்பார்த்த சுனாமி பேரலை இலங்கைத் தீவையும் சின்னாபின்னமாக்கியது.

இலங்கைத் தீவகத்தில் மோதிய சுனாமிப் பேரலையினால் கிட்டத்தட்ட 40 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்களைத் துடிதுடிக்கக் கொன்றொழித்தது. அத்துடன் பல்லாயிரக்கணக்கான ரூபாய் பெறுமதியான சொத்துக்களைச் சூறையாடிச் சென்றது. இருப்பினும் இப்பேரழிவுகளானது தமிழர் தாயகப் பிரதேசங்களையே பெரிதும் பாதித்தது.

கடந்த 20 வருடகால யுத்தத்தினால் பல ஆயிரக்கணக்கான உயிர்களையும் இலட்சக்கணக்கான உடமைகளையும் இழந்து நின்ற தமிழர் தாயக மக்கள் மீண்டுமொரு யுத்தமாக சுனாமி யுத்தத்தை எதிர் கொண்டனர். கடந்த காலயுத்தத்தினால் நொந்து போயிருந்த வடகிழக்கு வாழ் மக்கள் கடந்த மூன்று ஆண்டுகளாக அமைதிச் சூழலில் வாழ்ந்து கொண்டிருந்த மக்களுக்கு ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் மக்களை மீண்டும் வேதனைக்குள்ளும் தவிப்புக்குள்ளுமாக்கியது.

கடலும் கடல் சார்ந்த பிரதேசமும் நெய்தல் நிலமெனக் கருதப்பட்டு உல்லாசமாய் மக்களைக் களிப்புக்குள்ளாக்கிய கடல், தற்போது கடலை அண்டிய காணிப் பகுதிகள் யாவற்றையும் சுடுகாடாய் மாற்றியது அந்தக் கோரச்சுனாமி. தமிழர் தாயகத்தில் பல்லாயிரக்கணக்கான மக்களின் உயிர்களையும் அவர்களின் சொத்துடமைகளையும் நொடிப்பொழுதில் மென்று விழுங்கி ஏப்பமிட்டது.

சுனாமிப் பேரலையினால் பேரழிவுகளைச் சந்தித்த இலங்கைத் தீவு கூடுதலான பாதிப்புக்களுக்கு முகம் கொடுத்தது தமிழர் தாயகப் பிரதேசமே. அவற்றுள் மட்டக்களப்பு மாவட்டமும் ஒன்றாகும். இம் மாவட்டத்தின் வாகரைப் பிரதேசமே முற்று முழுவதுமாக அழிவுகளைச் சந்தித்த பிரதேசமாகும்.

வாகரைப் பிரதேசமானது மட்டக்களப்பு மாவட்டத்தின் அழகிய வளம் மிக்க பிரதேசமாகும். இது மட்டக்களப்பையும் திருமலையையும் இணைக்கும் ஒரு எல்லைப் பிரதேசமாகத் திகழ்கின்றது. கடந்தகால யுத்தத்தினாலும் இராணுவ ஆக்கிரமிப்பினாலும் பெரும் அழிவுகளைச் சந்தித்த பிரதேசமுமாக இவ் வாகரைப் பிரதேசம் காணப்படுகின்றது.

இங்கு வாழ்கின்ற மக்கள் மீன்பிடி மற்றும் விவசாயம் போன்ற தொழில்களை தங்களது பிரதான ஜீவனோபாயத் தொழிலாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர்.

அத்துடன் அப்பகுதி மக்கள் மிருகங்களை வேட்டையாடுதல், தேன் எடுத்தல், தோட்டங்கள் செய்தல், பிரம்பு,பன் போன்ற சிறு கைத்தொழில்களையும் செய்தும் வருகின்றனர். அத்தோடு பெருந்தோட்டப் பயிரான தென்னந்தோப்புக்களையும் செய்கைபண்ணி தொழில்களை மேற்கொள்கின்றனர்.

வாகரைப் பிரதேச செயலகத்தில் 16 கிராம சேவக பிரிவுகள் உள்ளன. அவற்றில் 13



கிராமங்கள் சுனாமி அலைகளால் அழிவுகளைச் சந்தித்தது.

1995ம் ஆண்டு காலப் பகுதியில் ஏற்பட்ட பாரிய யுத்தம் காரணமாக வாகரைப் பிரதேச மக்கள் சொல்லொண்ணாத் துயரங்களையும், பட்டினிச்சாவையும், வேலையில்லாப் பிரச்சினை, கல்வி கற்க முடியாதநிலை போன்ற பாரிய இழப்புக்களைக் கண்ட மக்கள் அதிலிருந்து மீண்டுவருவதற்கு முன்பே சுனாமி வந்து மீண்டும் அவர்களை கவிழ்த்து விட்டது.

அதன் பயனால் 6 மாதங்களைத் தாண்டியும் மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப முடியாத நிலைக்குள்ளாகி துன்ப துயரங்களை அனுபவித்து வருகின்றனர். இவ்வாறாக அப்பகுதி மக்களிடையே ஈழநாதமூடாக நேரடியாக தொடர்பினை ஏற்படுத்திக் கேட்டறிந்தபோது பின்வரும் கருத்துக்களை பெறமுடிந்தது. அந்த **வகையில் வாகரையைச் சேர்ந்த கண்ணன் என்பவரிடம் கேட்டறிந்த போது:-**



நான் பல வருடங்களாக கடற் தொழிலையே செய்து வருகின்றேன். எனது குடும்பம் இரண்டு பிள்ளைகள் உட்பட நான்குபேரைக் கொண்டது. நான் கடந்த வருடத்தில் 8ம் மாதமளவில் ஒரு புது எஞ்சின் மற்றும் புதுப்படகு ஆகிய இரண்டையும் வாங்கி தொழிலை மேற்கொண்டு வந்தேன். சுனாமிப் பேரலையால் அவை இரண்டும் முற்றுமுழுவதுமாக உடைந்து சேதமானது. அத்துடன் எனது வீடுகூட இருந்த இடமும் இல்லாதளவிற்கு அப்படியே அழிந்து போய் விட்டது. வீட்டுக்குள் அடங்கிய உடமைகள் யாவும் சேதமானது எதையும் மீண்டு எடுக்கவில்லை.

நானும் எனது மனைவியும் எனது இரண்டு பிள்ளைகளும் உடுத்திருந்த துணியோடு மட்டும் தான் ஓடித் தப்பினோம். நாங்கள் எல்லாவற்றையும் இழந்து நிற்கதியாகி நின்ற வேளையில் அரசசார்பற்ற நிறுவனங்களின் பேருதவியினால் தற்காலிக கொட்டில்களும் உலருணவுகள் மற்றும் தளபாடங்கள் சிலவும் கிடைக்கப்பெற்றது.

தற்போது எங்களுக்கென கோறளைப்பற்று வடக்கு அபிவிருத்தி ஒன்றியத்தினால் தற்காலிக வீடுகள் அமைத்துத் தரப்பட்டுள்ளது. இவ் வீடு ஓரளவு போதுமானதாக இருக்கின்றது. சுனாமி அடித்ததற்குப் பின் இன்னும் தொழிலுக்குப் போகவில்லை. அரசாங்கம்கூட ஆரம்பத்தில் கொடுத்த 5000ரூபா கொடுப்பனவுகள் கூட நிறுத்தி விட்டது. தற்போது முத்திரை மட்டும்தான் வழங்கப்பட்டு வருகின்றது. என்றார் கண்ணன் அவர்கள்.

அவரைத் தொடர்ந்து **வாகரையைச் சேர்ந்த த.விஜரெத்தினம் (44) என்பவரை தொடர்பு கொண்டு கேட்ட வேளையில்:-**



எனது வீடு முற்றாக அழிந்து தரைமட்டமானது. வீட்டோடு கூடிய முப்பத்திரெண்டும் அழிந்து போனது. எனக்கு நான்கு பிள்ளைகள். சுனாமி வந்த போது என்னுடைய பிள்ளைகள் மனைவி எல்லாரும் ஓடித் தெய்வாதீனமாக உயிர் தப்பினோம். எனது குடும்பம் கடலை நம்பித்தான் வாழ்ந்து வந்தது. எல்லாவற்றையும் இழந்து நின்ற எங்களுக்கு வெளிநாட்டு, உள்நாட்டு நிறுவனங்கள் பல முன்வந்து இந்த தகரக் கொட்டில்களை நிர்மாணித்துத் தந்துள்ளது.

சுனாமிக்காசு என்ற அடிப்படையில் அரசாங்கத்தினால் இதுவரையில் 4500ரூபாய் காசு இரண்டு தடவைகளில் தந்தனர். அத்துடன் 375 ரூபாய் பெறுமதியான முத்திரையும் வழங்கி 200 ரூபாய் காசும் 175 ரூபாவுக்கு உலர்உணவுப் பொருட்களும் வளங்கப்பட்டு வருகின்றது.

தற்போது எவ்வித தொழிலும் செய்ய முடியாத நிலைக்குள்ளாகி இருக்கின்றோம். ஏனெனில் தொழில் செய்வதற்கான எந்த மூலப் பொருட்களும் இல்லை. அத்துடன் இந்தப்பகுதியில் குடிநீர்ப் பிரச்சினை பெரிய பிரச்சினையாகவுள்ளது. சரியாக குடிக்கவும் முடியாது. சரியாக உடுப்புக்களைக் கழுவவோ, குளிக்கவோ முடியாத நிலையில் கஸ்ரப்படுகின்றோம். கிணறுகள் எல்லாம் உவர் நீராய் உள்ளது. இவ்வாறான பரிதாப நிலையில் இருந்து எவ்வாறு மீளுவது என்பது தான் எங்களது ஆதங்கமாய் உள்ளன என்று கூறினார் அவர்.

**வாகரையை சேர்ந்த திருநாவுக்கரசு(64) இவருடைய ஆதங்கத்தைக் கேட்டபோது:-**



எனக்கு வயது போய் விட்டது. சுனாமியால் எனது மனைவியை இழந்து தனிமரமாகத் தவிக்கின்றேன். எனக்கு மூன்று பிள்ளைகள். அதில் இரண்டு பேர் திருமணம் முடித்துச் சென்றுவிட்டனர். ஒருவன் மட்டும் தான் என்னுடன் இருக்கின்றான். தம்பி இங்க பாருங்க என்னுடைய வீடு இருந்த இடத்தை. இந்த ஒரு துண்டு சுவர்மட்டும்தான் எஞ்சியிருக்கு என்று ஈழநாதம் செய்தியாளர் ஒருவரிடம் காட்டினார். இப்போதுதான் எங்களுக்கான தற்காலிக வீடுகள் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

தம்பி எனக்கு 64 வயதாகி விட்டது. நான் பல யுத்தங்களையும் அழிவுகளையும் கண்டுள்ளேன். ஆனால் இந்த சுனாமி அழிவுகளைப் பார்க்கும்போது மூச்சே நிற்கும் போல் உள்ளது என்றார் அந்த வயதானவர்.

அவருடைய உள்ளக் குமுறலைத் தொடர்ந்து **வாகரையைச் சேர்ந்த விஸ்வநாதன்(68) என்பவரைக் கேட்ட போது:-**



எனக்கு எட்டுப்பிள்ளைகள். அவர்கள் எல்லாரும் கல்யாணம் செய்து விட்டனர். தற்போது நானும் எனது மனைவியும் தான் இருக்கின்றோம். நாங்கள் குடியிருந்த வீடு முற்றிலுமாக சேதமாகி விட்டன. சுனாமியால் எல்லா உடமைகளையும் இழந்து விட்டோம். நாங்கள் இருவரும் வயதானவர்கள்தான் நாங்கள் ஓடித் தப்பிவிட்டோம். உடுத்த உடுப்பு மட்டும்தான் மிஞ்சியது. எல்லாத்தையும் கடல் தண்ணீர் அடித்துச் சென்று விட்டது.

தற்போது இந்தக் கொட்டிலில்தான் இரண்டு பேரும் இருக்கின்றோம். எங்களுக்கான எந்தவித அடிப்படைவசதிகள் எதுவும் இதுவரையில் கிடைக்கவில்லை. பொதுக்கட்டமைப்பு, பொதுக்கட்டமைப்பு என்று கொஞ்ச நாளாக சொல்லி வந்தவங்க அதுவும் இப்போது கையொப்பமாகிவிட்டதாம். அதனால் ஏதும் நன்மைகள் வருமா? என்றுதான் கேள்விக் குறியாக உள்ளது தம்பி.

நான் வயது போனதனால் காது கேட்கமால் போய் விட்டாலும் கண்பார்வையில்லா விட்டாலும் எனக்குக் கொஞ்சம் அனுபவம் இருக்குது. அதென்னன்றால் இந்த சந்திரிகா அரசாங்கம் தமிழனுக்கு எப்பதான் எதைத் தான் சரியாகக் கொடுத்துள்ளது.

இதெல்லாம் எப்பதான் நடக்குமோ தெரியல்ல. நாங்கள் செத்துப்போய் விடுவோம். நீங்கதான் தம்பி எதிர்கால சந்ததி. நீங்களாவது சகலவிதமான உரிமைகளுடன் வாழ வேண்டும். என்பது தான் எனது விருப்பமாகும். என்றார் எந்த வயதான அப்பு.

(தொடரும்.........)




# போர் உலா

**"உலக மகா கவிஞருள் ஒருவரான ஷெல்லி இறக்கும்போது வயது 29. மக்கள் கவிஞன் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் இறக்கும்போது வயது 29. யுகக் கவிஞன் என அழைக்கப்பட்ட பாரதி இறக்கும் போது அவனுக்கு வயது 39. இந்நூலாசிரியன் இறந்த போது இவன் வயது 20 தான்"**

கப்டன் மலரவன் **26**

அடக்கப்படும் மக்களை எதிரி மேலும் அடக்குகையில் தான் எமது போராளிகள் முளைவிட்டுப் பெருகுகின்றார்கள். இதனை எந்த ஆதிக்க சக்திகளும் இறுதிவரை உணர்வதில்லை...... உணரினும் உணராதவராய் நடிப்பர். இது அவர்களது இயல்பு.

இவ்விதம் போராளிகளது உடல்களைச் சின்னாபின்னப் படுத்துவதில் இவர்களுக்கு ஆத்ம திருப்தி ஏற்படுகிறது போலும்.

உடல்களை மூடிவிட்டபின் கிணற்றடியை நோக்கிச் சென்றோம். நிறைய உடைகள் கொடிகளில் சிதறிக்கிடந்தன. பலவற்றில் இரத்தம் கிடப்பது தெளிவாகத் தெரிந்தது. கிணறு பெரிதான சுற்றளவில் கட்டப்பட்டதாகத் தெரிந்தது. கட்டுக்கள் உயரமாகக் கட்டப்படாமல் ஆபத்தானதாக இருந்தன. அதனைக்கடந்து மாந்தோட்டத்தில் நுழைந்தோம். ஏராளமான மாங்காய்கள் சிதறிக்கிடந்தன. சில மரங் கள் முறிந்து கிடந்தன.

"லியோ, இங்கபார், பிவ்ரி எம்ரியள் நிறையக் கிடக்கு!"

"ஓ, உதாலதான் அடிச்சடிச்சு விற்ரோ பண்ணியிருக்கிறான். போல!" கரையோர சிலிப்பர்க் கட்டைகளைச் சுற்றிக் காட்டினேன். அவை 50 கலிபர் சூடுகளிற்கு அரணாக இருந்தமையால் முன்னாற் கிடந்த பற்றைகள் தொட்டந் தொட்டமாய் கருகிக் கிடந்தன. அவ்வடையாளம் நேராக மலைக் காவலரண் வரை சென்றது.

"இங்கபார் ரத்தக் கறை பட்ட உடுப்புகள்!"

"ஓ அதிலையும் கனக்கக் கிடக்கு! ஞாயமாத்தான் செத்தும் காயமும் பட்டிருக்கிறான்கள். ஏலாமத்தான் காட்டுக்குள்ள இறங்கியிருக்கினம்."

ஆங்காங்கே சிதறிக்கிடந்த ரவைகளை ஒன்றாகக் குவித்து வைத்தோம். கைக்குண்டுகள், துப்பாக்கி எறிகணைகள் பெருமளவு ஆங்காங்கே இருந்தன. அவற்றைப் பக்குவப்படுத்திய பின் ஆபத்தான நிலையில் இருந்த குண்டுகளை மெதுவாகத் திரட்டி 'எச்சரிக்கை' என மரத்தில் குறித்து அடியில் குவித்துச் சென்றோம். இவ்வாறு சேர்க்கப்பட்டவற்றில் பாவனைப் பொருட்களும் கிடந்தன.

பகைவனைப் பொறுத்தவரை ஆயுதங்களில் பெருமளவு கவனம் எடுப்பதில்லை. அவன் விட்டு விட்டு ஓடிய இடத்தில் சிறிய இன்ரமீடியம் ரவைகளும், எம் ரவைகளும் மண்ணில் புதைந்து கிடந்தன. அவற்றை சேகரிப்பதில் போராளிகள் சிரமத்தைக் கண்டனர். ஆயினும் நாம் ஒவ்வொரு ரவையாகக் கூட நேரத்தைச் செலவிட்டுக் கிண்டி எடுத்தோம்.

அரிய பொருட்களைப்போல போராளிகள் கவனமாக மண்ணைத் துடைத்து ரவைகளைப் பெறுவதற்காய், இடிந்து கிடந்த தூண்களை மிகக் கஷ்ரப்பட்டு அகற்றித் தேடினோம். நேற்றைய மதியத்தின் பின் உணவற்றிருக்கும் போராளிகள் இரவு முழுவதும் யுத்தத்தை நடாத்திய பின் இன்றும் இவ்வளவு ஆர்வத்துடன் தம் கடமையைத் தொடர்கிறார்கள். இந்தக் கணத்தில் மக்களிடம் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். என்னவெனில், எதிரி எம்மைவிட ஆட்பலத்திலும், ஆயுத பலத்திலும் மிகுந்து நின்று போரை நடாத்துகையில், பெருமளவு நாம் நம்பி இறங்கும் பலம் யாதெனில், அது உளஉறுதியும், கொள்கைப்பற்றும், ஈழமக்களின் மண்ணின்பாற் கொண்ட அன்புமேயாகும்.



இவையே அசைக்க முடியா காவலரணில் பெரும் ஆயுதத்துடன் இருக்கும் எதிரியை, நாம் காப்புத்தளமற்ற வெட்டை வெளிகளூடாக முன்னேறி அழிக்க உதவும் எமது கவச குண்டலங்களாகும். இவற்றை எமது மக்கள் நினைவில் நிறுத்திக் கொள்வது சிறப்பானது. அத்துடன், எதிரியிடமிருந்து கைப்பற்றும் ஒவ்வொரு ஆயுதமுமே நாளை அவனைக் களத்தில் எதிர்க்கின்றது. ஆயுதங்களைக் கைப்பற்றச் சென்று வீரமரணமடைந்த போராளிகளை எண்ணிப்பாருங்கள். எதிரியிடம் மீட்கும் ஒவ்வொரு ரவையும் நாளை எமது அந்நியனின் பாதங்களைக் குறைக்கும். எதிரியிடமிருந்து கைப்பற்றுதலை இயன்றளவு சுறுசுறுப்புடன் நாம் செய்வது இதற்காகவேயாம்.

இவற்றின் மூலம் எம்மை வலுவாக்கி அந்நிய ஆதிக்கத்தை உடைத்து, சுதந்திர ஈழ மலர்விற்காக போராளிகள் கணமும் உழைப்பார்களென்பது நிச்சயம். அந்த மைந்தர்களின் தாகத்தை மக்கள் தீர்க்க வேண்டும். எல்லோராலும் இயலாது விடினும் அதனை மதித்தாவது நடக்கப் பழகிக் கொள்ளல் வேண்டும். இதுவே மாவீரர்களின் ஆசைக்கனவு.

"மாஸ்ரர், வாங்கோ,பெரிய காம்புக்குப் போய்ப் பார்ப்பம்."

அழைத்துச் சென்றேன். பிரதான வீதியினூடாக நடக்கும் போது எனது சிறுவயது எண்ணங்களை நினைத்துப் பார்த்தேன்.

"மாஸ்ரர் இந்த இடங்களை பார்த்தவுடன் எனக்கு முந்திய ஞாபகம் வருகுது"

"ஏன் என்ன நடந்தது?"

" ஒன்றும் நடக்கேல்ல. 83,84 களில் எங்கட வீடு புதுசாக மன்னங்குளத்தில கட்டினனாங்கள். அப்ப முல்லைத்தீவு பஸ் வந்தா சந்தியில நிற்கும். அதில இறங்கினாப் பிறகு நேராக வாற வவுனியா, கொழும்பு பஸ்காரங்கள் ஏத்த மாட்டாங்கள். அதாலை நடந்துதான் வீட்டுக்கு அனேகமாகப் போவம். சில நேரம் லொறி வரும். நடந்து போகேக்கை நானும் அம்மாவும் தான் போனனாங்கள். எங்களுக்கு முன்னாலை இரண்டு பெடியல் சைக்கிளில வர, உதுக்குள்ள இருந்து இரண்டு ஆமி வந்தாங்கள், நாங்கள் அவங்களைக் கடக்கிறதுக்கு இன்னும் 50அடி இருக்கும். சைக்கிளை நிற்பாட்டச் சொல்லாமல் கிட்ட வந்தவுடனே ஒருஉதை ஒன்றை ஓடுறவனுக்கு விட பொத்தென்று விழுந்தான்கள். அதற்குப் பிறகு துவக்கால விளாசித் தள்ளிப் போட்டு குளறக்குளற இழுத்துப் போனாங்கள். நாங்கள் திரும்பிப் பார்க்காமல் ஓட்டம் பிடித்தம்"

"அவங்களுக்கு என்ன நடந்தது?"

"எங்களுக்குத் தெரியாது. ஆரோ சொல்லிச்சினம் காட்டில யானை மிதிச்சதென்று. ஆஸ்பத்திரியில பொடியப் போட்டவங்களென்று, வீட்டுக்காரச் சனமும் ஏன் தாய்மார் கூட, தங்கட பிள்ளையள் என்று நம்பவில்லையாம். பிறகு உடுப்பைப் பார்த்துத் தான்..."

"இராணுவ முகாம் மாங்குளம்" எனும் சிங்கள வாசகம் சீமெந்து சுவரின் மேலாக இப்போ காயத்தோடு காட்சியளித்தது.இதே இடம் தான், முன்பு வெறியர்கள் மக்களைக் கொடுமைப்படுத்திய இடம். சுதந்திரமாக எல்லா நேரமும் திரியவோ, அக்கம், பக்கம் பார்க்கவோ அனுமதியில்லாத அந்தச் சூனியப் பிரதேசம், இன்று சுதந்திரக் காற்றை இதமாகச் சுவாசிக்கின்றது. பிரதான முகாமின் வாசலூடாக இறங்கி கற்கள் இறுக்கிய பாதையில் உள்ளே சென்றோம். ஆக்கிரமிப்பு சின்னங்கள் சிதறி அலங்கோலமாக் கிடந்தன.

முன் கட்டடத்துள் ஏராளமான மேசைகள், கதிரைகள், சொகுசான மெத்தைகளுடன் உடைந்து போய்க் கிடந்தன. அடுத்த அறையில் பெரிய குளிர்சாதனப்பெட்டி பொத்தல்களாகத் தெரிந்தது. ஓடுகளும் சீற்றுகளும் நொருங்கி சின்னாபின்னமாகக் கிடந்தன. அடுத்த அறையில் யாவற்றிலும் ஸ்பிறிங் கட்டில்கள் ஏராளமாக மெத்தைகளுடன் நிறைந்து கிடக்க பலவற்றிலும் உறைந்த குருதித்தடங்களை ஈக்கள் மொய்த்தபடி இருந்தன.

மென்மேலும் பல பொருட்கள் அங்குமிங்குமாய்ச் சிதறிக் கிடந்தன. மிகப் பிரமாண்டமான அறை ஒன்றில் நுழைந்தோம். அது முற்றாக உணவுப் பொருட்களால் நிறைந்து கிடந்தது. சீஸ்ரீன்கள், ரின்பால், மீன்ரின்கள், லக்ஸ்பிறே, மா, அரிசி, தேயிலை, இவ்வாறு ஏராளமான பண்டங்கள் சேமிக்கப்பட்டிருந்தன. போராளிகளது வாழ்வையும் இராணுவச் சொகுசையும் ஒருகணம் ஒப்பிட்டுப் பார்த்தேன். காடுகளிலும் கல்முட்களிலும் நடந்து திரியும் அஞ்சாத இளம் புலிகள் எங்கே? சொகுசு வாழ்வில் சுகம் காணும் அந்நியர்கள் எங்கே?

தொடரும்.........

# விழுதுகள்..... (11)

**லெப்.கேணல் சாண்டோ / இளவள்ளல் முத்துலிங்கம் அமிர்தலிங்கம் கழுவாஞ்சிகுடி மட்டக்களப்பு**

மட்டக்களப்பு– கொழும்பு பிரதான வீதி, எதிரி இராணுவ அணியொன்று எம்மால் வழிமறித்துத்தாக்கப்படுகின்றது. ஆரம்பத்தில் திகைத்த எதிரி சுதாகரித்துக் கொள்ள சண்டை வலுவடைகின்றது. தனது ரீ. 56–2 ஐ எதிரியை நோக்கி இயக்கியபடி அவன் விரைந்து முன்னேறிக்கொண்டிருந்தான். சீறி வரும் ரவைகளையோ, வீழ்ந்து வெடிக்கும் எறிகுண்டுகளையோ அவன் அதிகம் லட்சியம் செய்ததாகத் தெரியவில்லை. வீழ்த்தப்பட்ட எதிரியின் சாவை மேலும் இரு ரவைகளால் உறுதிப்படுத்தியவனை, ஒரு திசையில் இருந்து பலகுரல்கள் அழைக்க, தனது முதுகில் தொங்கிக் கொண்டிருந்த அந்த கனத்த தோள் பையைச் சரிசெய்தவாறு அங்கு விரைகின்றான்.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களையும், விழுப்புண்ணடைந்த போராளிகளையும், சுமந்து கொண்டு தளம் திருப்புகிறோம். சீரற்ற கானகப் பாதைகள் வழியாக, சிற்றாறுகள் ஊடாக, படர்மலைகள் மேலாகப் பயணம் தொடர்கிறது. காவுப்படுக்கையொன்றுக்குத் தோள் கொடுத்து அப்போராளியை மாற்றி விட்டவன். அருகில் வந்த போராளிகளைப்பு மிகுதியால் நடக்கச் சிரமப்படுவது கண்டு அவனது ஆயுதத்தையும் தான் வாங்கிக் கொள்கிறான். கனமான தோள்பை, இரு ஆயுதங்கள், காவுப்படுக்கை, ஆனாலும் அவன் நடையில் எந்தத் தளர்வும் காணமுடியவில்லை.

'சாண்டோ' இவனை நினைக்கும் போதெல்லாம் இவ்வாறான எண்ணற்ற களக்காட்சிகளே எம்முன் விரியும்.

மிக அமைதியான சுபாவமும், நல்லியல்புகளும் கொண்ட உயர்வகுப்பு மாணவனான அமுதனின் சிந்தனைகளும் உயர்வானவையாகவே இருந்தன. தேசவிடுதலையின் தேவையுணர்ந்து கொண்டவன். 1989 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தன்னைத் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைத்துக் கொள்கிறான். பயிற்சி முடித்து வெளியேறியவனுக்கு உடனடியாக களம் காணும் வாய்ப்புக் கிடைக்கின்றது.

அம்பாறை மாவட்டத்தில் இருந்து இந்திய இராணுவம் வெளியேற ஆரம்பித்த நேரம். அப்பகுதியிலிருந்த இரு பாரிய தேசத்துரோகிகளின் முகாம்கள் எம்மால் தகர்த்தெறியப்படுகின்றன. இந்த முதற் சண்டையே அவனையொரு போர்க்குணம் மிக்க போராளியாக இனங்காட்டியது. தொடர்ந்து வந்த சண்டைகள் இதனை மேலும் உறுதிப்படுத்துபவையாக இருந்தன. இயல்பாகவே அவன் மிக அமைதியானவன். இரக்க சுபாவம் கொண்டவன். ஆனால் களங்களில் மட்டும் அவன் இவற்றிற்கு நேரெதிராகவே இருந்தான்.

நெடுந்தூர வேவுப் பயிற்சியொன்று ஆரம்பிக்கப்பட்ட போது அவனும் அதில் இணைத்துக் கொள்ளப்படுகிறான். அவனது தாங்குமாற்றல், பொறுமை, போர்க்குணம் என்பன இப்பயிற்சி நெறியைத் திறம்படச் செய்ய அவனுக்குப் பெரிதும் உதவின. பின் நாட்களில் அவனது வேவுப்பணி தமிழீழ எல்லைகளுக்கப்பாலும் விரிவடைந்து பயன்மிக்க விளைவுகளைப் பெற்றுத்தந்தது.

வேவு, சண்டை எனத் தன்னை நன்கு நிலைப்படுத்திக் கொண்டிருந்தவனுக்கு எதிர்பாராத இடமொன்றில் இருந்து அழைப்பு வருகிறது. 'சாண்டோவை மெடிசின் படிக்கப் போகட்டாம்' இது அவனுக்கு மகிழ்ச்சியைத் தரக்கூடியதொரு விடயம் அல்லவாயினும், விருப்பு, வெறுப்புக்களுக்கு அப்பாற்பட்டு கட்டளையை நிறைவேற்றும் உயர் இராணுவ ஒழுக்கத்தை அவன் காட்டினான். உத்தரவு ~ நிறைவேற்றம் என்ற வகையில் ஆரம்பத்தில் இது அமைந்திருந்தாலும் பின் நாட்களில் அதற்குள் அவன் ஆழ்ந்து போனான். கள மருத்துவப் பயிற்சியை நிறைவு செய்தவனை, தளபதி சந்தித்து கதைத்த போது 'எல்லாச் சண்டைக்கும் என்னை விடோணும்' என்பது மட்டுமே அவனது ஒரே கோரிக்கையாக இருந்தது.

*மு.மனோகர்*
*(கரும்பறவை பசீர் காக்கா)*

பொதுவாக எமது போராட்ட வாழ்வு, கரடுமுரடானது, துன்பங்கள் நிறைந்தது. அதிலும் தென்தமிழீழப் போராட்ட வாழ்வென்பது சராசரி மனித தாங்குமாற்றலுக்கு பல்வேறு வழிகளிலும் சவால் விடுவது. இதில் குறிப்பிடத்தக்க ஒன்று மருத்துவம்.

விழுப்புண் அடையும் போராளிகளை காவுப் படுக்கையில் பாதுகாப்பான இடம் வரை காவிவர பல மணிகள் ஏன் நாட்கள் கூட ஆகலாம். உரிய மருந்துகள், உபகரணங்கள் இன்றி 'புதிய வழிமுறைகள்' புகுத்த வேண்டி வரலாம். பாரிய இராணுவ நடவடிக்கைகளின் போது மருத்துவமனையே காவுப்படுக்கைகளில் நெடுந்தொலைவு நகரவேண்டி வரலாம், சுற்றிவளைத்துத் தாக்கப்படலாம். உணவு குடிநீரின்றி இடர்ப்படலாம் இப்படி இன்னும் பல.

சராசரி மருத்துவப் போராளி ஒருவரிடம் எதிர்பார்க்கப்படும், துறை சார் அறிவாற்றலுக்கு அப்பாலும் இங்கு செயற்படும் மருத்துவப் போராளியின் கொள்ளளவு விரிவடைய வேண்டிய தேவை இங்கு தவிர்க்க முடியாததாகின்றது.

களமருத்துவப் பணியை மிகுந்த ஈடுபாட்டுடன் செய்யத் தொடங்கினான். முதுகில் கனத்த தோள்பை, கையில் அவனது அதே ரீ. 56 –2, மார்பில் நான்கு ரவைக் கூடுகள், எறிகுண்டுகள், ஒரு கூரிய கத்தி (இதற்குத் தனியே களத்தில் நிறைய அனுபவமுண்டு). நீண்ட தொலைவு நடையில் (சமயங்களில் ஓட்டம்) இவை பலருக்கும் சோர்வு தரும் சுமைகள், அவனுக்கோ சுகமான சுமைகள், 'இவனுக்கென்ன பணிஸ்மென்ரா' பலர் பல சந்தர்ப்பங்களில் கேட்டிருக்கிறார்கள். இவற்றிற்கெல்லாம். அவன் தந்த விளக்கம் அந்தச் சிக்கனமான புன்னகையே.

கொடுக்கப்பட்ட எந்த வேலையையும், நேர்த்தியாகவும், அர்ப்பணிப்புத் தன்மையுடனும் திறம்படச் செய்யும் தன்மை கொண்ட அவன் விரைவிலே களமருத்துவ பொறுப்பாளனாகப் பணிநிலைப்படுத்தப்படுகிறான். தோள்பை கைமாறியதேயன்றி ஒவ்வொரு சண்டையிலும் அவனது துப்பாக்கி இயங்கிக் கொண்டேயிருந்தது. எதிரியை அவன் ரவைகள் துளைத்தது. எதிரியின் ரவைகளும் அவ்வப் போது அவன் உடலில் ஆழப்பதியவே செய்தன.

1993 காலப்பகுதி தவளை நடவடிக்கைக்காக பெருந்தொகையான போராளிகள் வடபுலப் போர்முனைக்குச் சென்றுவிட்டிருந்த நேரம். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திய சிறிலங்காப்படைத்தரப்பு 'சுமண' என்ற பெயரில் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்து எம் தளப்பிரதேசம் எங்கும் அதனை விரிவுபடுத்தியது.

(தொடரும்.....)


# மட்டக்களப்பு மாவட்ட இடப் பெயர் ஆய்வுகள்

**மட்டக்களப்பு மாவட்ட இடப் பெயர் ஆய்வுக்கு முன்னர் தெரிவிக்கப்பட வேண்டிய ஒரு சில விடயங்கள் வருமாறு:-**

01.1 வடக்கே வெருகல் ஆற்றினையும், தெற்கே பொத்துவில் பாணமை வரையிலான எல்லையினையும், கிழக்கே வங்காள விரிகுடாவினையும், மேற்கே பொலநறுவை வரையிலான அடர் காடுகளையும் கொண்ட பகுதியே மட்டக்களப்பு என்னும் பதத்தினுள் வசதி கருதி உள்ளடக்கப்படுகின்றது.

01-2 மட்டக்களப்பு மாவட்டம் தேர்தல் தொகுதிகளாக முறையே கல்குடாத் தொகுதி, மட்டக்களப்புத் தொகுதி, பட்டிருப்புத் தொகுதி என் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

01-3 மட்டக்களப்பு மாவட்ட பிரதேச



செயலாளர் பிரிவுகள் நிர்வாகச் சிக்கல் அரசியல் தாக்கம் போன்ற பல்வேறுபட்ட காரணிகளால் பதினான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளைக் கொண்டு காணப்படுகின்றது. அவை வருமாறு:-

01. கோறளைப்பற்று வடக்கு - வாகரை
02. ஓட்டமாவடி - முஸ்லிம்
03. ஓட்டமாவடி மத்தி - முஸ்லிம்
04. கோறளைப்பற்று - வாழைச்சேனை
05. கோறளைப்பற்று தெற்கு - கிரான்
06. ஏறாவூர்ப்பற்று (தமிழ்) - செங்கலடி
07. ஏறாவூர்ப்பற்று (முஸ்லிம்) - ஏறாவூர் நகர்
08. மண்முனை வடக்கு - மட்டக்களப்பு
09. காத்தான்குடி
10. மண்முனைப்பற்று - ஆரையம்பதி
11. மண்முனை தென் எருவில்பற்று - களுவாஞ்சிகுடி
12. போரதீவுப்பற்று - வெல்லாவெளி
13. மண்முனை மேற்கு - வவுணதீவு
14. மண்முனை தென் மேற்கு - பட்டிப்பளை

01-4 இடப்பெயர் ஆய்வுகள் என்னும் போது கிடைக்கப்பெற்ற தரவுகளைக் கொண்டே ஆய்வு செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது. இதன் படி கிடைக்கப்பெற்ற தகவல்கள் வருமாறு:-

01. மட்டக்களப்பு மான்மியம் - வித்துவான் எவ்.வை.சீ.நடராசா
02. மட்டக்களப்பு தமிழகம் - வித்துவான் வீ. சி.கந்தையா
03. இலங்கையின் 50வது ஆண்டு சுதந்திர தின சிறப்பு மலராக வடக்குக் கிழக்கு மாகாண சபை வெளியிட்ட மலரில் திரு.ம.சற்குணம் எழுதிய இடப்பெயர் வரலாறு மட்டக்களப்பு என்னும் கட்டுரை.
04. மட்டக்களப்பு சைவக் கோயில்கள் - வித்துவான் வீ.சி.கந்தையா
05. மட்டக்களப்பு தமிழகத்தில் இந்துப் பண்பாடு - 2வது உலக இந்து மகாநாடு மட்டக்களப்பு பிரதேச கிளையின் வெளியீடு.
06. மட்டக்களப்பு குகன் குல முக்குகர் வரலாறு - திரு ஞா.சிவசண்முகம்
07. மட்டு நகர் ஸ்ரீ மாமாங்கப் பிள்ளையார் ஆலய வரலாறு - த.நாகையா ஆசிரியர்
08. மட்டக்களப்பு நாட்டாரியல் - திரு.வ.சிவசுப்பிரமணியம்
09. தமிழர் வரலாறும், இலங்கை இடப்பெயர் வரலாறும் - கதிர் தணிகாசலம்
10. கோறளைப்பற்று (வாழைச்சேனை) பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் முத்தமிழ் விழா மலராகிய இளம்பரிதி ஆண்டு 2001/2003.
11. மண்முனை மேற்கு (வவுணதீவு) - பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் முத்தமிழ் விழா மலராகிய அகணி ஆண்டு 2003.
12. மண்முனைப் பற்று (ஆரையம்பதி) - பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் முத்தமிழ் விழா சிறப்பு மலர் 1998.
13. ஏறாவூர்ப் பற்று (செங்கலடி) - பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் முத்தமிழ் விழா மலராகிய நானிலம் ஆண்டு 1997.
14. மண்முனை வடக்கு (மட்டக்களப்பு) - பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் முத்தமிழ் விழா சிறப்பு மலர் 1994.
15. போரதீவுப்பற்று (வெல்லாவெளி) - பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் முத்தமிழ் விழா மலராகிய மருதம் 1998.
16. நேரடித் தகவல்கள்
: திரு க.மகேஸ்வரலிங்கம்
: வாழைச்சேனை பிரதேச செயலகஉத்தியோகஸ்த்தர்.

01-5 இடப்பெயர்களின் தோற்றம் பற்றி எடுத்து நோக்கும் போது மனித இனம் நாடோடி வாழ்க்கையிலிருந்து நிலையாக ஓரிடத்தில் வாழத் தலைப்பட்ட காலத்தே ஊர்ப் பெயர்கள் தோற்றம் பெற்று இருக்க வேண்டும். ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊரை வேறுபடுத்திக் காட்ட இடப்பெயர்களை அமைத்துக் கொண்டனர் .இடப்பெயர்கள் இட வரலாற்றின் காலப் பொட்டகம். பழமையின் எச்சங்கள், மனித வரலாற்றினையும், பண்பாட்டினையும் விளக்குவன. இதன்படி மட்டக்களப்பு மாவட்ட இடப்பெயர்களை எடுத்து நோக்கும் போது மட்டக்களப்பு சரித்திரத்தின் பின்னணியுடன் கூடிய வரலாற்று சம்பவத்தை அறியாமல் பாதுகாப்பனவாய் அமைந்திருப்பதை அறிந்து கொள்ளமுடியும்.

01-6 மட்டக்களப்பு மாவட்ட இடப்பெயர்கள் பெரும்பாலும் இறுதியாக ஊர், குடி, கேணி, முனை, குடா, காடு, தீவு, துறை, குளம், வெளி, களி, சோலை, சேனை, மடு, ஓடை, மலை, காமம், கமம் என்பனவற்றினைக் கொண்டு காணப்படுவது குறிப்பிடத்தக்கது.



01-7 இடப்பெயர் ஆய்வில் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுகளில் கிடைக்கப் பெற்ற ஊர்களின் தரவுகளே ஆய்வுக்குட்படுத்தப் படுகின்றது. கிடைக்கப் பெறாத ஊர்ப்பெயர் ஆய்வுகள் ஆய்வு செய்வது எதிர்காலத்தில் நன்மை தரும் என்பது நம்பிக்கை.

01-8 ஒவ்வொரு பிரதேச செயலகங்களும், பற்று என்னும் அடைமொழி கொண்டு அழைக்கப்படும். இங்கு பற்று என்பது நாகரீகமடைந்த மக்கள் ஊரமைத்து வாழும் பகுதிக்கு வழக்கில் உள்ள பெயர். மேலும் பற்று என்பது ஆட்சியல் தொடர்பான நிர்வாகப் பிரிவிற்குரிய இடம் எனவும் கருதப்படுகின்றது.

02. கோறளைப்பற்று வடக்கு - வாகரைப் பிரதேச செயலக இடப்பெயர்கள்:-

### 02.1 வட்டவான்:-

சிறு தாழ்ந்த நிலப்பரப்பில் (வயலுக்கு அருகில்) நீரைத் தேக்கி வைத்து வயலுக்கு (வட்டை) தேவைக்கேற்ப நீரைச் செலுத்துவதும், நீர் வயலில் கூடினால் நீரை அகற்றுவதற்கு ஏற்ற இடத்தினை முன்னோர்கள் வான் என அழைத்தனர். எனவே வட்டை, வான் ஆகிய இரு சொற்கள் சேர்ந்து வட்டவான் என அழைக்கப்பட்டன.

### 02.2 காயான்கேணி:-

காயாண் என்பது ஒரு வகைக் செடி. இச்செடிகளும், கேணிகளும் காணப்பட்ட இடம் காயான்கேணி என அழைக்கப்பட்டது.

### 02.3 கண்டலடி:-

கண்டல் தாவரங்களும், நீர் நிலைகளும் காணப்பட்டமையினால் கண்டலடி என அழைக்கப்பட்டது.

### 02.4 மாங்கேணி:-

மாமரங்களும், கேணிகளும் காணப்பட்ட இடம் மாங்கேணி என அழைக்கப்பட்டது.

மேலும், மான்களும், கேணியும் காணப்பட்ட இடம் மாங்கேணி என அழைக்கப்பட்டது.

### 02.5 கிருமிச்சை:-

மாடுகள் வளர்க்கப்பட்டு பால் பொருட்கள் தயார் செய்யப்படும் இடம்.

### 02.6 மதுரங்கேணிக்குளம்:-

மருத மரங்களும், சிறு கேணிகளும், குளங்களும் காணப்பட்ட இடம். மருதங்கேணிக் குளம் என்பது மதுரங்கேணிக்குளம் என அழைக்கப்படுகின்றது.

### 02.7 பால்சேனை:-

மாட்டுப்பட்டிகளும் சேனைப் பயிர்செய்கையும் மேற்க்கொள்ளப்பட்ட இடம்.

### 02.8 கட்டுமுறிப்பு:-

வரப்பிட்டு முண்டு கொடுத்து கட்டிய இடத்தில் முறிப்பு கண்ட இடம்.

### 02.9 பனிச்சம்கேணி:-

பனிச்சைமரங்களும், கேணிகளும் காணப்பட்டமையினால் இப்பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது.

**கே.எஸ்.ஆர்.சிவகுமார்**
**கலாசார உத்தியோகஸ்த்தர்**
**(கோறளைப்பற்று)**

### 02.10 வாகரை:-

வடக்கின் கரை வாகரை ஆகியது என்பர் அதாவது மட்டக்களப்பு மாநிலத்தின் வட் எல்லையாக வாகரை காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

03. ஓட்டமாவடி பிரதேச செயலக இடப் பெயர் ஆய்வுகள்.

ஓட்டமாவடி பிரதேச செயலகம் இரண்டு பிரிவுகளை உடையது அவை:-

01. ஓட்ட மாவடி முஸ்லிம் பிரிவு
02. ஓட்ட மாவடி மத்தி

என்பனவாகும். இப்பிரிவில் உள்ள கிராம சேவையாளர் பிரிவுகளின் இடப்பெயர் ஆய்வினை கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில் வருமாறு:-

*தொடரும்.............*




## சுனாமிக் கட்டமைப்பு செத்த பிணம்தானா?



அம்மணிக்கு:-

பொதுக் கட்டமைப்பு கைச்சாத்திடப்பட்டு இரண்டு வாரங்களைக் கடந்து விட்டது. இன்னும் இழுத்தடிப்பு: உருப்படியான முன்னேற்றம் எதுவுமேயில்லை. கட்டமைப்பை யார் எதிர்த்தாலும் ஏற்படுத்தியே தீருவேன். கண்டி மாநாட்டில் நீங்கள் ஒரு கலக்குக் கலக்கி விட்டீர்கள். மூக்கில் கை வைத்தவர்களும், காலம் கடந்து ஞானம் பிறந்தது. இப்போதுதான் யதார்த்தத்தை உணர்ந்து விட்டார்.

கடைசிக் காலம் ஆட்சியிலிருந்து வீட்டுக்குப் போவதற்கான காலகட்டத்தில் தமிழினத்துக்கு நல்லதையாவது செய்து விட்டுப் போகட்டும் என்றெல்லாம் எத்தனை எத்தனை வார்த்தைகள், விமர்சனங்கள் தமிழ் மக்களும் முன்பு ஒரு தடவை உங்களில் ஏமாந்தது. இன்னும் மாறவில்லை. ஏனெனில் வெண்புறாவாக கையசைத்து ஆட்சியில் ஏறிவிடுவதற்காக ஊட்டிய ஆசை வார்த்தைகள் எல்லாம் இப்போதும் நினைவுக்கு வருகின்றது.

அதுபோன்றதுதான் இதுவும் என நினைப்பதற்கு இடையில் உங்கள் கூட்டு முகாமில் இருந்து சோமவன்ச பிரியாவிடை பெற்றுச் சென்றார். ஆகட்டும் இனித்தான் அம்மணி நல்லது செய்யப் போகிறார் போல் என சவுதேச சமூகத்தை நினைக்கத் தூண்டுமளவிற்கு ஏதோ ஒரு வழியாகப் பொதுக்கட்டமைப்பு கைச்சாத்தாகி விட்டது.

ஏதோ ஒரு வழியில் சர்வதேச சமூகத்தின் அழுத்தங்களிலிருந்து தப்பமுடியாது தலையைக் கொடுத்துக் கொண்டிருந்த நீங்கள் கட்டமைப்பில் ஒரு தரப்பாக நின்று காரியத்தைச் சாதித்து விட்டோம் என தூக்கிக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால் சுனாமிப் பொதுக்கட்டமைப்புக்கு இன்னும் ஆட்களை நியமித்து இயங்கச் செய்வதற்குரிய நடவடிக்கைகள் எதுவும் செய்யாதது நகைப்புக்கிடமாகி விட்டது.

பொதுக்கட்டமைப்பு விவகாரத்தில் தற்போது முஸ்லிம் சமூகம் பலத்த எதிர்ப்பினைக் காட்டி நிற்கின்றது. அம்பாறை மாவட்டத்தில் கதவடைப்பு, எதிர்ப்புப் போராட்டங்கள் தொடர்கதையாகிச் செல்கின்றன. அவர்களின் பிணக்கினைத் தீர்த்துக் கட்டமைப்பை இயங்கச் செய்வதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கையினை எடுத்திருக்கலாம். ஆனால் எதுவுமே நடைபெறவில்லை. உங்களின் ஜனாதிபதி மாளிகை வாழ்வு முடிவுக்கு வந்துவிட்டதாக ஐ.தே.கட்சி தெரிவிக்கிறது.

அப்படியானால் பண்டாரநாயக்கா பரம்பரைதான் சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவத்தை வகிக்க வேண்டும் என்ற குறிக்கோளில் அனுரா இப்போது அடுத்த ஜனாதிபதியாகும் ஆரவாரத்திலிருக்கிறார். அப்படி வருவதற்கு சிறுபான்மையின மக்களின் வாக்கு அறுவடை அவசியமல்லவா, அதுதான் இப்போது முஸ்லிம்களைப் புண்படுத்தினால் எதிர்காலத்தில் அனுராவுக்கு அனுகூலத்தை ஏற்படுத்தாது. இவை கருதித்தான் இப்போது கைச்சாத்திடப்பட்ட பொதுக்கட்டமைப்பும் இழுத்தடிக்கப்படுகின்றது என. எங்கள் தமிழ் மக்கள் இப்படித்தான் கூறுகிறார்கள்.

நீங்கள் சுயலாப அரசியலுக்காக ஆழிப்பேரலைக் கட்டமைப்பை இயங்கச் செய்யாது இழுத்தடிப்பது வேதனைக்குரியது. கடந்த காலத்திலும் தமிழினம் உங்கள் ஆட்சியின் போது வேதனை, சோதனை பட்ட துன்பங்கள் பரிதவிப்புக்கள் சொல்லிலடங்காது. இன்னொரு மடலில் இதை விரிவாக எழுதுகின்றேன். இப்போது கட்டமைப்பு செத்த பிணமாகத்தான் கிடக்கிறது. எப்போது இயங்கச் செய்வீர்கள். உங்கள் விரைவு மிக அவசியம் அல்லாதுவிடின் கடந்தகால ஏமாற்றமே தொடர்கதையாகுமோ?

இங்ஙனம்
ஈழமகன்.

# சீர்கெடும் இளைஞர் சமுதாயம்

"ஒழுக்கம் விழுப்பம் தரலால்; ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" (திருவள்ளுவர்)

"இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள்" என்னும் வாக்கு பொய்த்து விடுமோ என்கின்ற நிலை தோன்றிவிட்டது. இறைவன் உலகத்தில் இரண்டு இனங்களைப் படைத்திருக்கிறான். அவை ஆணினம், பெண்ணினம் என்பவையாகும். இந்த இரண்டு இனங்களும் தங்களிடையே வேறுபாடில்லாமல் நடந்து கொள்வதுடன், ஒரு இனத்தின் மீது மற்றைய இனம் மதிப்பும் மரியாதையுடனும் நடந்து கொள்ள வேண்டும். ஆனால் இன்றைய நாட்டில் நடப்பது என்ன?

"பெண்ணென்றால் பேயும் இரங்கும்" என்று சொல்லி வைத்தார்கள். அன்றைய ஆன்றோர்கள். ஆனால் இன்றைய இளைஞர்கள் பெண்களை ஒரு போதைப் பொருளாகப் பாவனை செய்து காமப் பார்வை பார்த்து தேவையற்ற வீண் வார்த்தைகளால் அசிங்கப்படுத்துகின்றனர். இதையெல்லாம் தட்டிக் கேட்க யாரும் முன் வருவதில்லை. நீதி, நியாயம் எல்லாம் என்றோ தொலைந்து விட்டது. தற்போது நாட்டில் அநீதிதான் நடமாடித் திரிகின்றது.

இன்றைய சூழ்நிலையில் ஒரு இளம் பெண் தனியாகப் பிரயாணம் செய்ய முடியாத நிலை உருவாகிக் கொண்டே வருகின்றது. பாமர யுவதிகள் முதல் படித்த யுவதிகள் வரை தினம் தினம் ஆணாதிக்க இம்சைக்கு உள்ளாகின்றனர்.

பஸ்ஸில் பிரயாணம் செய்யும் ஒரு யுவதியை தங்களது இம்சைக்குட்படுத்துவது மட்டுமல்லாமல், அதனை தட்டிக் கேட்டால் எங்களுக்கு பேச்சு சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் இருக்கின்றது என்று தத்துவம் வேறு பேசி தட்டிக் கழிக்கின்றனர். இளைஞர்கள் மத்தியில் தற்போது மதுப் பழக்கம் அதிகரித்து செல்வதால் அவர்கள் செல்லும் பாதை நெறி பிறழ்ந்து காணப்படுகின்றது.

இளைஞர்களின் தாயும் ஒரு பெண்தான். சகோதரியும் பெண்தான், வருங்கால மனைவியும் ஒரு பெண்தான் என்பதை ஏன் இந்த இளைஞர்கள் நினைத்துப் பார்ப்பதில்லை. இது அவர்களின் சதியா? அல்லது காலத்தின் விதியா? என்பது புரியவில்லை. பெண்ணென்பவள் தெய்வத்திற்குச் சமமாக மதிக்கப்படுபவள். அவளை இம்சைப்படுத்துவது மிகவும் மன்னிக்க முடியாத பாரிய குற்றமாகும்.

உத்தியோகம் பார்க்கச் செல்லும் ஆண்களில் சிலர் தங்களை மிஞ்சுவதற்கு யாரும் இல்லை என்ற நினைவுடன் பஸ்ஸில் ஏறி யுவதிகளை நெருக்கி உடலில் உரசுவதும் தேவையற்ற வீண் வார்த்தைகளையும் பேசுகின்றனர். மதிப்பு மிக்க மனிதர்களாகப் பார்வைக்குத் தெரிந்தால் மட்டும் போதாது. பெண்களுக்கு மதிப்பும் மரியாதையும் கொடுக்கத் தெரிந்திருக்க வேண்டும்.

பாடசாலை செல்லும் மாணவர்களையும் அவர்களது இம்சை விட்டு வைப்பதில்லை. "ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்" என்பது போல் ஆகாமல் ஆண்கள் தங்களைத் திருத்திக் கொள்வதுடன் மற்றவர் மனம் புண்படாத வகையிலும் நமது சுதந்திரம் மற்றவர் சுதந்திரத்தைப் பாதிக்காத வகையிலும் நடந்து கொள்ள வேண்டும்.

இளைஞர் சமுதாயமே பெண்கள் மென்மையானவர்கள் அவர்களது உணர்வுகளுக்கு மதிப்பளித்து, பெண்களைத் தெய்வமாக நினைத்துச் செயற்பட்டால் வீண் பிரச்சினைகள் தோன்றுவதற்கு வாய்ப்பிருக்காது. யாருக்கும் எந்த விதத்தில் மதிப்புக் கொடுக்க வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

"ஒன்று பட்டால் உண்டு வாழ்வு"

**எம்.தேவிகா**
**சிகண்டியூர்.**

# மகளிர் மகுடம்



## குடும்பத்தரசிகளே

# வேண்டாம் பகல் நித்திரை

இயந்திரமாகச் சுற்றிச் சுழலும் இன்றைய காலகட்டத்தில் பல வகையான வேலைப் பழுக்களைச் சுமந்து ஓய்வில்லாமல் இயங்கிக் கொண்டிருக்கும் மனிதர்களுக்கு ஓய்வு என்பது அவசியமானது தான். ஆனாலும் ஓய்வு எடுப்பதற்கே நேரம் இல்லாததன் காரணமாகத் தூக்கத்தைத் தவிர மனிதன் ஓய்வாக இருப்பது என்று கூறும் போது அது மிகவும் குறைவாகவேயுள்ளது.

ஆனாலும் இன்று சில சகோதரிகள் பகலில் தூங்குவது கூடாது என்ற கருத்தும் உடையவர்களாக உள்ளார்கள். இவ்வாறு ஒரு சிலர் பகலில் நித்திரை செய்வது ஒருவருடைய உடலைப் பருமனாக்கும் என்றும், இன்னும் சில பெண்கள் பகலில் நித்திரை செய்வது உடல் ஆரோக்கியத்திற்கு நல்லது என்றும் கூறும் இதே வேளை, இவை இரண்டையும் ஏற்றுக் கொள்ளும் சிலரும் இருக்கத்தான் செய்கின்றார்கள்.

ஆனாலும் ஒருவருடைய ஆரோக்கிய நிலை, வேலை நேரம், வயது போன்றவைகளை வைத்து அவருக்குப் பகல் தூக்கம் அவசியம் தானா? எனத் தீர்மானிக்கலாம். இதனடிப்படையில் இளவயதினருக்குப் பகல் தூக்கம் அவசியமானதாகக் கொள்ளப்படாது. இவர்கள் பகலில் தூங்கினால் அவர்களுக்குச் சோர்வு அசமந்தமான நிலையும் ஏற்பட வாய்ப்பேற்படுகின்றது.


குடும்பத் தலைவிகளைப் பொறுத்த வரையில் இதுவும் தவிர்க்கப்பட வேண்டியதாகும். இவ்வாறாக உறங்கும் பழக்கமுடைய சகோதரிகள் பகல் வேளைகளில் தமது வீட்டு வேலைகளை முடித்த பின்னர் நேரம் மீதமாக இருந்தால் உங்களுக்குப் பலன் அளிக்கக்கூடிய வேலைகளில் ஈடுபடலாம். உதாரணமாக பயனுள்ள புத்தகங்களை வாசித்தல், தையலில் ஈடுபடுவது, பூந்தோட்டம் அமைத்தல் போன்ற வேலைகளில் ஈடுபட்டு நேரத்தை நல்ல முறையில் செலவிடலாம். ஆனாலும் இரவில் தாமதமாகித் தூங்குபவர்கள் அதிகாலை நேரம் எழும்புவோரும் பகலில் ஒரு சில மணி நேரம் தூங்குவது நல்லது. ஆனாலும் பொதுவாக வயோதிபர்கள், நோயாளிகள் பகலில் சிறிது நேரம் தூங்குவது அவர்களின் உடல் நிலைக்கு நல்லது.

எனவே இல்லத்தரசிகளே பொதுவாகப் பகலில் உறங்குவது என்பது அதிலும் தேவைக்கதிகமாக உறங்குவது நமது உடல் நலத்துக்கு ஊறு விளைவிப்பவையாக அமையும். நீங்கள் உறக்கம் சம்பந்தமான விடயங்களில் மிக முக்கிய கவனம் எடுத்து சிந்தித்துச் செயற்படுவீர்களானால் உயரிய வாழ்வை அடையலாம் என்பது உறுதி.

**ஹில்மி, சாய்ந்தமருது.**

# கண் மையும், அழகு படுத்தலும்

பெண்கள் தமது கண்களை அழகு படுத்திக் கொள்ளவே கண் மையைத் தடவிக் கொள்கின்றார்கள். இதன் மூலமும் இவ்வாறு அவர்களுடைய அழகு மெருகூட்டப்படுகின்றது. அவ்வாறு தம்முடைய கண்களையும் அழகுபடுத்திக் கொள்ள நினைக்கும் பெண்களுக்கு இதோ சில வழிகள்.



கண்களில் கண்ணாடி அணியும் பழக்கமுடைய பெண்கள் மைக் கோடுகளைச் சற்று பட்டையாக அமைப்பது நல்லது. இவ்வாறு செய்யாது விட்டால் கண்ணாடி கண்களில் மையிட்டிருப்பதையே தெரிய விடாமல் மறைத்து விடும்.

கண்களுக்கு மையிடும் பெண்கள் ஏதாவது ஒரு பாணியை மட்டுமே கையாள்வது வழக்கம். இது கூடாது. முகத்தின் தோற்றம், கண்களின் அமைப்பு, உடல் நிறம் ஆகியவற்றைக் கவனித்து அதற்கேற்ற வகையில் மை தீட்ட வேண்டும். அன்றாடம் உடுக்கும் உடைக்கு ஏற்பவும், மையின் அமைப்பை மாற்றுதல் நலம். சில நாள் முயற்சிக்குப் பிறகு இப்படியொரு முறையான பழக்கம் தானாகவே அமைந்து விடும்.

கண்களுக்கு மை தீட்டுவதற்கு முன்னர் கண்களை நன்றாகக் கழுவி முதல் நாள் இட்ட மை, கறை போன்ற அழுக்குகள் தென்படாமல் அகற்றிய பிறகே மையிடத் தொடங்க வேண்டும்.

மை பூசுவதற்கு சில பெண்கள் துடைப்பான் குச்சி போன்றவற்றைப் பயன்படுத்துவார்கள். இது கூடாது. ஏனெனில் இவைகளை கண்களின் மத்தியில் சிராய்ப்புக் காயங்கள் ஏற்படுத்திவிடும். இது இயற்கை அழகைக் கெடுத்துவிடும். மையிடுவதற்கு என்றிருக்கும் மெல்லியரக பிரஷ்களைப் பயன்படுத்துவதே சரியான முறை.

கண்புருவங்களுக்குப் பொதுவாக மை தீட்டுவது வழக்கில் உள்ளது. புருவங்களுக்கு மை தீட்டும் பொழுது அது எடுப்பாகத் தெரியும். ஆகவே இயற்கைத் தன்மை மாறாத அளவுக்கு, செயற்கைத் தன்மையுடன் காட்சி தரும் புருவங்களுக்கு மையிடுவதை முடியுமானவரைத் தவிர்த்தல் வேண்டும்.

இமைகளில் தீட்டப்படும் மைக் கோடுகளும் மெல்லியதாக இருப்பதோடு, திருத்தமாகவும் இருத்தல் வேண்டும்.

பெண்களின் கண்கள் மிக அகன்று இருந்து சற்று குறுகலாக அல்லது நீள்வாட்டில் காட்சி தர வேண்டும் என்று விரும்பினால் கண்களின் முனைப் பகுதிகளில் மைக் கோடுகளைச் சிறிது தீட்ட வேண்டும்.

மூக்குச் சற்று நீளமான பெண்கள் கண்களின் அடிப்பாகத்தில் மையைச் சற்று தடிப்பாகத் தீட்டி காதுப்பக்கம் மாறாகச் சற்று நீட்ட வேண்டும்.

முதலில் கண் புருவங்களுக்கு மை தீட்டக்கூடாது. கண், இமை ஆகியவற்றுக்கு மையிட்ட பிறகே புருவத்திற்கு மை தீட்ட வேண்டும். அப்போதுதான் முகத்தின் அழகை திட்டமாக நிர்ணயிக்கும் விதத்தில் மையிட முடியும். கண்களின் இமைகளுக்கு மைதீட்டும் போது சமப்படுத்தி விடலாம்.

எனவே பெண்களே நீங்களும் அழகாக மைதீட்ட விருப்பமா? மேற் குறித்த விடயங்களைச் செய்து பாருங்கள். அழகுடன் திகழலாம்.

**ரேணுகா**
**ஆரையம்பதி.**

# அழகுக் குறிப்புக்கள்

- உயரமான சதைப் பிடிப்பு இல்லாத பெண்கள் சங்கிலி போன்ற மெல்லிய கொலுசு அணிந்தால் பார்ப்பதற்கு பந்தமாக இருக்கும்.
- இரட்டைப் பின்னல் போட்டு தொங்க விட்டுக் கொள்ளும் பெண்கள் காதுகளில் ஜிம்மி போன்ற தொங்கும் அணிகளை அணிந்தால் கவர்ச்சியாக இருக்கும்.
- கரட் கிழங்கை துண்டித்து அதன் பகுதியில் கண்களின் புருவங்களில் தேய்த்து வந்தால் கண் புருவம் அடர்த்தியாகவும், ஒழுங்காகவும், கருமையாகவும் அமையும்.
- பசுப் பாலில் சிறிது கிளிசறின் கலந்து இரவில் படுக்கச் செல்லும் முன் முகத்தைக் கழுவி வந்தால் முகச் சுருக்கம் அகலும்.
- தொடர்ந்து பப்பாளிப்பழம் சாப்பிட்டு வந்தால் பெண்களின் ஊளைச் சதை குறையும்.
- கறுப்பு நிறமான பெண்கள் வண்ணப் பூக்களை தலையில் சூட்டுவதை விட மல்லிகை போன்ற வெள்ளை நிறப் பூக்களை அணிந்தால் அழகாக இருக்கும்.
- வெள்ளரிக்காயை அரைத்து சருமத்தில் பூசிக் கொண்டால் சருமம் மென்மையடைந்து அழகு பெறும்.
- நெற்றியில் ஏதாவது வண்ணச் சாந்து அல்லது குங்குமத்தால் பொட்டிட்டு பிறகு அதனைச் சுற்றி வேறு வண்ணத்தில் கோடு தீட்டிக் கொண்டால் திலகம் எடுப்பாக இருப்பதோடு அழகாகவும் தோற்றமளிக்கும்.
- பொட்டிட்டுக் கொள்வதன் மூலம் சற்று வயதான பெண்களும் இளமைத் தோற்றத்தைப் பெறமுடியும்.

**த.லக்ஷிகா, கல்லடி.**

# சமையல் செய்யும் போது கவனிக்க வேண்டியவை

- சமைக்கும் போது உணவுப் பொருட்களில் உள்ள போசனைப் பொருட்கள் அழியாத வகையில் சம வெப்பத்தில் சமைத்தல் வேண்டும்.
- சமையலுக்கெனப் பயன்படுத்தப்படும் பாத்திரங்கள் அதற்கு முன்னர் கழுவியதாக இருந்தாலும் பின்னரும் ஒரு தடவை அலசி எடுத்தல் வேண்டும். மற்றவரைக் கவரும் வகையில் உணவுகளை உரிய முறையில் சமைத்தல் வேண்டும்.
- சோறு சமைக்கும் போது தீட்டப்பட்ட அரிசியை நன்றாகக் கழுவுதல் கூடாது. ஏனெனில் அரிசியிலுள்ள விற்றமின் போன்ற சத்துக்கள் இல்லாது போய் விடும்.
- நெய், எண்ணெய் போன்ற பொருட்களைப் பிளாஸ்ரிக் போத்தல்களில் போட்டு வைத்தல் வேண்டும்.
- உருளைக்கிழங்கு, பீற்றூட், வத்தாளைக் கிழங்கு போன்றவற்றைத் தோல் நீக்காமல் தோலுடனே சமைத்தல் வேண்டும்.

**மல்லிகா, கொக்கட்டிச்சோலை.**

# பெண்ணே...!

பெண்ணே
சுனாமி தந்த
தாக்கங்களை – இனியும்
நினைத்திடாதே!

உன் வாழ்வில்
வீறு நடை போட
புதிய உலகத்தை
திரும்பிப் பாரடி!


இன்பகரமான உன்
வாழ்வை – பூச்சியமாக்கலாமா?

சிந்தித்துப் பார் – இது
காலத்தின் விளையாட்டு – நீயும்
விளையாடிப் பார்!
வென்றுவிடுவாய்!!

என்றும்
மாறாத புன்னகையுடன்
மலர்ந்த முகத்துடன்
என்றும் மகிழ்வுடன் – நீ
வாழ்க பல்லாண்டுகள்
வெல்க நூறாண்டுகள்.

இவ்வாரச் சிறுகதைகள்

# ஞானோதயம்



நந்தி

'அன்னம்.....இன்னும் ஒரு இருபதொண்டு தாவன்...' கெஞ்சி மன்றாடிக் கேட்டார் சின்னையா.
அன்னம்மாவுக்கோ ஊசியால் குத்தியது போல உண்மை ஒன்று உறைத்தது.

'இஞ்சேருங்கோ சயிக்கிளுக்குப் பெச்சொண்டு போடுறத்துக்கு அம்பது அறுவதோ இப்ப எடுக்கிறானுகள்? முதல் தந்தன்ன முப்பது......... இப்பபென்ன இருபது? அங்க சயிக்கிளுக்குப் பெச்சுமில்ல கிச்சுமில்ல.... கசிப்புக் கடப்பக்கம் தானே கிளம்பப் போறியள்.... ஆருக்குத் தெரியாத நரித்தந்திரம் இதெல்லாம். கெஞ்சியும் தரமாட்டன் கொஞ்சியும் தரமாட்டன். இங்ச தாங்க முன்ன தந்த முப்பதையும்.... குடத்த எடுத்து பயிர்ப் பச்சைக்குத் தண்ணிய ஊத்துங்க... சிவலோகம் போகப்போகுதுகள் எல்லாம்...'

சின்னையாவுக்கோ சம்மட்டியால் ஓங்கி அடித்தது போலிருந்தது தலையில் ....! 'இதென்னத்துக்கு டப்பா வாயத் திறந்தன். இருபதக் கேட்டதால இருபது சதமும் இல்லாமப் போறது மட்டுமில்ல... பணிஸ்மேன்ரும் தந்துத்தாள்...ம்...' அண்டமெல்லாமே தன் தலைக்குள்ளே சுழல்வது போலிருந்தது சின்னையாவுக்கு....!

'அன்னம்... பொன்னன் அண்ணனிண்ட பொடியனுக்கு இரவு பூச்சு குத்தினதாம்......! போய்த்துக் கொஞ்சம் ஓடிவாறன். இந்த வெயிலில தண்ணி ஊத்தினா இருக்கிற பயிரும் இல்லாமப் போகும்... இந்தா வந்துத்தன்' என்றவாறு ஒரு கையிலே சேட்டினை மாட்டிக் கொண்டு ஒரே ஓட்டமாய்க் கசிப்புக் கடையைப் போய்ச் சேர்ந்தார் சின்னையா....

ஆறுமணியாகியும் ஆளில்லை...! அன்னம்மாவுக்கோ உச்சம் தலை வரை ஏறியது கோபம்.
"அக்கோவ்... அக்கோவ்... குடிக்கப் போன இடத்தில சண்ட எழும்பி சாத்தி அனுப்பி இரிக்கானுகள் சவமாக இந்தா...' பக்கத்து வீட்டுப் பர்வதம் பரிதாபத்தோடு சொல்லி விட்டுப் போனாள்.

'எண்ட ஆண்டவா... இந்த மனுஷன் இதுக்குத் தானேப்பா துடிச்சிநிக்கிற...' என தலையிலடித்து அழுத அன்னம்மா... மறுகணம் 'சாத்தத்தான் வேணும்... பொஞ்சாதி புள்ளகுட்டி சொல்லிறதக் கேட்டு நடந்தா ஏன் இதெல்லாம்?' எனச் சற்று சினந்து நின்றாலும், கணவனைப் பார்த்தபடி கண்ணீர் மழை பொழிந்தாள் அன்னம்மா. பிள்ளைகளும்தான்...

'அன்னம் அக்கோவ் அப்பிடிப் பெரிசா ஒண்டுமில்ல ஆளுக்கு... வேறொருவனுக்கு விசுக்கினது வந்து தவறுதலாக இந்தாளுக்குப் பட்டுத்து.....'

'இப்ப என்னெண்டாப் பிரச்சின... வெறிமயக்கம். அடுத்தது நீ வைக்கமாட்டயாம் வளவுக்க போனா எண்ட மயக்கம். ரெண்டு மயக்கமும் தீந்துத்தெண்டால் எல்லாஞ் சரி...' சுமந்து வந்தவர்கள் சொல்லி விட்டுப் போனார்கள்.

இச் சம்பவம் இடம்பெற்று அடுத்த நாள் மாலை அருளம்பலம் மாஸ்ரர் சின்னையாவைப் பார்க்கப் பறந்தோடி வந்தார். இடுப்புடைந்த நரிபோலச் சின்னையா படுத்துக் கொண்டிருந்தார்.

'அன்னம்மா அருள் மச்சான் வந்திரிக்கார்... பாயக் கொண்டுவாவன்...' என்று படுக்கையில் கிடந்த சின்னையா எழும்பி இருந்து சொல்ல... பாயைக் கொண்டு அவளும் விரிக்க அவரும் அதிலே இருக்க நேரம் சரியாகவே இருந்தது. நடந்தவற்றையெல்லாம் அலசி ஆராய்ந்து முடித்த அருள் மாஸ்டர் 'மச்சான் சின்னையா... இத நீ கட்டாயமாகக் கேட்டுக்கடைப் பிடிச்சுத்தான் ஆகோணும். கல்க்குவாரில கிடந்து கொதிவெயிலில கல் உடைச்சி எடுக்கிற காசையெல்லாம் கொண்டு குடிச்சு, வெறிச்சி, குடும்பத்தையும் பாழாக்கி, இந்தச் சமூகத்தையும் சீரழிக்க வைக்கிறது எவளவு மோசம்...! முழிசாமக் கொஞ்சம் சிந்தித்துப் பாரன்.........

'உன்ர பொஞ்சாதி, புள்ளகுட்டி சொல்லுறதெல்லாம் வந்து ஆருக்காக? வாழ்க்கையில வந்து புரிஷன் சொல்லுறதப் பொஞ்சாதி கேக்கோணும். பொஞ்சாதி சொல்லுறதப் புருஷன் கேட்கோணும். புரிஞ்சு கொண்டு வாழ்றது தான் மச்சான் வாழ்க்க...!

"பரவால்ல நடந்தத நினைச்சிக் கவலப்பட்டு வேலல்ல. ஆனா அத நீ பெரியதொரு பாடமாக எடுத்துக் கொள்ளு. இனிமேலாவது திருந்தி நட... இல்லெண்டா இந்தப் பக்கமே தலவச்சுப் படுக்க மாட்டன் நான்" புகட்ட நினைத்த உபதேசம் அனைத்தையும் புகட்டி முடித்தார் அருள் மாஸ்ரர்.

அன்னம்மாவோ தேநீரைப் போட்டுக் கொண்டு கொடுக்க... அதனைக் குடித்து முடித்து விட்டுப் புறப்படப் போகும் அருள் மாஸ்ரரை ஆனந்தக் கண்ணீர் சொரியப் பார்த்த சின்னையா...

"அத்தான் அருள் உங்களையும், என்ர மனைவி, மக்களையும் சமூகத்தில் சீர்திருத்தப்பட்ட ஒருவனாக உருமாறி இரிக்கிறன். இன்றைக்கு நான். ஏழு பிறப்பெடுத்தாலும் இத மறக்கமாட்டன். இதுகளப் பற்றி இனிநான் நினைச்சுக் கூடப் பார்க்கமாட்டன். இது சாத்தியம்".

அகவரிகளை அழகிய வரிகளாய்ச் சொல்லி முடித்தார் சின்னையா. வாழ்க்கை என்னும் போர்க் களத்தில் ஒருவரையாவது சீர் திருத்தி சந்தோஷத்தில் கையசைத்தபடி சென்று கொண்டிருந்தார் அருள் மாஸ்ரர்.

அவரையே பார்த்தபடி அன்னம்மாவும், சின்னையாவும், பிள்ளைகளும் 'இந்தச் சமூகத்துக்கு இப்பிடியான மானிடர்கள் தான் என்றுமே தேவை' என்றபடி நின்றிருந்தார்கள்.

---

# பிறந்த மண்



எஸ்.பி.பாலமுருகன்
பதுளை

அந்நிய மண்ணில் வியர்வையும், கண்ணீரும், இரத்தமும் சிந்தி உழைத்த பணத்தைக் கொடுத்து வாங்கிய சொத்துக்களோடு கட்டுநாயக்கா விமான நிலையத்தினை வந்தடைந்த ஆனந்தன் 'டொல்பின்' வான் ஒன்றில் ஏறிக் கொள்கிறான். அது மட்டக்களப்பை நோக்கி நகர்க்கின்றது.

வாழைச்சேனையைத் தாண்டி செங்கலடியினை அண்மித்த அந்த இருட்டிலும் வானின் ஜன்னல் வழியாக செங்கலடி நகரத்தைப் பார்க்கிறான் ஆனந்தன். அந்த நேரத்தில் வானில் இருந்து ஒலித்த பாடல் அவனது இதயத்தைக் குத்தியது. எல்லாம் கனவாகி விட்டதே யாரிடம் சொல்வது...?

மட்டக்களப்பினைத் தாண்டி பதினைந்து வருடத்துக்குப் பின்பு கல்லடிப் பாலத்தில் அவனது எண்ணங்கள் புதைகிறது.... தாய்மண்ணில் கால் பதித்த ஆனந்தனுக்கோ அந்தச் சந்தோசம் ஒரு புறம் இருக்க.... கடந்தகால நினைவுகளோடு தூக்கம் மறந்த கண்களோடு கல்லடியில் உள்ள தனது தாய்வீட்டை அடைகிறான்.

தாயின் அன்பு முகம் அவனைத் தட்டி பாசத்தைக் கண்ணீராகக் கொட்ட வைக்கிறது. தந்தையாரின் அன்புக் குரலோ "தம்பி வாருமடா ராசா...." என அகங்குழைய அழைக்கிறது. இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகும் அதே மாறாத குரலாக அப்பாவின் குரலைக் கேட்கையில் ஆனந்தனுக்கோ பெரியதொரு ஆனந்தம்.

அக்கா சுமதி தங்கை பாமினியின் பிள்ளைகளுக்கு "பெரிய மாமா" என்று ஆனந்தனைக் காட்ட அவர்கள் வெட்கப்பட்டு மறைய... தங்கை, தமக்கையின்ர பாச உணர்வுகள்....? வளரிளம் பரிதி போல வளர்ந்து போன தம்பியின் முகம்....

சித்தப்பாவின் மகன் மாரான தருண், அருணின் முகங்கள் எல்லாம் ஏதோ சொல்ல ஆனந்தன் ஆனந்தக் கண்ணீர் விட்டான். அன்று தான் பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு தாயின் கைகளால் வாங்கிச் சாப்பிட்டான்.

அடுத்த நாள் சொந்தங்கள் நண்பர்கள் எல்லாம் வந்து போனார்கள். வெளிநாட்டுச் சாப்பாடும் பணமும் அவனைக் கொழுக்க வைத்திருந்தது.

அதனால் நீ முந்தி... நான் முந்தியயென மாப்பிள்ளை கேட்டுப் புதிய புதிய உறவுகள் எல்லாம் வரத் தொடங்கின.

மூன்று நாள் கடந்து தாயின் அனுமதியுடன் ஆனந்தன் வான் ஒன்றில் பெரியபுல்லுமலைக்குப் போகிறான்... அவனது பழைய கனவுகள் உயிர்ப்பிக்கின்றன...

பதினைந்து வருடத்துக்கு முன் 1990ம் ஆண்டு காலப்பகுதியில் ஆனந்தன் குடும்பம் நல்ல செல்வாக்குடன் பெரியபுல்லுமலையில் வாழ்ந்தது. இனமுறுகல் தொடர, படுகொலைகள் அதிகரிக்க பெரியபுல்லுமலையில் இருந்து சனங்கள் விரட்டப்பட்டன...... நல்ல செல்வாக்குடன் இருந்த ஆனந்தன் குடும்பமும் வீடுவளவும் கடைகளுடன் வாழந்த சனங்களும் பக்கத்துக் கிராம வாசிகளாலும், யுத்தத்தாலும் பல்வேறு அழிவுகளையும், அவலங்களையும் சந்தித்தார்கள்.

ஆனந்தனது கண்களால் கண்ணீரைக்... கட்டுப்படுத்த முடியவில்லை. அந்தக் காலத்தில் ஆனந்தன் பதினெட்டு வயதுப் பருவக் காளை...

அந்தப் பெரிய புல்லுமலையில் மலைநாட்டுக் குடும்பப் பெண்ணான வனிதா மீது இவன் காதல் கொண்டான். அவளது மலைநாட்டுப் பேச்சு இவனது காதலை வளர்த்தது. ஆனால் இனவெறி அந்தத் தேவதையை நாசமாக்கி அவளது குடும்பத்தையே கொன்று குவித்தது.

வனிதா என்ற பதினாறு வயதுத் தேவதையை பத்து மிருகங்கள் வெறி தீர்த்து கொலை செய்தன.... ஐயோ... கடவுளே...

அன்றுதான் ஆனந்தனின் குடும்பம் பெரிய புல்லுமலையை விட்டு கல்லடிக்குப் போனது.

அந்தக் காலத்தில் மட்டு நகரின் சூழ்நிலையால் ஜேர்மன் போன ஆனந்தன் இன்றுதான்.... பிறந்தமண் வந்தான்.

காலங்கள் மாறின...! எல்லாம் மாறின...! அவன் இதயத்தில் வனிதாவின் நினைவுகளும் இனவாதத்தின் சுவடுகளும் மாறவில்லை.... இன்னும், இருந்தும் பிறந்த மண்ணில் மீண்டும் கால் பதித்ததை நினைக்கையில் ஆனந்தனுக்கோ பேரானந்தமாய் இருந்தது.

# பொதுக்கட்டமைப்பு விடுதலை: எதனை நோக்கி?

-ஞாபகன்-



நீண்ட இழுத்தடிப்புக்களுக்கு மத்தியிலும் இருதரப்பிலும் கைச்சாத்திடப்பட்ட பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கை நடைமுறைக்கு வருவதற்கான சாத்தியங்கள் உண்டா என்பது இப்போதைய நிலையில் தவிர்க்கப்பட முடியாத கேள்வியாக உள்ளது. ஏனெனில், அதைவிட முக்கியத்துவம் வாய்ந்த - பொதுக் கட்டமைப்பு உடன்பாட்டுக்கே அடிப்படையான போர் நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தமே தொடர்ந்து நீடிக்குமா என்ற சந்தேகம் வலுப்பெற்று வருகின்றது.

சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகா ஒரு சாதனை போன்று கடும் எதிர்ப்புக்களுக்கு மத்தியில் பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டை ஏற்படுத்தினார். அதன் மூலம் ஏறத்தாழ எட்டாண்டுகளுக்குப் பின் அமைதி - சமாதானம் என்பவற்றில் நாட்டமுள்ள மனிதாபிமானம் கொண்ட தலைவியாகத் தோற்றம் பெறுகின்றாரோ என்று சில ஊடகங்கள் மகிழ்ந்தன. ஆனால், பின்னணியில் தமிழர்களை ஏமாற்றி குழிபறிக்கும் திட்டங்களை வைத்துக் கொண்டுதான் அவர் அதனைச் செய்தார் என்பது இப்போது வெட்டவெளிச்சமாகி விட்டது.

போர் நிறுத்த உடன்பாடு நடைமுறைப்படுத்தப்படுவதற்கு சிறிலங்கா படையினரின் ஒத்துழைப்பு எந்தளவுக்கு அவசியமோ அவ்வளவுக்கு பொதுக்கட்டமைப்பு நடைமுறைக்கு வருவதற்கும் அது வேண்டப்படும் ஒன்றாக இருக்கின்றது. வடக்கு - கிழக்கு முழுவதையும் உள்ளடக்கியதான மனிதாபிமான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான அமைப்பு சிறிலங்கா படைகளின் பிடியில் உள்ள கரையோரப் பகுதிகளுக்கும் உரியது. குறிப்பாக முஸ்லிம் மக்களையும் உள்ளடக்கியதான அம்பாறையின் பெரும்பாலான பகுதிகளுக்குமுரியது. கிளிநொச்சியில் அதன் தலைமைக் காரியாலயம் உள்ளதாயினும் பிராந்தியங்கள் தோறும் அதன் கிளைகள் இயங்குவது முக்கியமானது. அதன் மூலமாகவே அவ்வப் பிராந்தியங்களுக்குரிய மீள்கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

(இங்கே முஸ்லிம்கள் கிளிநொச்சிக்குச் சென்று அடிபணிய வேண்டும் என்று தென்னிலங்கையில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள பிரசாரங்கள் பொய்யென்பது பிராந்திய பணிமனைகள் செயற்படும் போது புரிந்து கொள்ளப்படும். ஆனால், விடுதலைப் புலிகள் பொதுக் கட்டமைப்புக்கான தலைமைக் காரியாலயம் கிழக்கில் திருகோணமலையில் தான் அமைக்கப்பட வேண்டும் என்று அது பற்றிய கலந்துரையாடல்கள் நடைபெற்ற போது வலியுறுத்தி வந்துள்ளனர். அவ்வாறு அமையும் போது தான் வடக்குக் கிழக்கின் மையப்பகுதியில் இருந்து கொண்டு புனரமைப்பு பணிகளை மேற்கொள்ள இயலும் என்று அவர்கள் கருதினர். ஆனால், சிறிலங்கா அரசு அதனை தமிழர் தலைநகரம் என்ற அரசியல் கண் கொண்டு நோக்கி கடுமையாக எதிர்த்ததுடன் கிளிநொச்சியிலேயே அதனை அமைக்க வேண்டும் எனவும் பிடிவாதமாக நின்றது.

இறுதியில் விடுதலைப் புலிகள் அதற்குச் சம்மதித்து ஒப்பந்தம் கைச்சாத்தானது. அதன் பின்தான் உடன்பாட்டை எதிர்ப்பவர்கள் அதனைத் தூக்கி வைத்துக் கொண்டு கூக்குரலிட்டார்கள். இப்போது திரும்பவும் சிறிலங்கா அரசு தலைமைக் காரியாலயத்தை திருகோணமலையில் அமைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருக்கின்றது. ஆனால், இந்த அரசியல் சித்து விளையாட்டுக்களுக்கு இடமளிப்பதில்லை என்று விடுதலைப் புலிகள் எடுத்திருக்கும் முடிவினால் அது நிராகரிக்கப்பட்டிருக்கின்றது. இது அதிகம் வெளியே வராத தகவலாக இருப்பதனால் புலி எதிர்ப்பு கொள்கையோடு இருப்பவர்களின் வாய்க்கு அவலாகியிருக்கின்றது.)

இவை நடக்க வேண்டுமாயின் இப்போது சிறிலங்கா இராணுவத்தின் பிடியில் உள்ள பகுதிகள் எங்கெல்லாம் விடுதலைப் புலிகளின் அரசியல் பணிமனைகள் இருக்கின்றனவோ அவை சுதந்திரமாக இயங்க வேண்டும். அரசியல் போராளிகள் தமது அரசியல் பணிகளை மேற்கொள்ள இடமளிக்கப்பட வேண்டும்.

புரிந்துணர்வு உடன்பாட்டில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ள இதனை சந்திரிகா அன்று முதல் எதிர்த்தே வந்திருக்கின்றார். அதுவும் புரிந்துணர்வு உடன்பாட்டை உருவாக்கிய ரணில் அரசு கலைக்கப்பட்டு தனது தலைமையிலான கூட்டரசாங்கம் பதவிக்கு வந்தவுடனேயே இது தொடர்பான தனது எதிர் நிலைப்பாட்டை தீவிரப்படுத்தத் தொடங்கினார்.

சர்வதேச சங்கடங்களுக்கு உள்ளாக நேரிடும் என்பதனால் புரிந்துணர்வு உடன்பாட்டை அவர் கிழித்தெறிய துணியவில்லை. ஆயினும் இது விடயத்தில் கடுமையாகவே நடந்து கொள்ளத் தலைப்பட்டார் என்பதனை, விடுதலைப் புலிகளின் அரசியல் அலுவலகங்கள் தாக்குதலுக்குள்ளாவதையும் அரசியல் போராளிகள் தொடர்ந்து கொல்லப்படுவதையும் வைத்துக் கண்டு கொள்ளலாம்.

இதனைப், பொதுக்கட்டமைப்பு உடன்பாடு உருவாகுவதற்கு இறுதி செய்யும் தருணத்தில் தீவிரப்படுத்தியுமிருந்தார். கிழக்கில் இருந்து கிளிநொச்சிக்குச் சென்ற தளபதிகள், பொறுப்பாளர்கள் மற்றும் போராளிகளைத் திரும்பச் செல்லவிடாமல் தடுத்தமை அத்தகையதே. அதிலும் பொதுக்கட்டமைப்பு கைச்சாத்தான மூன்றாவது நாளில் ஏறத்தாழ 40 போராளிகளைப் பலியெடுக்க முயன்றதும் அதன்பின் இறுக்கமடைந்திருக்கும் சூழலும் சந்திரிகாவினால் திட்டமிட்டு உருவாக்கப்படும் புறநிலைகளே என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

உண்மையில் விடுதலைப் புலிகளுடனான பொதுக்கட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்று சிறிலங்காவின் ஆளும் தரப்புக்களோ அல்லது சந்திரிகாவோ எண்ணியிருந்தால் அதற்கு ஆறு மாதங்களை எடுத்திருக்க வேண்டிய அவசியமில்லை. இதுவரைக்கும் பாதிக்கப்பட்ட சுனாமி அகதிகள் தற்காலிகக் கூடாரங்களில் காய வேண்டியதுமில்லை. சாதாரண நிவாரணத் திட்டத்தை ஊதிப் பெருப்பித்து எதிர்ப்புக்களை உருவாக்கி அமைத்தமைக்கான காரணம் ஒன்றே ஒன்றுதான்.

அது விடுதலைப் புலிகளை யுத்தத்திற்கும் செல்லவிடாமல் சமாதானத்துக்குள்ளும் மூழ்கவிடாமல் இரண்டும் கெட்டான் நிலையில் வைத்திருப்பது தான். அதன்மூலம் அவர்களைப் பலவீனப்படுத்தி ஒழித்துக் கட்டி விடலாம் என்று எல்லா சிங்கள இனவாதிகளையும் போல அவரும் கருதுகின்றார். அதனால் தான் புலிகள் பொறுமை இழந்து - மக்களும் கொதித்தெழுந்து யுத்தத்தின் மூலமான விடுதலை என்பதைத் தீர்மானிக்கும் தருணத்துக்கு வந்த போது, அதனைத் தனக்கு கீழ்நிலையில் உள்ள அமைச்சின் அதிகாரியூடாகக் கைச்சாத்திட்டு தணிவு நிலைக்குக் கொண்டு வர முயன்றார்.

அதன்மூலம் விடுதலைப் புலிகளை இரண்டும் கெட்டான் நிலையில் வைத்து அழிப்பதற்கும் கங்கணம் கட்டினார். அவருக்கு வாய்ப்பாக சிறிலங்கா படைகளுக்குப் பொறுப்பு வராமல் சொல்லிச் சாதிக்கக் கூடியதாக கருணா குழுவென்ற ஒரு மாயை உருவாக்கப்பட்டிருக்கின்றது. அதன்மூலம் விடுதலைப் புலிகளை இல்லாதொழிக்க மேற்கொண்ட பொதுக்கட்டமைப்புக்கு பின்பான முதலாவது முயற்சி பிசுபிசுத்துப் போனது.

ஆனால், எதிர்பாராத விதமான புலிகளின் சீற்றம் பாதுகாப்பான போக்குவரத்து தொடர்பிலான 14 நாள் கால அவகாசமாக வெளிப்பட்டது. இதனைத் தட்டிக் கழித்துவிட முடியாது என்பது அவருக்கு தெரிந்த போதிலும் பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டை செயற்படுத்தாமல் வைத்திருப்பதற்கான வழியொன்றைக் கண்டடையும் வரைக்கும் அதனை நிராகரிக்கும் விதமாக நடந்து கொண்டார்.

அவரின் கீழுள்ள சிறிலங்கா இராணுவப் பேச்சாளரும் சரி, சமாதான செயலகப் பணிப்பாளரும் சரி இப்போது வழங்கப்படுவதற்கு மேலாக எந்தப் பாதுகாப்பும் வழங்கப்பட மாட்டாது என்று கூறினார். அதற்கு புரிந்துணர்வு உடன்பாட்டில் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்ற சரத்து இல்லை என்பதை ஆதாரமாகக் காட்டினார்கள்.

ஆனால், அவர்கள் எதிர்பாராதது நடைபெறக் கூடிய இன்னொரு சாத்தியப்பாடு இதற்குள் இருந்தது. அதாவது 14 நாட்களின் பின்னர் விடுதலைப் புலிகள் தமது படையணிகளின் பாதுகாப்புடன் தென் தமிழீழத்துக்கான பயணத்தை மேற்கொள்ளக் கூடிய சாத்தியம் தான் அது.

புரிந்துணர்வு உடன்பாட்டில் புலிகளுக்குப் பயணப் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்பது எவ்வாறு கூறப்படவில்லையோ அவ்வாறே கடற்புலிகள் தமது போக்குவரத்தைச் செய்ய முடியாது எனவும் கூறப்படவில்லை. எனவே, அவர்கள் கடல்வழிப் போக்குவரத்தை மேற்கொள்வதை தடுத்துவிட முடியாது. அவ்வாறு தடுக்க முயன்றால் கடற்போர் ஒன்றையே உருவாக்கும்.

அவ்வாறே தரைவழியான போக்குவரத்தும் கடும் யுத்தம் நடைபெற்ற காலத்திலே இழப்புக்களின்றி புலிகள் மேற்கொண்ட ஒன்று தான். காடுகள் ஊடாக தென்தமிழீழத்துக்கும் வன்னிக்குமான பயணத்தை புலிகள் மேற்கொண்ட சந்தர்ப்பங்களில் அதனை படையினர் தெரிந்து கொண்டிருந்த போதிலும் மோதிப் பார்க்கும் விஷப் பரீட்சையினைச் செய்திருக்கவில்லை. வன்னியில் கடும்சமர் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயங்களில் கூட படையினரின் காடுகளிலான தேடுதல் வியூகங்களைக் கடந்து தமது இலக்கை புலிகள் எட்டியிருக்கின்றார்கள்.

அப்படி நிகழும் போது விடுதலைப் புலிகள் போர் நிறுத்த உடன்பாட்டை முறித்தார்கள் என்பதாக இல்லாமல் நியாயமான தவிர்க்க முடியாத முடிவே அது என்பதை சர்வதேசமும் உணர்ந்து கொள்ளக் கூடியதாக இருக்கும்.

இந்த நிலை உருவாவதை சிறிலங்கா அரசோ அதன் தலைவரான சந்திரிகாவோ சிறிதும் விரும்பவில்லை. இதனைத் தடுத்து நிறுத்துவதற்கு முன்னதாக பொதுக்கட்டமைப்பை முடக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என தீர்மானித்துச் செயற்பட்டிருப்பதாகவே தோன்றுகின்றது. பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட்டாலே கடல்கோள் அனர்த்த நிவாரண உதவிகள் வழங்கப்படும் என்று வற்புறுத்திய நாடுகளை, பொதுக்கட்டமைப்பை உருவாக்கிய தன் பின்னர் திசை திருப்பி நிதியுதவிகளை சிறிலங்கா அரசு என்ற ஒற்றை நிர்வாகக் கட்டமைப்புக்குள் கொண்டு வர முயலப்பட்டிருக்கின்றது.


உதவுவதாக உறுதியளித்த நாடுகளில் இருக்கக் கூடிய சட்ட ஏற்பாடுகளை முதன்மைப்படுத்தி அவற்றை விடுதலைப் புலிகளை உள்ளடக்கிய பொதுக்கட்டமைப்போடு நெருங்க விடாமல் செய்யும் சூழ்ச்சியை மேற்கொண்டிருப்பது அம்பலமாகியிருக்கின்றது. இந்தச் சூழ்ச்சியின் விளைவுகளாகவே முதலில் யப்பானும் அடுத்து அமெரிக்காவும் பொதுக்கட்டமைப்புக்கு நிதியுதவி செய்வதில் சட்டச் சிக்கல் இருப்பதாக அறிவித்துள்ளன.

மாறாக சிறிலங்கா அரசின் திறைசேரியூடாகவே அவற்றை வழங்க முடியும் என்று தெரிவித்துள்ளன. இதன்வழியாக சிறிலங்கா அரசு பொதுக்கட்டமைப்பை இயங்கா நிலைக்குள் தள்ளிவிட வழியைக் கண்டு பிடித்துவிட்டது. ஆகவே, இனிமேல் விடுதலைப் புலிகள் பாதுகாப்பான போக்குவரத்து தொடர்பில் முன் வைத்திருக்கும் 14 நாள் காலக் கெடுவுக்குள் சாதகமான பதிலெதனையும் வழங்கக் கூடும்.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு சிறிலங்கா சமாதான செயலகத்தை மேற்கோள் காட்டிக் கூறும் கருத்துக்களும் அவ்வாறானவையாகவே உள்ளன. அப்படியாயின் தொடர்ந்து மக்களும் விடுதலைப் புலிகளும் பொதுக்கட்டமைப்பை நடைமுறைப்படுத்துவதற்காக போராட வேண்டியிருக்கப் போகின்றதா? என்பதுதான் அடுத்த கேள்வியாகப் போகின்றது.




# முயல் குட்டிகளை காப்பாற்றிய ஆமை



ஒரு காட்டில் அம்மா முயலும், ஒரு அப்பா முயலும் நான்கு குட்டி முயல்களும் மிகவும் சந்தோசமாக வாழ்ந்து வந்தன. தாய் முயல்கள் உணவு தேடச் சென்று விட்டன. அப்போது ஒரு நாள் இரண்டு குட்டி முயல்களுக்கும் தாகம் ஏற்பட்டது.

குட்டி முயல்கள் என்ன செய்யலாம். பெற்றோரும் இல்லையே என்று யோசித்துக் கொண்டன. குட்டி முயல்கட்கும் வெயில் ஏற ஏற தாகம் அதிகரித்தது. அம்முயல்கள் வசித்து வரும் பற்றைக் காடுகளுக்கு சற்றுத் தூரத்தில் ஒரு குளம் இருப்பதை அவதானித்தன.

தாகம் பொறுக்காத இந்தக் குட்டி முயல்கள் அந்தக் குளக்கரைக்கு நீர் அருந்தச் சென்றன. அப்பொழுது நரி ஒன்று பசியுடன் காத்துக் கொண்டிருந்தது. பற்றைக்குள் மறைந்திருந்த நரியைக் கண்ட முயல் குட்டிகள் ஒரே பாய்ச்சலாக குளத்தினுள் குதித்துத் தப்பிவிட்டன. முயல்களைக் கொன்று பசியைப் போக்கலாம் என்று காத்துக் கொண்டிருந்த நரியார் ஏமாற்றமடைந்தார்.

குளத்தினுள் குதித்த முயல் குட்டிகள் நீந்தத் தெரியாமல் கஸ்ரப்பட்டன. குளத்தினுள் நீந்தத் தெரியாமல் கஸ்ரப் படுவதைக் கண்ட ஆமை நான்கு முயல் குட்டிகளையும் காப்பாற்றி கரை சேர்த்தது. சற்று நேரத்தில் தங்களைக் காப்பாற்றிய ஆமைக்கு நன்றி சொல்லி விட்டுச் சென்றன.


பின்னர் தமது இருப்பிடத்திற்கு நடந்த விடயத்தை தங்களது பெற்றோரிடம் கூறின. தங்களது பிள்ளைகள் நரியிடமிருந்து தப்பியதை எண்ணி தாய் முயல் சந்தோசமடைந்தன. ஆமைக்கு நன்றி கூறின. அதன் பின்னர் முயல்கள் உணவு தேடுவதற்காக ஒரு வயல் வெளிக்குச் சென்றன. அப்போது எதிர்பார்க்காத வகையில் தங்களைக் காப்பாற்றிய ஆமையைக் கண்டன.

ஆமையும் முயல்களும் சந்தோசமாகக் கதைத்து பேசி உணவு தேடின. பின்னர் முயல்கள் தங்களது இருப்பிடத்திற்கு ஆமையை அழைத்துச் சென்று விருந்தளித்து சந்தோசம் கொண்டாடின. எனவே சிறுவர்களே ஆபத்தில் உதவிய நண்பர்களை மறப்பது கூடாது.

**அ.துதிகரன், தரம் - 07,**
**அக்-தம்பிலுவில் ம.வித்தி.**

# உலகில் மிகப் பெரியவை

| | | |
|---|---|---|
| 01. | கண்டம் | :- ஆசியா |
| 02. | பாலைவனம் | :- சகாரா |
| 03. | தேவாலயம் | :- சென்பீற்றர்ஸ் தேவாலயம் |
| 04. | நதி | :- மிசூரி மிசிசிப்பி |
| 05. | இராச்சியம் | :- ரஷ்யா |
| 06. | தனிநாடு | :- பிறேசில் |
| 07. | விரிகுடா | :- ஹட்சன் |
| 08. | வளைகுடா | :- மெக்சிக்கோ |
| 09. | கோபுரம் | :- பிரான்ஸ் பில் கோபுரம் |
| 10. | எரிமலை | :- கொட்ட பக்கு |
| 11. | அணைக்கட்டு | :- எவர்டாம் |
| 12. | மைதானம் | :- றொகியானா |
| 13. | வெளிச்ச வீடு | :- இஸ்ரிக் (யப்பான்) |
| 14. | உப்பு ஏரி | :- காஸ்பியன் கோய்மெயர் |
| 15. | துறைமுகம் | :- ரொடர்டாம் |



**த.கிருத்திகா, தரம் - 3A,**
**அக்-தம்பிலுவில் சரஸ்வதி வித்தி.**



**எஸ்.ஜெனிஸ்டன், தரம் - 11,**
**மட்-பழுகாமம் க.ம.வித்தி.**

# வாழ்க!

இறைவன் அடி போற்றி
இன் சொல் தினம் பேசி
சின்னஞ் சிறுவர் நீங்கள்
அன்புடனே உறவாடி
பண்புடனே வாழ்க!

கல்வி நான்றாய் பயின்று
நல்லதையே நினைத்து
நல்லதையே செய்து
வல்லவனாய் வாழ்க!

பெரியோர் சொற்கேட்டு
பெருமை பல சேர்த்து
சிறுவயது வாழ்க்கையதை
சிறப்புடனே வாழ்க!

கெட்டிக் காரன் என்று
பட்டம் பல பெற்று
பல்கலையும் கற்று
பல்லாண்டு காலம்
எல்லோரும் போற்ற
செல்லச் சிறுவர்களே வாழ்க!




**என்.டர்ஷனா, தரம்-2B,**
**மட்-புனித சிசிலியா பெ.ம.வி.**

# பொது அறிவு

01. இலவசக் கல்வியின் தந்தை யார்?
*c.w.w. கன்னங்கர*
02. இலங்கையில் இரண்டாவது மிருகக் காட்சிசாலை உள்ள இடம் எது?
*பின்னவல*
03. இலங்கையின் முதலாவது ஆங்கிலேய தேசாதிபதி யார்?
*பிரடரிக் நோத்*
04. இலங்கையில் ஆட்சி செய்த முதல் அரசி யார்? *அனுலா*
05. பிரேமதாஸ அவர்கள் எத்தனையாம் ஆண்டு இறந்தார்?
*1993ம் ஆண்டு*
06. இலங்கை விமானப்படை அமைக்கப்பட்ட ஆண்டு எது? *1958*
07. இலங்கையின் கௌரவ பிரஜையான விஞ்ஞான எழுத்தாளர் யார்?
*ஆதர்.ஸி.கிளார்க்*
08. இலங்கையில் கூடுதலாக நெல் பயிடப்படும் இடம் எது?
*குருநாகல்*
09. இலங்கையில் மகாவலித் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட பெரிய நீர்த்தேக்கம் எது? *ரன்தெனிகல*
10. இலங்கையில் தொலைக்காட்சி சேவை ஆரம்பிக்கப்பட்டதும் முதனமுதலில் ஒளி பரப்பான நிகழ்ச்சி எது?
*சார்ள்ஸ் - டயனாவின் திருமணம் (I.T.N)*

**த.தினோச்யா தரம்:-11**
**மட்.புதுக்குடியிருப்புகண்ணகி ம.வி**



**சு.பிரஷாணி**
**தரம்-05.**

# பழமொழிகள்

*அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது.
*அப்பன் அருமை மாண்டால் தெரியும்.
*அப்பியாச வித்தைக்கு அழிவில்லை.
*அரசன் எவ்வழியோ குடிகள் அவ்வழி.
*அருமையற்ற வீட்டில் எருமையும் குடியிருக்காது.
*அல்லல் ஒரு காலம் செல்வம் ஒரு காலம்.
*அவப்பொழுதிலும் தவப்பொழுது நல்லது.
*அழகிருந்தென்ன அதிஸ்டம் இருக்க வோணும்.
*அழகேசன் ஆனாலும் செலவு செய்ய வேண்டும்.
*அறிந்தறிந்து செய்யும் பாவத்தை அழுதழுது தொலைக்க வேண்டும்.
*அறையில் ஆடியல்லோ அம்பலத்தில் ஆட வேண்டும்.
*அற்ப ஆசை தேடி தவத்தைக் கெடுக்கும்.

**அ.துஜாந்தன் தரம்-08**
**மட்.மகிழவட்டவான் ம.வி, ஆயித்தியமலை.**

# சிந்தனைக்கு சில வரிகள்

* ஓய்வை விவேகத்துடன் பயன்படுத்துவதே கல்வியின் குறிக்கோள்- அரிட்ஸ்ரோட்டில்.
* கடினமான வேலையைச் செய்வதில் மகிழ்ச்சியைக் காணும் மனநிலை கொண்ட மனிதர்களே எப்பொழுதும் வெற்றி வீரர்கள் ஆவார்கள்-மில்ரன.
* எங்கு ஒரு நூலகம் திறக்கப்படுகிறதோ அங்கு ஒரு சிறைச்சாலை மூடப்படுகின்றது- சுவாமி விவேகானந்தர்.
* வேகம் இல்லாத விவேகம் வெறும் கனவு. விவேகம் இல்லாத வேகம் வேருடன் அழிவு. விவேகத்துடன் இணைந்த வேகம் வெற்றிவாயிலின் நுழைவு
* தோல்வியைக் கண்டு அஞ்சுபவனிடம் இருந்து வெற்றி விலகின்றது.
* உண்மை பேசி நன்மையைச் செய்தால் உலகம் உன்னை மதிக்கும். நீ உயரும் போது பணிவு கொண்டால் அனைத்து உயிர்களும் உன்னை வணங்கும்.

**க.கஜேந்தினி, தரம்:-12**
**சது.நாவிதன்வெளிஅன்னமலை ம.வி**

# விடுகதைகள்

01. ஐந்து இராசாக்களுக்கு ஒரு மீசை அது என்ன?
02. காய்க்கும் பூக்கும் கலகலக்கும் காகம் நிற்க கொப்பில்லை அது என்ன?
03. அறக்கீரை சிறுபாத்தி அழகுண்டு. மனமில்லை. அதுஎன்ன?
04. கறியைக் கறி தின்ன கறியுடைய மகள் ஆர்... ஆர்... என்ன கறி முறியப் பாஞ்சுதாம் கறி அது என்ன?
05. சின்னத் தம்பி சிவந்த தம்பி திறந்த வாய் மூடாத தம்பி அவன் யார்?
06. நாலுகால் குதுரைக்கு நடக்கத் தெரியாது அது என்ன?

# விடைகள்

01. செவ்வாரத்தம் பூ
02. திராய்
03. காது
04. கீரை,ஆடு
05. தபால் பெட்டி
06. கதிரை

**லோ.பிரகலாதனி,**
**தரம்:-08**
**மட்.மகிழவட்டவான் ம.வி**

# உருகும் பனியில் உலகின் அழிவு



உலக அழிவு, கலியுகம் என்றெல்லாம நாம் வாழும் இப்பூமிப்பந்தின் அழிவுபற்றி நம் மூத்தோரும், முதுநூல்களும் கூறக் கேட்டிருக்கின்றோம். வல்லரசுகளின் அதிகாரப் போட்டியில் அணுவாயுதங்களும், அதைவிட அபாயமான நைதரசன் குண்டுகளும் பல்கிப் பெருகிவிட்ட இன்றைய நிலையில் உலக அழிவு சாத்தியமே என எண்ணத்தோன்றுகின்றது. மனிதன் அவ்வழிவாயுதங்களைப் பாவிக்காது விட்டாலும், நாம் வாழும் பூமியின் அழிவு மனிதனால் ஏதோ ஒரு வகையில் விரைவுபடுத்தப்பட்டுக் கொண்டே வருகின்றது.

இவ்வகையில் பூமி வெப்பமடைதல் (Clobal warming) என்ற விடயம் இன்று பூமியைக் கொஞ்சம் கொஞ்சமாக அழித்துக் கொண்டிருக்கிறது. சூரியனில் இருந்து வரும் வெப்பமானது மீளச் செல்வதில் ஏற்படும் தடங்கலே இந்த வெப்பமடைதலுக்கு காரணமாகின்றது.

தொழிற்சாலைகள், வாகனங்களிலிருந்து வெளியேறும் வாயுக்களே இதற்கு பிரதான காரணமாகும். குறிப்பாக காபனீரொட்சைட் ($CO_2$) குளோரோ புரோரோ காபன்கள்(CFC) ரைத்திரஸ் ஒட்சைட் (N2O) போன்றவை குறிப்பிடத்தக்கன.

பூமி வெப்பமடைவதால் துருவப்பகுதியில் உள்ள பனிப்பாறைகள் உருகி கடல்மட்டம் உயரும் எனவும், இதனால் பலதீவுகள் உடனடியாக கடலில் மூழ்கிவிடும் எனவும் விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். தற்போது இந்தச் செயற்பாடு நடைபெற ஆரம்பித்து விட்டதை ஆய்வுகள் நிரூபித்துள்ளன. கடந்த 25 வருடங்களில் 250 மில்லியன் ஏக்கர் பனிப்பாறைகள் மறைந்துபோய் உள்ளன.

இதைவிட புவி வெப்பமடைதலால் கடும் குடிநீர் பிரச்சினை காடுகள் அற்றுப் போதல், விவசாயதுறை வீழ்ச்சி வெப்ப அதிகரிபால் தோன்றும் நோய்கள் என உலகு பாரிய அழிவை எதிர்நோக்கியுள்ளது.

புவி வெப்பமடைவதைக் கட்டுப்படுத்த ஏற்படுத்தப்பட்ட சுற்றுப்புறச் சூழல் ஒப்பந்தத்தில் கையெழுத்திட அமெரிக்கா போன்ற நாடுகளே பின்னடிக்கும் நிலையில் இதைத் தடுப்பது மிகச் சிரமம் என விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.நாடுகள் தமது தொழிற்சாலை உற்பத்தி முறையில் மாற்றங்களைச் செய்வதன் மூலமும் வாகனங்களுக்கு மாற்று எரிசக்தியை உருவாக்குவதன் மூலமும் புவி வெப்பமடைதலைக் கட்டுப்படுத்த முடியும் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# நறுமணமா நாறுமணமா?



பூ மலர் என்ற சொற்பதங்கள் அழகு, நறுமணம், மென்மை போன்றவற்றோடு தொடர்புபடுத்தியே பொதுவாக நோக்கப்படுகின்றன. ஆனால் இங்கு நிலைமை சற்று வித்தியாசமானது. உலகிலேயே மிகப்பெரிய பூவாக இனங் காணப்பட்டுள்ள ரைற்ரான் (Titan) என அழைக்கப்படும் பூக்கள் (Amorphop hallas Titanium - தாவரவியற்பெயர்) 7 அடி உயரமும் 4 அடி அகலமும் 20 இறாத்தல் நிறையும் கொண்டனவாகக் காணப்படுகின்றன. இதிலிருந்து வீசுகின்ற "நறுமணம்" அழுகிய மாமிசத்தின் மணத்தை ஒத்திருப்பது மற்றுமொரு குறிப்பிடத்தக்க விடயமாகும். வருடத்தில் ஒரு முறை மலரும் இப் பூக்கள் அரை அடி வளரும் ( மலரும்) அத்துடன் இவை 5-7 நாட்களுக்கு வாடாதிருக்கும்.

# தகவல் தளம்




# போருக்காய் புது வரவு




எதிர்காலப் போர்க்களங்களில் போர்வீரர்களுக்குப் பதிலாக ரோபோக்களை ஈடுபடுத்தும் அமெரிக்காவின் ஆராட்சியில் ஒரு பகுதியாக தற்போது சண்டையிடும் ரோபோ இயந்திரம் ஒன்று வடிவமைக்கப்பட்டுள்ளது. எந்த தரையமைப்பிலும் காலநிலையிலும் செயற்படத்தக்க வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இவ் றோவோவில் இயந்திரத் துப்பாக்கிகள், ரொக்கேற் லோஞ்சர்கள் பொருத்தப்பட்டுள்ளன. தொலைக்கட்டுப்பாட்டு அமைப்புடன் கூடிய இவ் றோவோ சக்திமிக்க கமராக்களைக் கொண்டிருப்பதுடன் துல்லியமான தாக்குதிறனையும் கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

# பட்டிக்கறப்பும் பண்ணைக்கறப்பும்



எமது கிராமப்புறங்களில் பட்டிகளில் பால் கறப்பதைப் பார்த்திருப்போம். சில வேளைகளில் பால் கறப்பவரை மாடுகள் படாதபாடு படுத்தி விடும். ஒருவர் பலமாடுகளில் பால் கறப்பதென்பது சிரமமான விடயமும் நேரம் எடுக்கும் விடயமுமாகும்.

பால் பண்ணைத் தொழிலில் விருத்தியடைந்த நாடுகள் பால் கறப்பது அதைக் குளிரூட்டி பழுதுபடாமல் பேணுவது போன்றவற்றில் உயர் தொழில்நுட்பத்தைக் கடைப்பிடித்து வருகின்றன. கணனி மயப்படுத்தப்பட்ட கட்டுப்பாட்டு நடைமுறைகள் பின்பற்றப்படும் இம்முறைகளில் சிறப்பான விளைவுகள் பெறப்படுகின்றன.

# உண்ண உரிமையில்லை உனக்கு



இன்று மீன்பிடித் தொழில் தொழில்நுட்பரீதியில் மிக உயர்நிலை வளர்ச்சி பெற்றுக் காணப்படுகின்றது. மீன்களைக் கண்டறிதல், கடலில் திசையறிதல் என்பவற்றிக்கு மேலாக கடலில் மாதக்கணக்கில் தங்கியிருந்து மீன்களைப்பிடித்து தகரத்தில் அடைக்கும் பாரிய "தொழிற்சாலைக் கப்பல்கள்" தொழிநுட்ப ரீதியில் மீன்பிடித் தொழில் வளர்சிபெற்றுள்ளது.

இருந்தும் பாரம்பரிய மீன்பிடி முறைகள் முற்றாக மறைந்து போய்விடவில்லை. தொழில்நுட்ப ரீதியில் வளர்ந்து வரும் சீனாவில் பறவைகளைப் பயன்படுத்தி மீன்பிடிக்கும் பாரம்பரிய முறை இன்னும் வழக்கில் உள்ளது. படகில் கொண்டு செல்லப்படும் நன்கு பழக்கப்படுத்தப்பட்ட பறவைகள் மீன்களைக் கண்டதும் அவற்றை தம் அலகால் கொத்தி தம் படகுக்குக் கொண்டு வரும் அங்கு வைத்து அவை விழுங்கப்படுவதற்கு முன் மீன்களை மீனவர்கள் அவற்றிடமிருந்து எடுத்துக்கொள்வார்கள். இம் முறை சீனாவின் பல பகுதிகளிலும் இன்றும் பின்பற்றப்பட்டு வருகின்றது.

ஆழிப் பேரலை வந்தது சொல்லொணாத்துன்பத்தைத் தந்து பல்லாயிரக்கணக்கான உயிர்களைப்பறித்தது. பல ஆயிரம் கோடி ரூபாய்கள் பெறுமானமுள்ள சொத்துக்கள் அழிந்தன. ஆனால் மனிதாபிமானத்தை அதனால் அழிக்க முடியவில்லை. மத, இன. வேறுபாடின்றி மக்கள் ஒருவருக்கொருவர் முடிந்தவரை உதவினர். கடற்கோள் தீமையிலும் நன்மை செய்ததாகப் பலரும்

லாமியர்கள், கத்தோலிக்கர்கள், கிறிஸ்தவர்கள் என வேறுபாடு காட்டாது விடுதலைப்புலிகள் அரவணைத்த செயல் அனைவராலும் பாராட்டைப் பெற்றது. அத்துடன் போராட்டத்திலே வல்லமையுள்ள புலிகளின் நிர்வாகக் கட்டமைப்பு இவ்வளவு நேர்த்தியாகப் பணியாற்றுகின்றதே என வெளிநாடுகள் ஆச்சரியப்பட்டன. ஆனால் இந்த ஒற்றுமையைச் சிதறடிக்கப் பல நடவடிக்கைகள்

இவ்வாறு காட்டிப் பெறும் வெளிநாட்டு உதவிகளை சிறிலங்காவிற்கு அதிகளவில் செலவழிப்பது, தமிழர் தாயகப் பகுதிகளுக்கும் செலவிடுவதாகக் காட்டிக் கொள்வது. சுனாமியால் பாதிப்படையாத சிறிலங்காவின் பகுதிகளுக்குப் பாவிப்பது, இதைவிடக் கணிசமான நிதியை ஆயுதங்கள் வாங்குவதற்குப் பயன்படுத்துவது, இவைதான் ஆட்சியாளரின் திட்டமாக இருந்தது.

இவ்வாறு ஆளும் கட்சி திட்டம் போட்ட பொழுது எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தனது நலன் சார்ந்த வகையில் அனர்த்தங்களை நோக்கியதெனலாம்.

ஆளும் கட்சியுடன் இணைந்திருந்த முஸ்லிம் கட்சிகள் பெரிதாகக் குரல் கொடுக்கவில்லை. அரசு நிவாரணங்களைச் செய்யும் என்ற எண்ணத்தில் இருந்தன. வெளிநாட்டிலிருந்து பெறப்படும் உதவிகள் எவ்வாறு, எங்கெங்கு சென்றாலும் அக்கறையில்லை பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏதாவது கிடைத்தால் போதும் என்ற நிலைப்பாட்டில் அவர்கள் இருந்தார்கள். ஆனால் அரசு தரப்போ இவர்கள் அமைச்சர்களாக இருந்ததையும் பொருட்படுத்தாது சிங்கள அமைச்சர்களையே மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களுக்குச் சுனாமி நிவாரணத்துக்குப் பொறுப்பாக நியமனம் செய்திருந்தது. இந்நியமனங்கள் முஸ்லிம் அமைச்சர்கள் மீது நம்பிக்கை இல்லை. என்ற ஒரு கருத்தைக் முன்வைத்தது போன்று இருந்தது. இவ்வாறு சிங்கள அமைச்சர்களைப் பொறுப்பாக நியமித்ததை இக்கட்சிகள் கண்டிக்காது ஏற்றுக்கொண்டன.



அரசியல்க் கட்சி சார்ந்த நலன்களிலேயே நோக்கினார்கள். இதே நேரம் இப் பேரழிவை விடுதலைப் புலிகள் நோக்கிய முறைமை முற்றிலும் வேறுபாடானதாகவே இருந்தது. மக்களின் விடுதலையைத் தன் தலையாய பணியாகக் கொண்டுள்ள புலிகள் சுனாமிப் பேரழிவையும் அவ்வாறே நோக்கினர். பேரழிவிலிருந்து மக்கள் விடுதலை பெற வேண்டும். அதுதான் முக்கியம். இன, மத வேறுபாடின்றி மக்களை மீட்க வேண்டும் என்று புலிகள் கருதினர். செயற்பட்டனர். அதனாற்தான் தமக்கு எதிராகத் துப்பாக்கிளைத் தூக்கித் திரிந்த சிங்களப் படையினரையும் அவலத்திலிருந்து காப்பாற்றினர். இங்கே மனிதாபிமானம் மேலோங்கியிருந்தது.

# சுனாமிக் கட்டமைப்பில்
# ஆதாயம் தேடும் அரசியல் வாதிகளும்
# மக்கள் துயர் துடைக்கும் விடுதலைப்புலிகளும்



கூறினர். ஆட்சியிலிருந்தவர்களே என்ன செய்வது என்று ஏங்கிக் கொண்டிருக்கும் பொழுது தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகக் கட்டமைப்பு துரித கதியில் அல்லற்பட்ட மக்களுக்கு உதவிட வந்த தமிழர் புனர்வாழ்வுக்கழகம் அதேவேகத்தில் மக்களின் உடனடித் தேவைகளை வழங்கியது.

தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்குப் பலியாகாமல் இருப்பதுதான் மக்களின் பொறுப்பாகும்.

சுனாமியால் ஏற்பட்ட ஒற்றுமையை சுனாமிக்கான பொதுக்கட்டமைப்பை வைத்துச் சிதறடிப்பதிலே பேரினவாதம் கவனம் செலுத்துகின்றது. அதற்குத் துணைபோகச் சில முஸ்லிம் அரசியல் தலைவர்களும் முன்வந்துள்ளனர்.

சுனாமியால் ஏற்பட்ட பேரழிவுகளையும், தற்பொழுது ஏற்படுத்தப்பட்டுள்ள பொதுக்கட்டமைப்புப் பற்றியும் அரசியல் கட்சிகளின் பார்வை உள்ளார்த்தமாக எத்தகைய நோக்கத்தைக் கொண்டுள்ளன என்பதை கவனிக்க வேண்டும். அப்பொழுதான் தற்போதய நிலைமைகளின் உண்மைத்தன்மை விளங்கும்.

சுனாமி ஏற்பட்ட பொழுது ஜே.வி.பி உள்ளடக்கிய ஐக்கியமக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சியில் இருந்தது. சுனாமியால் ஏற்பட்ட பேரழிவை இனவாதக் கண்ணோட்டத்துடனேயே அவை நோக்

ஐக்கிய தேசியக் கட்சியும் தமிழர் தாயகப் பிரதேச அழிவுகளை ஒப்பீட்டளவில் சிறிதாகவே காட்டிச் சிறிலங்காவின் தென் பகுதிகளிலேயே அதிக கவனத்தைச் செலுத்தியது. சிங்கள மக்களின் வாக்குகளை ஆளும் கட்சி சுனாமி நிவாரணத்தின் மூலம் அடைந்துவிட்டால் தங்களுக்கு ஆபத்து என்ற நிலைப்பாட்டில் ஐக்கிய தேசியக் கட்சியும் அச்சிங்கள மக்களை மையமாக வைத்தே செயற்பட்டது. ஆளும் கட்சியின் பணிகளில் குறை கூறி மக்களைத் தம்பக்கம் இழுப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தது.

ஆளும் கட்சிக்குள்ளேயும் ஜே.வி.பி தான் தான் மக்களுக்கு அதிகம் உதவுவதாகக் காட்ட அரசு யந்திரத்தை பயன்படுத்த இதனால் ஆளும் தரப்பினருக்குள்ளேயும் மோதல்கள் தொடங்கின.

பல பிரிவுகளாகப் பிரிந்து நின்ற இஸ்லாமியக் கட்சிகள் ஒன்றையொன்று குறை கூறுவதிலும், குற்றம் சாட்டுவதிலுமே அதிக அக்கறையைக் காட்டின. பேரினவாதக்கட்சிகளில் இணைந்திருந்த முஸ்லிம் தலை

ஆளும் கட்சியுடன் சேராமல் அல்லது சேர முடியாமல் இருந்த சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சுனாமியால் ஏற்பட்ட பேரழிவை எடுத்துக் காட்டியது. இதர இடங்களிலும் பார்க்கச் சேதம், அழிவு, உயிரிழப்புக்கள் தென் தமிழீழத்தில் அதிகம் என்பதைச் சுட்டிக்காட்ட முஸ்லிம் காங்கிரஸ் தவறவில்லை. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் தேவை என்று குரல் கொடுத்தனர். அதே நேரம் இதர முஸ்லிம் கட்சிகள் சுனாமியை வைத்து அரசியல் ஆதாயம் தேடி விடக் கூடாதென்ற கருத்தைக் கொண்டிருந்தனர். பேரியல் அஷ்ரப்பின் கட்சியி



டம் நிவாரணப் பொறுப்புக்கள் வழங்கப்படாததை வரவேற்றனர். சிங்கள அமைச்சர்களிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளதைக்

**சிலம்பு**

கண்டிக்க முன்வரவில்லை. இந்நியமனங்களைக் காட்டி ஆளும் கட்சியுடனிருந்த முஸ்லிம் கட்சிகளை நையாண்டி செய்வதிலேயே கூடிய கவனம் செலுத்தினர்.

மொத்தத்தில் முஸ்லிம் அரசியல் கட்சிகள் சுனாமியை மக்களின் துன்பச் சுமைகளின் அடிப்படையில் பார்க்காது தமது

அதேநேரம் வெளிநாட்டு உதவிகள் சிங்களப் பகுதிகளுக்கு அதிகமாகவும், தமிழ்ப்பகுதிகளுக்கும் குறைவாகவே அரசால் கொடுக்கப்படும், ஆயுதக் கொள்வனவுக்குச் சுனாமிக்காக வழங்கப்படும் நிதி பயன்படுத்தப்படும் என்பதை உலகத்தின் முன்னால் கொண்டுவந்தனர் புலிகள். விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளின் சேதங்களையும் வெளி உலகுக்குக் கொண்டு வந்து காட்டினர். புலிகளின் அர்ப்பணிப்பான, துணிச்சலான பணிகள் உலகத்தின் முன்னணி ஊடகங்களால் வியந்து பாராட்டப்பட்டன. ஆனால் பேரினவாதிகளின் ஊடகங்களும் அரசு ஊடகங்களும் கடற்புலிகள் சுனாமியால் முற்றாக அழிந்து விட்டனர் என்று எழுதியும், கூறியும் தங்களையும் சிங்கள மக்களையும் ஏமாற்றி வந்தன.

கடற்புலிகளின் திறமையான கட்டமைப்பையும் செயற்றிறனை சுனாமிக்குப் பின்னரான மீள் நிர்மாணப் பணிகளும் உலகத்தர் பாராட்டப்பட்டே வந்தன. புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி ஆட்சியாளர்களால் முற்றாகப் புறக்கணிக்கப்படும், உதவி நிதி வேறு தேவைகளுக்கும் பயன்படுத்தப்படும், உதவி நிதி வேறு தேவைகளுக்கும் பயன்படுத்தப்படும்., பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சமமாகப் பகிர்ந்தளிக்கப்படமாட்டாது என்று புலிகள் எடுத்துக் கூறினர். உதவி வழங்கும் நாடுகள் அதனை ஏற்றுக் கொண்டனர். எனவேதான் விடுதலைப் புலிகள் முன்வைத்த யோசனைப் படி பொதுக்கட்டமைப்பை உலக நாடுகள் வலியுறுத்தின. பொதுக்கட்டமைப்பு ஏற்பாட்டால்மாத்திரமே உதவிகள் வழங்கப்படுமென அந்நாடுகள் கூறின.

(தொடரும்...)

> **"உண்மை நண்பனை ஆபத்துக் காலத்தில் தான் அறியலாம் என்பார்கள். துன்பப்பட்ட மக்களை இந்துக்கள், இஸ்லாமியர்கள், கத்தோலிக்கர்கள், கிறிஸ்தவர்கள் என வேறுபாடு காட்டாது விடுதலைப் புலிகள் அரவணைத்த செயல் அனைவராலும் பாராட்டைப் பெற்றது. அத்துடன் போராட் டத்திலே வல்லமையுள்ள புலிகளின் நிர்வாகக் கட்டமைப்பு இவ்வளவு நேர்த்தியாகப் பணியாற்றுகின்றதே என வெளிநாடுகள் ஆச்சரியப்பட்டன. ஆனால் இந்த ஒற்றுமையைச் சிதறடிக்கப் பல நடவடிக்கைகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்குப் பலியாகாமல் இருப்பதுதான் மக்களின் பொறுப்பாகும்."**

இவையெல்லாம் மறக்கப்படமுடியாத நிகழ்வுகளாகும்.

உண்மை நண்பனை ஆபத்துக் காலத்தில் தான் அறியலாம் என்பார்கள். துன்பப்பட்ட மக்களை இந்துக்கள், இஸ்

கின. தமிழர் தாயகப் பகுதியில் அதாவது வடக்குக் கிழக்குப் பகுதிகளில் ஏற்பட்ட அனர்த்தங்கள் குறைவானதாகவும், சிறிலங்காவின் தெண்புலத்தில் ஏற்பட்ட பேரழிவுளே கொடூரமானதாகவும் அரசு காட்டியது.

வர்கள் தங்கள் கட்சிகள் சார்பாக இருந்தனரேயன்றி மக்களின் துயர்களுக்காக குரல் கொடுக்கவில்லை. அவர்கள் இதர முஸ்லிம் கட்சிகளைக் குறை சொல்வதிலேயே காலம் கடத்தினர்.

---

# இஸ்லாமிய இளைஞர்களின் சிந்தனைக்கு!

சென்றவாரத் தொடர்ச்சி.........

ஆகியவற்றிற்கு முஸ்லிம்களுக்கு இடம் வேண்டும் என்று ஓங்கி ஒலிக்கின்றனர் தமிழ் மக்கள் போராடியிருக்காவிட்டால் பேச்சுவார்த்தை வந்திருக்காது. இடைக்காலத்தன்னாட்சி அலகு தோன்றியிருக்காது. இவ்வாறான நிலையில் முஸ்லிம் தரப்பினர் என்ன கேட்டிருப்பார்கள்? புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி என்று பெரும்பகுதி உண்டு, அதுவும் தமிழர் தாயகப் பகுதிகளிலேயே அமைந்துள்ளன.

தமிழர் தாயகப்பகுதி புறக்கணிக்கப்பட்டுள்ளது. அதனால் இப்பகுதியை கடற்கோள் அனர்த்தத்திலிருந்து மீளக்கட்டுமானம் செய்யப் பொதுக்கட்டமைப்பு வேண்டும் என்று புலிகள் கோரிக்கை முன்வைத்தனர். உலகம் அக்கோரிக்கையின் நியாயத்தை ஏற்றுக் கொண்டு பொதுக்கட்டமைப்பைப் புலிகளுடன் மேற்கொள்ளுமாறு அரசுக்கு அழுத்தம் கொடுக்கின்றார்கள். இக்கட்டமைப்பில் முஸ்லிம்களுக்குரிய இடம் கொடுக்கப்படும் எனவும் புலிகள் உறுதியளித்துள்ளனர்.

ஆனால் தாங்களும் இதில் கையெழுத்திட வேண்டும் என்று முஸ்லிம் அரசியல் வாதிகள் கூறி வருகின்றனர். புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி என்று இல்லா திருந்திருக்குமானால் பொதுக்கட்டமைப்புப் பற்றிய சிந்தனையே எழுந்திருக்காது. அவ்வாறான நிலையில் எந்தப் பொதுக்கட்ட மைப்பில் தாங்கள் கையெழுத்திட வேண்டும் என்று கேட்பர் ? சிறிலங்காவின் அம்பாந்தோட்டை, காலி போன்ற பகுதிகளில் முஸ்லிம்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அங்கும் பொதுக்கட்டமைப்பு வேண்டும் என்று இம் முஸ்லிம் தலைவர்கள் கேட்பார்களா? கேட்கமாட்டார்கள்.

புலிகள் கேட்பதில் பங்கு கேட்பதில் ஆசை அவர்களுக்கு. ஏனெனில் புலிகளின் தூய்மையான செயற்பாடுகளை உலகம் பார்த்து வியந்து நிற்கின்றது. பொதுக்கட்டமைப்பில் புலிகள் மட்டும் கைச்சாத்திட்டால் தாங்கள் (முஸ்லிம் அரசியல்வாதிகள்) இதில் சம்பந்தப்படவில்லை என்பதை மக்கள் புரிந்து கொள்வர். தங்களின் இருப்புக் கேள்விக்குறியாகிவிடும் என்பது யதார்த்தமாகி விடும்.

இஸ்லாமிய இளைஞர் சமூகம் யதார்த்த நிலையை ஆராய வேண்டும். வெறும் உணர்ச்சிகளுக்கு அடிமைகளாகி விடக்கூடாது. முஸ்லிம் தலைமைகள் எவ்வாறு நடந்தால் இஸ்லாமிய சமுதாயம் விடுதலை பெறும் என்பதைச் சிந்திக்க வேண்டும். விடுதலை வேண்டும் என்றால் சிங்களத்துக் கட்சிகளை கைவிட வேண்டும். விடுதலைக்குப் போராடுபவர்களுடன் தூய்மையான உறவை வைத்துக்கொள்ள வேண்டும்.

தமிழீழம் விடுதலை பெறும் பொழுது தமிழீழத்தாயகத்தில் வாழும் இஸ்லாமியர்களும் விடுதலை பெறுவார்கள் என்பது உறுதி. இதற்கான பங்களிப்பை இஸ்லாமிய இளைஞர்கள் வழங்க வேண்டும். விடுதலைக்கான இப்பயணத்தில் விடுதலைப்புலிகளுடன் தான் பேச வேண்டும்.

விடுதலைக்குப் பின் இஸ்லாமிய மக்களின் உரிமைகள் எவ்வாறு பாதுகாக்கப்படும் என்று கேட்கின்ற உரிமை இஸ்லாமிய மக்களுக்கு உண்டு. அதே நேரம் இஸ்லாமிய மக்களது நியாய பூர்வமான உரிமைகள் நிலை நாட்டப்படுவதற்கு அவர்களுடன் கை கோர்த்துச் செயற்பட வேண்டிய கடப்பாடு தமிழ் மக்களுக்கும் உண்டு.

எனவே இன்றைய இஸ்லாமிய சமூகம் யதார்த்த நிலைமைகளை உணர்ந்து செயற்பட வேண்டியது காலத்தின் தேவையாகும். குறிப்பாக இவ்விடயத்தில் முன் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டியது இஸ்லாமிய இளம்தலைமுறையின் பொறுப்பாகும்.

# மட் – இருட்டுச்சோலைமடு விஷ்ணு வித்தியாலய கல்வி வளர்ச்சியில் பெற்றோரின் பங்களிப்பு அவசியம்

**மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் அதிபர், ஆசிரியர்கள் எவ்வளவு அக்கறையோடு கற்பித்தல் நடவடிக்கையினை மேற்கொண்டாலும் பெற்றோர்களின் பங்களிப்பு பிரதானமானதாகும். பெற்றோர்கள் மாணவர்களின் கல்வியில் அக்கறை செலுத்தி தினமும் பாடசாலைக்கு அனுப்ப வேண்டும்.**

**ஆனால் இந்தப் பாடசாலையில் இது பெரும் குறைபாடாக இருக்கிறது என்கிறார் மட்.இருட்டுச்சோலைமடு விஷ்ணு வித்தியாலய அதிபர் பூ.ஏகாம்பரதாசன். இந்தப் பாடசாலைக்கு நேரடியாக சென்றுச் பகிர்ந்து கொண்ட விடயங்கள் இவை.**




**மட்.இருட்டுச்சோலை மடு விஷ்ணு வித்தியாலய அதிபர் பூ.ஏகாம்பரதாசன் கருத்து தெரிவிக்கும் போது:-**



எங்கள் பாடசாலை 1992ம் ஆண்டு ஓலைக்குடிசைப் பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டு அதிபராகவும், ஆசிரியராக ஒரே ஒருவரினால் இப்பாடசாலை இயங்கி வந்தது. ஆரம்பத்தில் சுமார் 45மாணவர்களைக் கொண்டு தரம்-01 முதல் படிப்படியாக ஒவ்வொரு வருடமும் தரமுயர்த்தப்பட்டு தற்போது ஆரம்ப பாடசாலையாக தரம்-05 வரையுமான வகுப்புக்களில் 238மாணவர்கள் கல்வி பயின்று கொண்டிருக்கின்றார்கள்.

இங்கு தற்போது ஆசிரியர் வளம் போதியளவு நிரப்பப்பட்டு உள்ளது. ஆரம்ப காலத்தில் காணப்பட்ட பௌதீக வளப்பற்றாக் குறையும் தற்போது ஓரளவு நிவர்த்தியாக்கப் பட்டு கொண்டு வருகின்றது. பாடசாலையில் ஆரம்பத்தில் நிலவிய ஆசிரியர் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்வதன் பொருட்டு இப்பிரதேசத்திலுள்ள தொண்டராசிரியர்களின் உதவி போதுமானளவுக்கு கிடைத்தது. அவர்களின் உதவியைக் கொண்டு மாணவர்களின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை ஓரளவு முன்னெடுத்துக் கொண்டு சென்றோம். அவர்களில் சிலரின் உதவி இன்றும் எங்கள் மாணவர்களுக்குக் கிடைத்துக் கொண்டுதான் இருக்கின்றது. எங்கள் பாடசாலையில் நிலவிய கட்டடப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு அரசசார்பற்ற நிறுவனங்கள் கல்வி திணைக்களகத்துடன் இணைந்து செயற்படுகின்றது. இதன் பொருட்டு நெக்கோட்,சி.ஏ.ஆர் போன்ற நிறுவனங்கள் போதியளவு கட்டடம், அதிபர், ஆசிரியர் விடுதி போன்றவற்றை அமைத்துக் கொண்டிருக்கின்றது.

அத்தோடு சிறுவர் பூங்கா, குடிநீர் கிணறு போன்றவற்றையும் அமைத்து எங்கள் மாணவர்களின் கல்விக்கு பல வழியிலும் உதவிகளைச் செய்து வருகின்றன. இதையிட்டுச் இச்சந்தர்ப்பத்தில் நிறுவனத்தினருக்கும், கல்வி திணைக்களகத்தினருக்கும் பொதுமக்கள் சார்பாக நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எங்கள் பாடசாலைக்கு தற்போது போதியளவு ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அதிலும் அனேகமானவர்கள் நகர்புறங்களில் இருந்து வருபவர்கள். இவர்கள் அனைவரும் சேவை மனப்பாங்கோடும், அர்பணிப்போடும் மாணவர்களின் எதிர்காலத்தின் நன்மைக்காக தங்களின் சிரமத்தைப் பாராது பின்னேர வகுப்புக்களையும் நடாத்தியும் வருகின்றார்கள்.

இவர்களுடைய சேவையும் அயராத முயற்சியும் வரவேற்கதக்கது. எங்கள் ஆசிரியர் குழாமிற்குள் எவ்வித வேற்றுமையுமின்றி ஒற்றுமையோடு அதிபரின் பணிப்புரையின் கீழ் தங்களின் பணிகளில் ஈடுபட்டு வருகின்றார்கள். அத்தோடு பாடசாலையின் புறக்கீர்த்தி வேலைப்பாடுகள் நிருவாகப்பணி ஆகியவற்றிலும் ஆசிரியர்கள் பங்கெடுத்துக் கொண்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.


இப்பிரதேச பெற்றோர்களின் வறுமை நிமிர்த்தமாகவும், கல்வியறிவின்மையாலும் மாணவர்களின் கல்வியில் பெற்றோர்கள் அக்கறை காட்டுவது மிகவும் குறைவாக உள்ளது. இதற்கு பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தை வளப்படுத்திக் கொடுப்பதற்கு ஆசிரியர்கள் முயற்சி எடுப்பதைப் போன்று அவர்களும் முயற்சி எடுப்பார்களாயின் இனிவரும் காலங்களிலாவது இப்பிரதேசத்தையும் கல்விச் சமூகமாக மலர வைக்கலாம்.

முக்கியமாக மாணவர்கள் வரவு, பாடசாலையில் கற்றவற்றை வீட்டில் மீட்பதில்லை. ஆசிரியர், அதிபருடன் பெற்றோர்கள் தொடர்பில்லை போன்றவற்றினால் மாணவர்களின் கல்வி நடவடிக்கை மந்தகதியில் காணப்படுகின்றது. போர்ச்சூழல் காலத்தில் இப்பாடசாலை மட்டுமல்ல இப்பிரதேச மக்கள் கூட பெரும் அவதியுற்றனர்.

இராணுவத்தினரின் கெடுபிடித்தனங்கள், சோதனைச்சாவடிகள் போன்றவற்றால் நகரப் புறங்களில் இருந்து வருகின்ற ஆசிரியர்கள் வரமுடியாத நிலையும் ஏற்பட்டிருக்கின்றது. அந்த காலத்தில் வெடிச்சத்தம் கேட்டால் ஒரே அச்சத்தில் இருந்து தான் பாடசாலை நடாத்தினோம். அந்த நேரத்தில் மாணவர்களின் வரவு மந்தகதியில் காணப்பட்டமையால் கல்வி நடவடிக்கைகள் யாவும் வீழ்ச்சி கண்ட நிலையிலே இருந்தது.

இந்த நிலையில் மாணவர்கள் உளவள ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளனர். தற்போது ஆசிரியர்கள் வளம், பௌதீக வளம் போன்றன இருந்தும் கல்வியின் பெறுபேறுகள் எதுவும் வெளியிடாத நிலையிலுள்ளன. அடுத்து வரும் ஆண்டுகளில் மாணவர்களின் பெறுபேறுகள் நல்லமுறையில் அமையும் எனவும் இவ்விடத்தில் கூறிநிற்கின்றேன்.

**பாடசாலையின் சிரேஸ்ட ஆரம்பக்கல்வி ஆசிரியை திருமதி.வி. மகேஸ்வரன் கருத்துத் தெரிவிக்கும் போது:-**



பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட காலம் போர்ச் சூழலாகையினால் ஆசிரியர் பற்றாக்குறையும், வளப்பற்றாக்குறையும் நிறைந்து காணப்பட்ட பாடசாலைகளில் இதுவுமொன்று. போர்ச்சூழலினால் இப்பிரதேசத்து மக்கள் எப்போதுமே அச்சத்தின் மத்தியில் இருந்தனர். வெடிச்சத்தம் கேட்டால் வீழ்ந்தடித்து ஓடிய நிலையிலே இருந்ததால் தங்கள் பிள்ளைகளுக்குகல்வி கற்பிக்க வேண்டும் ஆர்வம் எவருக்கும் இருக்கவில்லை. அவரவர் உயிரை மட்டும் தப்பினால் போதும் என்ற நோக்கத்திலே மக்கள் இருந்தமையினால் அப்போது மாணவர்களின் கல்வியில் வீழ்ச்சியடைந்த அதே நிலமை தற்போது மாறாத நிலையில் இருக்கின்றது. எதிர்வரும் ஆண்டுகளின் இப்போது இருக்கும் மாணவர்களின் கல்வியின் பெறுபேறுகளை நிர்ணயிக்க முடியும் என எதிர் பார்க்கிறோம்.

எங்கள் பாடசாலை தற்போது பௌதீக வளத்திலும், மாணவர்களின் கல்வி நடவடிக்கையிலும் முன்னெடுத்துச் செல்வதை அவதானிக்க முடிகின்றது. இங்கு பாடசாலை சுற்று வேலியில்லாமையினமையினாலும், சுற்றுப்புறச் சூழலில் மக்களின் குடியேற்றங்கள் இன்மையினாலும், பாடசாலைக்குப் பாதுகாப்பு இல்லாத நிலையிலும் இருக்கின்றது. இதனால் திருடர்களால் இரு தடவைகள் பாடசாலையின் கதவுகள் உடைக்கப்பட் டு பாடசாலை உபகரணங்கள் களவாடப்பட்டுள்ளது. இப்பிரதேசத்திற்கு மின்சார வசதியில்லை, தொலைபேசி வசதியில்லை, போக்குவரத்து வசதியில்லை, ஒழுங்கான முறையில் சீரமைக்கப்பட்ட வீதிகூட இல்லாமையினால் பல வகையில் எங்கள் பாடசாலை மாணவர்களின் கல்வி பின்தள்ளப்பட்டுக் காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது.


இப்பாடசாலை மாணவர் வரவு அடிக்கடி குறைந்து காணப்படுகின்றது. வேளாண்மை அறுவடைக்காலம், கோயில் திருவிழாக்காலம், விசேட பண்டிகை தினங்கள் போன்ற நேரங்களில் மாணவர்கள் பாடசாலைக்கு வருவது குறைவு. அத்தோடு பாடசாலை அபிவிருத்திச் சங்க கூட்டம், மற்றும் மாணவர்களின் கல்வி செயற்பாடுகள் சம்பந்தமாக பெற்றோர்கள் பாடசாலைக்கு வந்து அதிபர், ஆசிரியர்களுடன் கலந்துரையாடுவது குறைவாகவுள்ளது. தற்போது இப்பிரதேச பாடசாலைகள் அனைத்திலும் உலக உணவுத் தாபனத்தின் சிபாரிசின் கீழ் மதிய உணவு வழங்கப்படுகின்றது.

மற்றும் பாடசாலை உபகரணங்கள் யாவும் அரசசார்பற்ற நிறுவனங்கள் அடிக்கடி வழங்குகின்றது. மற்றும் கட்டட வேலைகள் யாவும் மிகவும் சிறப்பான முறையில் நடை பெற்றுக்கொண்டிருக்கிறது. பாடசாலையின் ஆரம்ப காலத்தை விட தற்போது சகல வழிகளிலும் அபிவிருத்தி திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு கொண்டு வருகின்றனர். இதன் காரணமாக தற்போது

**கவி**

மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளும் முன்னேற்றகரமாகக் காணப்படுகின்றது. இங்கு ஆசிரியர்கள், மாணவர்களுக்கான தளபாடங்கள்தான் பற்றாக்குறையாகவுள் ளது. மழை காலங்களைத் தவிர ஏனைய நேரங்களில் குடிநீர் தட்டுப்பாடு நிலவுகின்றது. இவையனைத்தும் காலப்போக்கில் நிவர்த்தி செய்யப்படும் என எதிர்பார்க்கின்றோம்.

**பாடசாலையின் சிரேஸ்ர ஆரம்பக் கல்வி ஆசிரியர் வி.சுமதீசன் கருத்து தெரிவிக்கும் போது:-**



பாடசாலையின் ஆரம்பகாலத்தில் போர்ச் சூழல் பல வகையான இன்னல்கள் மத்தியில் இயங்கிய இப் பாடசாலையானது தற்போது ஓரளவு அபிவிருத்தி வேலையிலும் மாணவர்களின் கற்றல் கற்பித்தலிலும் முன்னேற்றம் அடைந்து வருகின்றது. அப்போதைய தாக்கத்தின் விளைவால் இதுவரை மாணவர்களின் பெறுபேறுகள் எதையும் காணமுடியாது இருக்கின்றது. இருந்தும் இனி வரும் காலங்களில் மாணவர்களின் பரீட்சை பெறுபேறுகள் சிறந்த முறையில் அமையும். இதற்கு ஆசிரியர்களாகிய நாங்கள் முடிந்தளவு முயற்சி எடுத்துக் கொண்டு இருக்கின்றோம்.


எங்களது பாடசாலை பாதுகாப்பற்ற பிரதேசத்தில் அமைந்திருப்பதனாலும், சுற்று வேலியின்மையாலும், அண்மையில் குடியேற்றங்கள் இல்லமையிலும் திருடர்களால் கதவுகள் சேதமாக்கப்பட்டு பாடசாலை உபகரணங்கள் சில சூறையாடப்பட்டிருக்கின்றது. இதனுடைய பின்னணி எதுவும் தெரியாத நிலையிலிருப்பதினால் பாடசாலையில் பெறுமதியான பொருட்கள் எதையும் வைத்துக் கொள்ள முடியாது இருக்கின்றது. அத்தோடு திருடர்களின் அச்சத்தின் மத்தியில் இருக்க வேண்டியுள்ளது.

இப்பிரதேசத்தில் போக்குவரத்து பஸ், மின்சாரம், தொலைபேசி என்பன முற்றாக இல்லமால் இருப்பதனால் மாணவர்கள், பொதுமக்கள், எனப் பலரும் பெரும் அசௌகரியங்களை எதிர் கொண்டு வருகின்றனர். அத்தோடு இங்கு காணப்படுகின்ற வீதிகள் கூட ஒழுங்கான முறையில் சீரமைக்கப்பட்ட முறையிலில்லை. இதனால் ஆசிரியர்கள் ஆகிய நாங்கள் பாடசாலைக்கு வரும் போது பலத்த சிரமங்களை எதிர் கொண்டுதான் வருகின்றோம். இவ்வீதியை மட்டுமாவது சம்மந்தப்பட்ட அதிகாரிகள் திருத்தி அமைத்து பொது மக்கள் ஆசிரியர்களின் பயணங்களை இலகுபடுத்த எதிர்வரும் காலங்களிலாவது உதவி செய்வார்களா என்பது கேள்விக் குறியாகவே உள்ளது.

எங்கள் பாடசாலையில் முக்கியமாக தற்போது தளபாடங்கள் பற்றாக்குறையாகவுள்ளது. ஆசிரியர்கள் மாணவர்களுக்கு தளபாடமின்றி உடைந்து சேதமாக்கப்பட்டவைகளைத்தான் பயன்படுத்த வேண்டியுள்ளது. இப்பிரதேசத்திலுள்ள பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் கல்வியில் அக்கறை காட்டும் விதம் குறைவாகவேயுள்ளது. அதாவது மாணவர் வரவில் அடிக்கடி மாற்றம். ஏற்படுகின்றது. இதனால் தற்போதைய கல்விச் சீர்திருத்தத்திற்கு அமைய கணிப்பீடுகள் செய்ய முடியாதுள்ளது. தொடர்ச்சியாக மாணவர்களின் வரவு இருந்தால் மாத்திரமே அவற்றை மேற்கொள்ளலாம். இல்லையேல் அவையனைத்தும் வீழச்சியிலேயே சென்று கொண்டிருக்கும் என்பது உண்மையமகும்.

மற்றையது பாடசாலைக்குச் சுற்று வேலியில்லாமையினால் பாடசாலை வளாகம் ஒரு பாதையாக மாறிவிட்டது. இதனால் பாடசாலை நேரத்திலும் ஏனைய நேரத்திலும் மக்களின் நடமாட்டம், சைக்கிள், மோட்டார்ச் சைக்கிள்களால் பாடசாலை நேரத்தில் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு தடையாக இருக்கின்றன. இதற்கு முதல் சுற்று வேலியமைக்க அரசசார் பற்ற நிறுவனங்களாவது உதவி புரிய வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

**பாடசாலை மாணவர்களின் பெற்றோர் சார்பாக ஞா.துரைராசா கருத்து தெரிவிக்கும் போது:-**



எங்களின் பாடசாலையானது ஊற்றுமடு, களிமடு, எண்ணம்பாலபூவல், கற்சேனை, காயான்காடு, பொன்னாங்கண்ணித் தோட்டம், சின்னகாலபோட்டமடு, இத்தியடிச் சேனை போன்ற பல சிறிய கிராமங்களைச் சேர்ந்த ஐந்து கிராம உத்தியோகர்த்தர் பிரிவிலுள்ள மாணவர்கள் கல்வி கற்றுக் கொண்டு வருகின்றானர். இவர்கள் சுமார் 3-5 கிலோமீற்றர் தூரத்திலிருந்து வரவேண்டியுள்ளமையால் மழைகாலங்களில் பாதையும் சீரின்மையாலும் மற்றும் வயல் வெளிகளின் காணப்படும் ஆறு, அருவி, ஓடைகளில் நீர் நிறைந்து வெள்ளமாகக் காணப்படுகின்றமையால் மாணவர்களின் போக்குவரத்து மிகவும் கஸ்ரமாகவும் அச்சமாவும் அமைந்திருக்கிறது.

இப்பாடசாலையின் ஆரம்பகாலமான போர்ச் சூழல் பெரிதும் அவதியுற்ற நிலையிலும் மக்கள் நின்மதியற்ற நிலையில் இருந்தனர். அப்போது மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் யாவும் முற்றாகப் பாதிக்கப்பட்ட நிலையே காணப்பட்டது. போதியளவு பௌதீக வளங்கள் இல்லை. மனதிலே ஒரே பயம் நகரப்புறங்களுக்குச் செல்லமுடியாது. இப்படி பலவிதமாக மக்கள், மற்றும் பாடசாலை மாணவர்கள் எனப்பலரும் அவதியுற்று இருந்தனர்.

பாடசாலை ஆரம்பகாலத்தில் (1992) இருந்தே ஆசிரியர் பற்றாக்குறை நிலவிய இதனை நிவர்த்தி செய்வதற்காக பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் சிபார்சுடன் தொண்டர் ஆசிரி யர்கள் பலர் நியமிக்கப்பட்டு சிறந்த சேவையினை தன்னலம் கருதாது வேதனமின்றி செய்து வந்தார்கள். அவர்களின் சிலரின் உதவி தற்போது எங்கள் பாடசாலைக்கு கிடைத்த வண்ணமே இருக்கின்றது. அவர்களின் சேவையினாலும், முயற்சியினாலும் மாணவர் களின் கல்வியை சிறந்த முறையில் கொண்டு ஏனைய பாடசாலைக்கும் எங்கள் பாடசாலையிலிருந்தும் மேலதிக கற்றலுக்காக அனுப்பி வைத்திருக்கின்ற பெருமை தொண்டர் ஆசிரியர்களையே சாரும். தற்போது எங்கள் பாடசாலையிலிருக்கும் ஆசிரியர்களில் அனேகமானவர்கள் நகரப்புறங்களிலிருந்து வருகின்றவர்கள் இவர்கள் தாங்கள் சிரமங்களைப் பாராது எங்கள் மாணவர்களின் எதிர்காலத்திற்காக முன்னின்று உழைக்கின்றார்கள். ஆரம்பத்தை விட தற்போது மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளும் முன்னேற்றகரமாக இருப்பதாக அறிய முடிகிறது.

அத்தோடு இப்பாடசாலையில் இருக்கும் அனைத்து ஆசிரியர்களும் ஒற்றுமையோடு ஒருவருக்கொருவர் ஒத்துழைப்புடன் மாணவர்களுக்கு கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகின்றனர். நிருவாகத்திலும் எவ்விதபங்கமுமின்றி அதிபரின் ஆலோசனைப்படி ஏனைய ஆசிரியர்கள் தங்கள் கடமைகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இப் பாடசாலையில் பௌதீக வளங்கள் ஓரளவு நிரப்பப்பட்டு வருகின்றது. தற்போது முக்கியம் சுற்றுவேல. வரட்சியான காலத்தில் குடிநீர் தட்டுப்பாடு, ஆசிரியர்கள், மாணவர்கள் தளபாடங்கள் பற்றாக்குறை போன்ற குறைபாடுகள் காணப்படுகின்றது. மற்றும் எங்கள் பாடசாலையில் நீண்ட காலமாக நிலவிய கட்டடப்பற்றாக் குறை கடந்த வருடம் ஒரு கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. தற்போதும் கட்டட வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. எனவே இது போன்று இங்கு நிலவும் ஓரிரு குறைபாடுகளையும் விரைவில் நிவர்த்தி செய்ய கல்வித் திணைக்களம் வழியமைக்கும் என இச்சந்தர்ப்பத்தில் கேட்டு நிற்கின்றேன்.

# அன்பே...!



அன்பே...
உன் அழகை
வர்ணிக்க
எனது வார்த்தைக்கு
வலிமையில்லை...
பெண்ணே....
ஒரு வயலின் கொடு
வாசித்துக்
காட்டுகிறேன்.
*வி.செந்தூரன்*
*மண்டூர் - 01.*

# மறந்து விடு

ஓ... மனமே
அவளை மறந்து விடு
இல்லையேல் நீ
இறந்து விடு.
மறக்காமலும்
இறக்காமலும்
அவள் கொடுத்த
ஞாபகங்களைச் சுமந்து
என் வாழ்வை
ரணப்படுத்தாதே.
இதயமற்ற அவளால்
எரியுது இதயம்.
எரியும் இதயத்துக்குள்
அவள் நினைவு உதயம்.
ஓ... மனமே
அவள் என்னை
மறந்து விட்டாள்.
ஆதலினால் அவளை
நீயும் மறந்து விடு.
*கவிப்புயல்*
*ஐ.முகைதீன்*
*ஏறாவூர் - 02.*

# நட்பு

முள்போன்று குத்துகின்ற
வார்த்தைதனை நீ பேசி,
முடித்துவிட்ட நம் நட்பை,
மறுபடியும் தொடர்வதென்றால்,
மனம் பாவம் என்ன செய்யும்?
மறுபடி தொடர்ந்து விட்டால்
நீ கொட்டிய வார்த்தையது
மனதை விட்டு அழிந்திடுமா?
தினம் நீ எனைப் பார்க்கையில்
நித்தம் என் மனசு
எரிமலையாய் வெடிக்கின்றது.
இத்தனையும் நிகழ்ந்த பின்னே
இனி மீண்டும் தொடர்ந்து விட்டால்
தூய்மையில்லை எம் நட்பு.
*ரி.கிருபானந்தி*
*கோடைமேடு.*

# சுகமே...



அதிகாலைத் தூறலில்
ஆனந்தமாய்
நனைவதும் சுகமே.....
வைகறைப் பொழுதில்
பெயரறியாக் குருவியின்
இன்னிசை
கேட்பதும் சுகமே.....
அந்தி வான
அழகு மஞ்சள்
ரசிப்பதும் சுகமே.....
கொஞ்சித் தவழும்
குழந்தையின் மழலைமொழி
கேட்பதும் சுகமே......
தூரமாய்ப் போன
அருமைத் தோழியின்
காகிதத்திற்காய்......
தினந்தோறும்
காத்திருப்பதும் சுகமே....
*எஸ்.டனிதா*
*களுதாவளை.*

# குணம் மாறலாமா?

காலம் மாறலாம்
கருத்துகள் மாறலாம்
கோலம் மாறலாம்
கொள்கைகள் மாறலாம்
உலகில் உயர்ந்தோனே
மனிதா
உன் குணம் மாறலாமா?
*க.கமலதாசன்*
*வந்தாறுமூலை.*

# மச்சானைக் காணலையே...!

கிட்டங்கிக் கெளுத்தி மீன்வாங்கி
மண்டூர்க் கீரை வாங்கி
மச்சான் வருவாரென்று
விறகடுப்பில் நான் சமச்சேன்
காரைக் குளத்து
சம்பா நெல்லுக் குத்திச்
சோறுமாக்கி ஆறாம மூடிவைச்சேன்
மச்சான் வரக்காணலையே...
வயலுக்குப் போன மச்சான்
மாலபட்டும் வரலையே....
கிட்டங்கி காவலரணில்
பிடிச்சிருப்பாங்களோ இல்லை
வேலை செய்ய மறிச்சிருப்பாங்களோ
மாலை கருகலாச்சி
பாதை மூடும் நேரமாச்சி
வயலுக்குப் போன மச்சான்
இன்னும் வரக்காணலையே....
பார்த்துப் பார்த்துக் காத்திருக்கேன்
என்னவரைக் காணலையே.....
என் மனசு பதறுதடி
என்னாச்சோ தெரியலையே.
*பாண்டியூர் புலேந்திரா*

# என் கண்ணீர்த் துளிகள்

ஒரு கன்னிக் பெண்ணைக்
காதலிப்பதற்காக
நானும்
காதல் பரீட்சை
எழுதியவன் தான்.....
ஆனால் அதில்
தோல்வி தான்
நான் அடைந்தேன்.
எழுதிய பரீட்சைக்கு
கிடைத்த புள்ளிதான்
என் கண்களால்
வந்த கண்ணீர்த் துளிகள்.
*ந.துரைராசசிங்கம்*
*கோட்டைக்கல்லாறு - 01.*


# சுதந்திரம் வேண்டும்

அதோ அந்தச்
சிட்டுக் குருவியைப் பார்
தனது இரு சிறகுகளால்
அழகாகச்
சுதந்திரமாய்...........
வானத்தில் பறப்பதைப் பார்
ஆகா! எத்தனை சுதந்திரம்
அந்தச் சிட்டுக் குருவிக்கு........
இறைவனால் படைக்கப்பட்ட
ஓர் உயிர்தான் அந்தச் சிட்டுக்குருவி
இறைவனால் படைக்கப்பட்ட
பெண்ணுக்கு ஏன்
சுதந்திரம் இல்லை?
பெண்களை ஏன்
'கூட்டில்' அடைக்கிறீர்கள்?
அந்தச் சிட்டுக் குருவியைப் போல்
சுதந்திரமாய் வாழ
இந்த மானுடப் பெண்ணுக்கும்
சுதந்திரம் வேண்டும் இனி...!
*பி.இந்துஷா*
*குடியிருப்புமுனை.*

# 'கவிதை நேரம்'

இரவினில் இனிமையான
கனவு காணும் போதும்........
பச்சைப் புல் வெளியில்
தனிமையாக நடக்கும்
போதும்........
இரவினிலே நீந்தி வரும்
பால் நிலாவைப்
பார்க்கும் போதும்........
கோபத்தின் உச்சிக்கு
நான் போகும் போதும்............
இயற்கைக் காட்சிகளை
இதமாக ரசிக்கும் போதும்...........
மெல்லிய தென்றல் என்னை
மெதுவாகத் தீண்டும்
போதும்.........
கவிதைக்குள் கவிதையாக
நான் உறவாடும் போதும்..........
என்னையறியாமலே எனக்கு
கவிதை பிறக்கிறது.
*உஷாந்தினி உதயகுமார்*
*ஏறாவூர் - 05.*

# அலைபாயும் உனக்கு...!



புன்னகைக்கும் போது
நீ
புறப்பட்டுக் கொண்டிருக்கும்
பாதை
வெறும் பாலைவனப் பாதை
அங்கு கானகம்
இருகென்றா பறக்கிறாய்?
சுடு மணலையும்
எரிந்த சூரையையும்
பாலில்லாக் கள்ளியையும்
தவிர - நீ
எதிர்பார்த்துச் செல்லும்
விடையமெல்லாம்
வீணானது தான்
நீ வந்த பாதையை
நோக்கிப் பறந்து செல்
இக்கரை மாட்டுக்கு
இக்கரையே
பசுமை அதிகத்தைக்
கொடுக்கும்
ஓ.... உடனே இனி
வெறுத்து விடு அந்தப்
பாலை வனப் பயணத்தை.
*பே.உதயன்*
*பாலையடிவட்டை.*

# நீ ஒரு புதையல்



உன் நாமம்
எனக்கு பிரணவம்!
உன் கண்கள்
எனக்கு கவிதைகள்!

உன் மென்சிரிப்பு
எனக்கு ரோஜாக்கள்!
உன் கன்னங்கள்
எனக்கு அப்பிள்!

உன் கூந்தல்
எனக்கு மைதானம்!
உன் மூக்கு
எனக்கு கிளிக் மவுஸ்!

உன் நெஞ்சம்
எனக்கு பஞ்சனை!
உன் இடை
எனக்கு கொழு கொம்பு!

உன் மச்சம்
எனக்கு மண் வாசனை!
நான் சொல்லாத மிச்சமெல்லாம்
என் தேடல்கள்!

மொத்தத்தில் நீ
எனக்கொரு புதையல்!
நான் சாகும் வரைக்கும்
உனக்காகக் காதலை
அகழ்ந்து கொண்டேயிருப்பேன்.
*வி.எஸ்.ஏ.ரவிசங்கர்*
*ஆறுமுகத்தான் குடியிருப்பு.*

# ஆத்திரமாய் இருக்கிறது...!

என்மீது எனக்கே
ஆத்திரமாய் இருக்கிறது.
அம்மா அரிசி இல்லையென்று
அழுதபடி இருக்கும் போது........
அண்ணா வேலை தேடி
அலைந்து அலுத்து நிற்கும்போது........
அக்கா சீதனத்தின் கொடுமையினால்
அழுது கொண்டு இருக்கும் போது......
நான் மட்டும் கவிதை எழுதி எழுதி
நாளும் காலத்தைக் கழிக்கும் போது.......
இதையிங்கே நினைக்கும் போது........
என்மீது எனக்கே
ஆத்திரமாய் இருக்கிறது.
*முருகமூர்த்தி வாணி*
*மண்டூர்.*

# மௌனம்



நீ
மௌனம் சாதிக்கும்
ஒவ்வொரு வினாடியும்
நீ
என்னை விட்டுப்
பிரிகிறாய் என்ற
ஏக்கம் என்
மனதைக் கிள்ளுதடி
*ராஜு*
*நாவிதன்வெளி.*




# கவிநாதம்

# மரண ஊர்வலம்

என்றோ ஒருநாள்
செத்துப்போன
என் காதல் பயிரை
எரிக்கவும் வழியில்லாமல்
புதைக்கவும் மனமில்லாமல்
இப்போதும் நான்
மரண ஊர்வலம்
நடத்துகின்றேன்........
இன்னுமோர் காதலுக்கு
இடம் கொடாமல்!
*தி.கண்ணன்*
*எருவில்.*

# நட்பு



நட்பு என்பது
மூன்றெழுத்து
சோர்வு என்பது
மூன்றெழுத்து
பிரிவு என்பதும்
மூன்றெழுத்து
அதைப் புரிந்து
நடப்பதோ
நம் தலையெழுத்து.
*சி.இதயவதனி*
*வவுணதீவு.*

# பண்பாய் நடவுங்கள்

ஆடவனைக் கண்டு
அடைய வேண்டுமென
ஆசை கொண்டு
அனுபவிக்க விரும்புவது தான்
உங்கள் கண்கள்
உலகத்தில் எத்தனையோ
ஆடவரை நீங்கள்
ஆட்டிப் படைக்க வேண்டுமென
கண்களை உருட்டி
கவர்ச்சியைக் காட்டி
மயக்க வைக்கும்
மங்கையரடி நீங்கள்
ஓ..... என்னருமைக்
'கயல் விழிகளே!'
அடக்கமாக இருங்கள்
மரியாதையாகப் பேசுங்கள்
பண்பாய் நடவுங்கள்
அன்பாய்ப் பழகுவேன்.
*பி.கஜமுகன்*
*நாவிதன்வெளி.*

# காதற் கோட்டை

மனசுக்குள் காதலிக்கும்
நானும் நீயும்
மனம் விட்டுப் பேசுவது
எப்போதடி கிளியே...?
எண்ணத்தை எழுத்தாக்க
நீ நினைக்காத போது
நான் காதலை எழுதென்று
காகிதம் தந்தேனடி
கசக்கி ஏன் எறிந்தாய்....
கசக்கப்பட்ட காகிதமாக
இன்று நானும்..........
*வ.ருசாந்தன்*
*அம்-தாண்டியடி.*

# உனக்கென்ன கோபம்

கடல் தாயே
உனக்கோர் கடிதம்...!
உலகுக்கே உயிர் கொடுத்தாய்
ஏன் இங்கு பொங்கி வந்தாய்
உயிராய் உனை நினைத்த
உயிர்களையே ஏன் எடுத்தாய்...?
கடவுள் என கருதி நிற்க
மிருகமாய் கொன்று சென்றாய்
இந்த மனிதர்மேல்
உனக்கென்ன கோபமோ?
எம்மிடம் சொல்லும்மா பதிலை!
*அ.லோஜினி*
*மட்-ஆயித்தியமலை.*

# இவர்களுக்கு உய்வில்லை

தமிழுக்கும் அமுதென்று பேர்
அமிர்தத்திலும் விசம் கலக்கும்
அநியாயத்தைக் கேளீர்!

அசுரனை அழித்த திருநாளில்
அவதாரம் எடுத்த நரகாசூரர்களே
உங்கள் நேயப்பட்டியலில்
மனிதத்தின் விலை தான் என்ன?

பசுங்கதிருக்குள் ஊடுருவும்
புல்லுருவி ரூபமெடுக்கும்
எம்மினத்தின் இடையே
மனிதமின்று மரணிக்கப்பட்டுள்ளது.

உதிரம் உறுஞ்சும் அட்டையாயும்
சாறு குடிக்கும் குருவிச்சையாயும்
ஒட்டி வாழும் ஒட்டுண்ணிகளாயும்
உலவுகின்ற இங்கே எதிரிகள்.

இருந்தும் இந்த எதிரிகளால்
எதனையுமே சாதிக்க முடியாது
இவர்களது வாழ்நாள் முழுவதையும்
எம்மவரின் கருங்குளல்கள்
பாடி முடிக்கும்.
*வேணி*
*வந்தாறுமூலை.*

# இலட்சியம்

ஆண் மகன்
விலைக்குண்டு
பெண் இங்கு
வெடிகுண்டு
இலட்சம் கொடுத்து
வாழ்வதை விட
இலட்சியத்திற்காக
வாழ்வது மேல்.
*ஈழநாத வாசகி.*

# கொடுமை

முதுமை முற்றிப் பழுத்து
மரணத்தருவாயின்
கையசைப்புகள்...........
போராட்டம் செய்கிறது
அடங்கிப் போவதற்காய்...........

எலும்புடன் தோலும்ஒட்டி
இருப்புமாறிய,
உருவப் போர்வையில்........
உழுத்துக் கிடக்கிறது
உயிருள்ள ஆத்மம்.

வாலிபத்தன்று,
வயிறு கழுவிய உறவுகள்........
முதுமை பிடியேற
உறவறுத்துப் போச்சு
சொத்துக்களைச் சுருட்டி.

பெற்றவைகளும் பேருக்காய்
கடமை செய்து
மாடாய் உழைத்த
மனிசனுக்குத்தான் - இந்த,
கொடுமை ஊசிகள்......
நாளைய மரணத்தை
இன்றைக்கே அறைகூவி.
*செயின் தம்பி ஸியாம்*
*கல்முனை - 06.*


# இதுதான் நட்பா?



உண்மையும்
உயிரும்
உள்ள நண்பா...!
ஏனடா
என்னைப் பிரிந்தாய்
இன்று?
ஓ... நட்பின்
மறுவடிவம்
'பிரிவு' என்றா
'பிரிவு' உனக்கு?
*எம்.ரி.வி*
*தும்பங்கேணி.*



# உலகைக் கவர்ந்த கரும்புலிகள்



**சென்ற வாரத் தொடர்ச்சி........**

வீட்டில் எல்லோரும் அழுதார்கள். அம்மாவால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவரும் அழுதார். இருந்தாலும் சமாளித்துக் கொண்டார்.

தன் பிள்ளை எது செய்தாலும் நன்மைக்காகத்தான் செய்வான் என்பது அம்மாவின் நம்பிக்கை. அந்தத் தாய் இறுதி நாளை நினைத்துப் பார்க்கிறாள். ‘‘அது ஒப்பறேசன் லிபறேசன் காலம். அந்த நேரம் இங்க எல்லா இடத்திலயும் ஆமி, அதனால் இரவில நாங்கள் நேரத்தோடயே படுத்திடுவம். அண்டைக்கும் நாங்கள் படுத்திட்டம்....” ‘‘திடீரென வீடெல்லாம் அதிர பெரும் குண்டுச் சத்தம் எங்களைத் திடுக்கிட்டு எழுப்பிச்சுது. கொஞ்சநேரம் சண்டை நடக்கிறதைப் போல சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. பிறகெல்லாம் அமைதியாகிவிட்டது. ‘‘பொடியள் நெல்லியடிப்பக்கம் ஆமிக்கு நல்லா அடி குடுத்திருக்கிறாங்கள் போல கிடக்கு” என்று எங்களுக்கை கதைச்சுப் போட்டு நாங்கள் படுத்திட்டம்.

அடுத்த நாள் காலையில் நெல்லியடிப் பக்கம் இருந்து வந்த ஒருத்தர் சொல்லி ஊருக்குள்ள அந்தக் கதை மெல்ல மெல்ல என்ர காதுக்கு வந்த போது தான் தெரியும்..... முதல் நாள் உலுக்கி என்ர நித்திரையால் திடுக்கிட வைத்த அந்தக் குண்டுச் சத்தம்.... என்ர பிள்ளையும்... அப்ப அழவும் ஏலாது. எல்லாப் பக்கத்திலையும் ஆமி... அறைக்குள்ள போயிருந்து எனக்குள்ள மட்டும் குமிறிக் குமிறி அழுதன். றோட்டால் ஆமி வாகனங்கள் வாற சத்தம் உமிறிக் கொண்டு கேட்கும். மெதுவாக பின் பக்கத்தால் வீட்டை வந்த சனங்கள் கலைஞ்சு போய் விடுவினம்..... பிறகு வருவினம்.” ம்..... ம்........ என்ர மகன் செத்திட்டான் என்கிறது எனக்குக் கவலைதான். ஆனால் அவன் நாட்டுக்காகத் தானே செத்தவன்...... ‘‘அதை நினைக்கப் பெருமையாத் தான் இருக்கு”

மில்லரின் மாவீரத்தை நாம் உச்சி மீது உவந்து போற்றுகையில் இவரது வெற்றிக்குப் பக்க பலமாக விளங்கிய மாவீரன் கமலைப் பற்றி நாம் சிறிது அறிந்திருப்பது நலம்.

கமல் வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாக்க் கொண்டவன். இவரது தந்தை துரைரெத்தினம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவர். தந்தையது பாதை எமது தாயகத்தை மீட்டு எடுக்க சரியான தீர்வாகாது. என்பதை உணர்ந்த கமல் எமது இயக்கத்திலே தம்மை இணைத்துக் கொண்டு போராடத் தொடங்கினான். பயிற்சியை முடித்து விட்டு மட்டக்களப்புக்குச் சென்று சுமார் இரண்டு வருடங்களுக்கு மேல் பணியாற்றினான். கிழக்கில் எமது இயக்க வளர்ச்சியில் கமலின் பங்கு மிகவும் குறிப்பிடக் கூடியது. மட்டக்களப்பில் மிகவும் சிக்கலான சூழ்நிலைகளிலும் தன் தனித்திறமையினால் எத்தனையோ அரும் பெரும் காரியங்களை ஆற்றியிருக்கின்றான்.

**கமலின் தெய்வீகக் காதல்**

அவன் அங்கு பணியாற்றிய காலத்தில் ஒரு பெண்ணைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அப்பெண்ணுடைய வீட்டிற்கு கமல் செல்வது வழக்கம். ஆரம்ப காலங்களில் நாட்டின் விடுதலைக்காக கமல் தன் உயிரைப் பணயம் வைத்துப் பணியாற்றியது கமலின் பால் அந்தப் பெண்ணின் கவனத்தை ஈர்த்தது. கமல் வீட்டிற்குப் போகும் சமயங்களில் எல்லாம் அன்பாக உபசரித்து கமலுக்கு ஆதரவழித்து, அன்பு செலுத்தினாள். நாட்கள் நகர நகர இருவரும் அன்பால் இறுகப் பிணைக்கப்பட்டனர். ஒருவரை ஒருவர் மனமார நேசித்தனர். உலக வழக்கப்படி கூறினால் ஒருவர் மீது ஒருவர் காதல் கொண்டு இருந்தனர். அப்பெண் கமலின் உயிர் வாழ்வுக்காக எப்போதும் கடவுளைப் பிரார்த்தித்து வந்தாள். ஆனால் ஒரு போதும் கமலின் தீவிரமான போராட்டத்திற்குத் தடையாக இருந்ததில்லை.

மட்டக்களப்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்திருந்த வேளையிலே நெல்லியடி முகாம் மீதான தாக்குதலில் பங்கு பற்ற முன்வந்தான். முதல் நாள் கமலும் லெப் கேணல் திலீபனும் ஒன்றாக இருந்த வேளையிலே லெப் கேணல் திலீபனிடம் ஓர் வேண்டுதல் விடுத்தான். கமல் நான் சில வேளை இத்தாக்குதலில் சாவடைந்தால் என்னை நேசிப்பவளுக்கு அதை உடனடியாகத் தெரிவித்து விடு என்பதாகும். என்ன சத்தியமா வார்த்தைகள் ஏதோ தன் இறப்பைத் தான் அறிந்து வைத்திருப்பது போல் கூறியிருக்கின்றான்.

தாக்குதல் நடவடிக்கைகள் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. மில்லர் மிகவும் கடுமையாக உழைத்தான். இராணுவத்தினர் ஆக்கிரமிப்புக்குள் இருந்த நெல்லியடிப் பகுதிக்கு வெடிமருந்துகளையும், வாகனங்களையும் மிகுந்த சிரமப்பட்டு இரவோடு இரவாகக் கொண்டு வந்து சேர்த்தான். அவ்வேளைகளில் கூட நான் அடுத்த நாள் இறக்கப் போகிறேன் என்ற விடயம் தெரிந்த மனிதனைப் போல் நடந்து கொள்ளவில்லை. கவலையோ, திகைப்போ, பயமோ அல்லது தயக்கமோ அவனிடம் காணமுடியவில்லை. வெடி மருந்துகளை ட்றக் வாகனங்களில் ஏற்றி அவற்றுக்கு இணைப்புக்களைக் கொடுத்து தன்னுடைய சவப் பெட்டிகளைத் தானே தயாரித்துக் கொண்டு இருந்தான்.

**முகாமை நோக்கி மில்லர் படை நகர்ந்தது.**

அன்று பகல் முழுவதும் வெடிமருந்துகளுடன் இரு வாகனங்கள் தயார் செய்யப்பட்டன. குழுக்கள் யாவும் உசார் நிலைக்குக் கொண்டுவரப்பட்டன. நேரம் இரவாகிய போது குழுக்கள் யாவும் முகாமை நோக்கி நகரத் தொடங்கின. மில்லர் தன்னுடைய வாகனத்தில் ஏறி அமர்ந்து கொண்டான். கமலுடைய குழு, வாகனம் முகாமை நோக்கிச் செல்ல வேண்டிய பாதையில் போடப்பட்டு இருந்த தடைகள் உள்ள பகுதியைச் சென்றடைந்தனர். ஏனைய குழுக்களும் முகாமை நெருங்கி தத்தமது இடங்களில் தயார் நிலையில் நின்றனர்.

**மா.க.ஈழவேந்தன்**

பொறுப்பாளரிடமிருந்து தாக்குதல் ஆரம்பிக்கும்படி கட்டளை பிறப்பிக்கப்பட்டது. எல்லோரும் முகாமை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். மில்லர் ஏறி அமர்ந்து இருந்து ட்றக் வண்டியை அழுத்தி எஞ்சினை உறுமி விட்டு அமைதிப்படுத்தினான். பின் தன் வண்டி செல்வதற்கான உத்தரவிற்காகக் காத்திருந்தான். அப்போது கூட பக்கத்தில் இருந்த பிரபுவோடு நகைச்சுவையோடு பேசி சிரித்துக் கொண்டு இருந்தான். முகாமை நோக்கி எமது தோழர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்து கொண்டிருக்கையிலேயே கமல் குறுக்கே பாய்ந்து தடைகளை அகற்ற முயன்றான். பெரிய மரக்கட்டைகள் புதைக்கப்பட்டு இருந்தன. தான் கொண்டு வந்த வெடிமருந்துப் பெட்டியை கட்டைகளின் பின் வைத்து விட்டு விலகி மறைவில் படுத்துக் கொண்டான். வெடிமருந்து வெடித்தது. அத்தோடு கட்டைகள் தூக்கி எறியப்பட்டு பாதை சீராகியது. அதே நேரம் பாதைக்கு நேரே அமைக்கப்பட்டிருந்த காவல் அரணில் இருந்து இராணுவத்தினரின் இயந்திரத் துப்பாக்கிகள் வெடிக்கத் தொடங்கியது. கமல் தன்னுடைய நடமாடும் தொலைபேசியில் அறிவித்தான். ‘‘தடைகள் அகற்றப்பட்டு விட்டது” ஆனால் புதிய சிக்கல் பாதைக்கு நேரேயுள்ள காப்பரணில் இருந்து துப்பாக்கிச் சூடு வருகிறது. சற்றுப் பொறு.

**பிரபாவின் பங்களிப்பு**

மில்லருக்குப் பக்கத்தில் நின்ற பிரபாவின் நடமாடும் தொலைபேசியிலும் அறிவிப்பு தெளிவாகக் கேட்டது. அதைக் கேட்ட மில்லர்.

‘‘பிரபா பரவாயில்லை, வலையத்தின் முற்பகுதியில் குண்டுகள் துளைக்காதபடி தகடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. அதனால் நான் கொண்டு போய் சேர்த்து விடுவேன்” என்றான். மில்லர் சற்று பொறுத்துக் கொள். அந்தப் பதுங்குகுழி (பங்கர்) உடைக்கப்பட்டதும் நீ போகலாம். மிக விரைவாக வண்டியைச் செலுத்தி ‘‘விட்டு, நீ இறங்கி ஓடி வந்து விடு” என்றான் பிரபா. மில்லர் ஒரு முறை சற்று சிரித்துக் கொண்டான். ஏனென்று புரியவில்லை. அருகில் இருந்த பிரபாவிற்குக் கேட்க மனம் துணியவில்லை. ‘‘பிரபா முன்பு ஒரு முறை யாழ்ப்பாணத்தில் விடப்பட்ட வாகனம் சரியாகச் செல்லவில்லை. எனவே இம்முறை நான் நிஜமாகவே வாகனத்தைச் செலுத்துவேன்.

எப்படியும் கட்டிடத்துக்கு மிக அண்மையில் வாகனத்தைக் கொண்டு செல்வேன் என்று மில்லர் கூறினான். கமல் தன்னுடைய வோக்கியில் றொக்கட் லோஞ்சர் வைத்திருப்பவனை அந்த காப்பரணை உடைக்குமாறு கூற றொக்கட் லோஞ்சரில் இருந்து மிகச் சரியாக ஏவப்பட்ட றொக்கட் பங்கரைத் தாக்கியது. மணல் மூட்டைகள் சிதைந்தன. பங்கர் இருந்த இடத்தில் ஒரே புழுதியும் புகையும். கமல் தகவலைத் தெரிவித்தான். பொறுப்பாளரிடமிருந்து மில்லரைப் புறப்படுமாறு பிரபாவிற்கு உத்தரவு வந்தது. மில்லர் வண்டியை அழுத்தி மெதுவாகச் செலுத்தினான். பிரபா வண்டியின் பின்னால் ஏறிக் கொண்டான்.

வண்டி நெல்லியடிச் சந்தியை வந்தடைந்தது. மில்லர் வண்டியை நிறுத்தி பிரபாவை அழைத்தான். பிரபா மில்லருக்கு கையை அசைத்து விட்டு வெடி மருந்து வெடிப்பதற்கான கருவியை இயக்கினான். கருவி இயங்கத் தொடங்கியது. மில்லர் வண்டியை மெதுவாக ஓடவிட்டான். பிரபா வண்டியில் இருந்து குதித்து வண்டியோடு சேர்த்து ஓடி மில்லரின் பக்கத்தில் வந்து ‘‘மில்லர் எப்படியும் திரும்பி வந்துவிடு” மில்லர் அதைப் புரிந்து கொண்டது போல் வண்டி வேகம் பிடித்தது. பிரபா அப்படியே தெருவில் நின்று வேகமாகச் செல்லும் வண்டியைப் பார்த்துக் கொண்டிருக்க மில்லரையும் வெடிகுண்டையும் சுமந்து கொண்டு வண்டி சென்று கொண்டிருந்தது.

வண்டி முகாமை நோக்கி வருவதை அறிந்து தோழர்கள் முகாமைவிட்டு 100 யார் பின்னுக்கு வந்தனர். கமல் நின்ற இடத்தைத் தாண்டி வண்டி சென்றதும் கமல் மில்லரை நோக்கி கையசைத்து பின்னுக்குச் செல்ல, சில நிமிடத்தில் நிலத்தை அதிரவைத்துக் கொண்டு பெரிய ஓசை எழுந்தது. தோழர்கள் மீண்டும் முகாமை நோக்கி முன்னேறினார்கள். இராணுவத்தினர் தங்கியிருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்த மிகப் பெரிய மாடிக் கட்டிடம் தரைமட்டமாகிக் கிடந்தது. அதில் இருந்த இராணுவத்தினர் கட்டிடத்தின் உள்ளேயே இறந்து போனார்கள். மில்லரின் தாக்குதலைத் தொடர்ந்து நடந்த அத்தாக்குதலில் கமலும் வீரச்சாவடைந்தான். நெஞ்சிலே காயமடைந்த கமலின் உடல் எடுத்து வரப்பட்டது. ஆனால் மில்லர் திரும்பவே இல்லை. மில்லர் வெடிமருந்தின் அதிர்வலைகளோடு சங்கமமாகி, தன் பணியை செவ்வனே முடித்தான். இத்தாக்குதலைப் பற்றி SRI LANKA: WITNESS TO HISTORY (page 344) [INDIAN ARMY WALKS INTO NORTHEAST SRI LANKA: NEAR FATAL ATTACK ON RAJIV GANDHI] என்ற நூலில் பின்வரும் செய்தி வெளிவந்துள்ளது. இலங்கை:- வரலாற்றிற்குச் சாட்சி நூலாசிரியர் சி.சிவநாயகம்.

July 5: Army camp at Nelliady Maha Vidyalayam attacted by ``Black Tiger`` suicide squad led by ``capt Millar``, Army buildings razed to the ground, three armoured vehicles smashed. 18 soldiers killed and arms and ammunition captured by LTTE.

(யூலை 5ம் திகதி: கப்டன் மில்லரின் தற்கொலைப் படையாகிய கரும்புலிகளால் நெல்லியடி மகா வித்தியாலயத்திலிருந்த இராணுவ முகாம் தாக்கப்பட்டது. இராணுவக் கட்டடங்கள் தரைமட்டமாக்கப்பட்டன.

(தொடர்ச்சி 23 ம் பக்கம்.........)

# கிழக்குப் பல்கலைக்கழகத்தின்

# உலக நாடக தின விழா – 2005

## ஒரு பார்வை

**சென்ற வாரத் தொடர்ச்சி........**

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உலக நாடக தின விழா 2005 இன் மூன்றாம் நாளாகவும், முக்கிய நாளாகவும், அதன் இறுதி நாளாகவும் யூன் 10ம் திகதி இருந்தது. அந்த வகையிலே அன்றைய நிகழ்வுகள் அனைத்தும் மிகவும் கோலாகலமாய் அமைந்திருந்தன.

இறுதி நாளன்று காலை 9.00 மணிக்கு இன்னிய அணியின் மெல்லிய துல்லிய இதமான இசையுடனும், இனிமையான ஆடலுடனும் விருந்தினர்கள் வெகு சிறப்பாக வரவேற்கப்பட்டு 9.30 மணிக்கு அரங்கிலே மங்கல விளக்கேற்றல் நிகழ்வானது சிறப்புற இடம் பெற்றது. இன்னிய அணியும், மங்கல விளக்கேற்றலும் இறுதி நாள் விழாவிற்கு மகுடம் சூட்டுவதாய் அமைந்து மனதைத் தொட்டது.

அதனை அடுத்து 9.40 அளவிலே திரு.எஸ்.தயாபரன் அவர்களால் வரவேற்புரை நிகழ்த்தப்பட்டு 9.45 ற்கு இந்திய பாண்டிச் சேரி புதுவைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் கே.ஏ.குணசேகரன் அவர்களால் தலைமையுரை ஆற்றப்பட்டது.

அவர் தமது உரையிலே தலைக்கோல் விருதின் தனித்துவம், அதன் வரலாறு தொன்மை முதலானவை உள்ளிட்ட பல கருத்துக்க



ளை எடுத்து விளக்கி பார்வையாளர்களாலே பாராட்டைப் பெற்றார்.

இதனைத் தொடர்ந்து 9.55 ற்கு சிறப்பு விருந்தினர் உரையினை வர்த்தக முகாமைத்துவ பீடாதிபதி திரு.ம.கனகசிங்கம் அவர்கள் நிகழ்த்தினார்.

அவர் தமது உரையிலே 'சமூகத்தோடு கி.ப.கழகம் நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருக்கின்றது. கற்கை நெறிச் செயற்பாடுகளுடன் மாத்திரம் நின்று விடாது பல்கலைக் கழகத்திற்கு பாரிய பொறுப்பும் இருக்கிறது என்பதற்கு இந் நிகழ்வுகள் தக்க சான்றாதாரங்களாகும். நுண்கலைத் துறை கலை கலாசார பீடத்தின் முக்கிய கர்த்தாக்களாக பேராசிரியர் சி.மௌனகுரு, பீடாதிபதி திரு.பாலசுகுமார், விரிவுரையாளர் திரு.சி.ஜெயசங்கர் ஆகிய மூவரையும் காணமுடிகிறது.

''லயம்'' என்னும் கலை நிகழ்ச்சியானது கிராமத்துப் பழைய கலைகளை நினைவூட்டியது. இவ்வாறான கலை நிகழ்ச்சிகள் அருங்கலைகளைப் புத்துயிர் பெறச் செய்கின்றன. விருது வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வின் மூலம் கலைஞர்கள் ஊக்கப் படுத்தப்படுகின்றார்கள். அத்துடன் இளஞ்சந்ததியினரும் இதனைத் தொடர ஆக்கவூக்கம் அளிக்கப்படுகின்றது.'' என்று தமது கண்ணோட்டத்தை அழகாக எடுத்துக் கூறி தமது உரையினை நிறைவு செய்தார் வர்த்தக முகாமைத்துவப் பீடாதிபதியவர்கள்.

இது நிறைவுற்றதும் மு.ப 10.00 மணிக்கு கௌரவ விருந்தினர் உரையினை தகவல் தொடர்பு, வர்த்தக கற்கைகளின் பீடாதிபதி திரு.ரீ. பிரபாகரன் அவர்கள் ஆற்றினார்.

அவர் தமது உரையில் ''கலை கலாசார விழுமியங்கள் அருகிக் கொண்டு வரும் இன்றைய காலகட்டத்தில் இவ்வாறான உலக நாடக தின விழா நிகழ்வுகள் அருங்கலைகளை வளர்த்தெடுப்பதாக அமைகின்றன.

இப்போதைய சமூகம் மிகவும் சிக்கலானது. அது சினிமாவிலும், தொலைக்காட்சியிலும் மூழ்கிக் கிடக்கின்றது. இந்த நிலையில் அரும் பெரும் கலைகளை வளர்த்துச் செல்கின்ற பணியினைக் கி.ப.கழகம் முன் கொண்டு செல்கின்றது.

புராண, இதிகாச, வரலாற்றுக் கலைகளை இன்றைய, இனி வருகின்ற இளவட்டங்கள் அறிய முடியாத நிலையைக் காண முடிகின்றது. இந்த இக்கட்டான சூழ்நிலையில் இத்தகைய இளவட்டங்களுக்கெல்லாம் அக்கலைகளைப் பற்றி அறிய துணை செய்வதாக இவ் விழாக்கள் அமைகின்றன.

ஒவ்வொரு வருடமும் உலக நாடக தின விழா இங்கே இடம் பெறுவதன் மூலம் மண்ணின் கலைகள் பேணப்படுகின்றன. கூத்து ஆடுவதற்கென இப் பல்கலைக்கழகத்திலே ஒரு வட்டக்களரி உருவாக்கப் பட்டிருக்கிறது. அதன் மூலம் கூத்துக் கலை பேணப்பட்டு வருகின்றது. இதனைப் பேராசிரியர் சி.மௌனகுரு அவர்களும், அவரைச் சார்ந்தவர்களும் சிறப்புற நெறிப்படுத்தி வருகிறார்கள். இவையெல்லாம் பாராட்டப்பட வேண்டிய விடயங்களாகும்.'' எனத் தமது உரையினை திறம்பட நிகழ்த்தி முடித்தார். பீடாதிபதி திரு.ரீ.பிரபாகரன் அவர்கள்.

பிரதம விருந்தினர் உரையானது இதனையடுத்து இடம் பெற்றது.அதனைப் பேராசிரியரும், உபவேந்தருமாகிய எஸ்.ரவீந்திரநாத் அவர்கள் நிகழ்த்தினார்.

அவர் தமது உரையில் ''வரலாற்று நிகழ்வுகளையும், கலை கலாசார நிகழ்வுகளையும் இந்த நிகழ்வுகள் வெளிக்காட்டுகின்றன. இதற்கு உதாரணமாக இன்னிய அணியினையும், 'லயம்' நிகழ்வினையும் கொள்ளலாம்.

இத்தகைய நிகழ்வுகளிலே முஸ்லிம் மாணவர்களையும் இணைக்க வேண்டும். இனிவரும் ஆண்டுகளிலே இன்னிய அணி இன்னும் பல சிறப்பம்சங்களைக் கொண்டு மிளிர வேண்டும். கவின் கலைகளை வளர்க்க இத்தகைய உலக நாடக தின விழாக்கள் வெகுவாக உதவுகின்றன. இவை மென்மேலும் வளர்ச்சி அடைய வேண்டும்.

இன்றைய சினிமாப் பாடல்கள் வேறொரு கலாசாரத்தை வெளிக் காட்டுகின்றன. தொலைக்காட்சி மோகத்திலே மக்கள் சமூகம் மூழ்கிக் கொண்டிருக்கிறது. இவற்றில் இருந்து மக்களை விடுவித்து அருங்கலைகளிலே அவர்களைத் திழைக்கச் செய்வதற்கு அரங்கச் செயற்பாடுகள் உதவுகின்றன.

உண்மையிலே கலைஞர்கள் வாழும்போதே கௌரவிக்கப் படல் வேண்டும். அதுதான் உண்மையான கௌரவிப்பாக இருக்கும். அவர்கள் இறந்த பின்பு கௌரவிப்பது அவ்வளவு பொருத்தப்பாடு அற்றது. இந்த வகையிலே வருடாவருடம் உலக நாடக தின விழா மூலம் கி.ப.கழக நுண்கலைத் துறை சிறந்த கலைஞர்களை இனங்கண்டு விருது வழங்கி கௌரவித்து வருவது பாராட்டப்பட வேண்டியதாகும்.'' என்று தமது உரையினைப் பிரமாதமாக நிகழ்த்தி முடித்தார் உபவேந்தர் அவர்கள்.

நடுப்பகுதிக் கட்டமே இறுதி நாள் விழா நிகழ்வுகளின் உச்சக்கட்டமாக இருந்தது. மு.ப.10.30 மணிக்கு கலைஞர்களுக்கான கௌரவ விருதான ''தலைக்கோல்'' விருது வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வானது ஆரம்பமாகியது.

இவ்விருது பற்றிய அறிமுக உரையினை நுண்கலைத்துறைத் தலைவர் பீடாதிபதி திரு.பாலசுகுமார் அவர்களும், விருது பெறும் கலைஞர்களைப் பற்றிய அறிமுக உரையினை பேராசிரியர் சி.மௌனகுரு அவர்களும் மிகவும் அழகான முறையிலே எடுத்து விளக்கினார்கள். இதனையடுத்து ''தலைக்கோல்'' விருது வழங்கும் நிகழ்வானது மிகவும் கோலாகலமான முறையிலே இடம் பெற்றது.

இதன் படி ''தலைக்கோல்'' என்னும் தலைசிறந்த விருதுக்காக

### வெல்லபதியான்

மன்னார் முருங்கனைச் சேர்ந்த கூத்துக் கலைஞர் குழந்தை அவர்களும் (செ.செபமாலை) மட்டக்களப்பு களுதாவளையைச் சேர்ந்த பறைமேளக் கலைஞர் திரு.கா.பரசுராமன் அவர்களும் சிறந்த கலைஞர்களாகத் தெரிவுசெய்யப்பட்டு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இவ்விருதுக்காக தெரிவு செய்யப்பட்ட மேற்போர்ந்த இரு கலைஞர்களும் உளமார வரவேற்கப்பட்டு, அதிதிகளோடு அதிதிகளாய் அரங்கினிலே அமர்த்தப்பட்டு அன்றைய நிகழ்விலே கதாநாயகர்களாய் விளங்கினார்கள்.

இவ்விருது வழங்கும் நேரம் வரை இரு மாணவிகள் இரு பக்கங்களிலும் நின்று தமது கரங்களிலே ''தலைக்கோல்'' விருதினைத் தாங்கி நின்றார்கள். உரிய நேரம் வந்ததும் பேராசிரியர் சி.மௌனகுரு அவர்களின் அன்பான வேண்டுதலுக்கு அமைவாக அதிதிகள் உட்பட அவையோர் அனைவரும் எழுந்து நின்று ''கரகோசம்'' பொழிந்து கலைஞர்களைக் கௌரவப்படுத்தினார்கள். இது உண்மையிலேயே தலைக்கோல் விருதினையும் விட கலைஞர்களுக்கான அதியுயர் கௌரவிப்பாகத் தெரிந்தது.



விருதினை ஒருவர் பின் ஒருவராக இரு கலைஞர்களும் பெற்றார்கள். மேலும் மலர் மாலை அணிவித்தும், பணம் கொடுத்தும் கௌரவிக்கப்பட்டார்கள்.

இரு கலைஞர்களுக்கும் உரையாற்றுவதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. முதலிலே மன்னாரைச் சேர்ந்த கூத்துக் கலைஞர் குழந்தை அவர்கள் சிறந்ததோர் கவிதையையும் இயற்றிப் பாடி உரையினைத் திறம்பட முடித்தார். அவரைத் தொடர்ந்து உரையாற்றிய பறைமேளக் கலைஞர் பரசுராமன் அவர்கள் பரவசத்தாலே தமது உரையிலே சற்றுப் பதட்டப்பட்டு விட்டார்.

உண்மையிலேயே இரு கலைஞர்களுக்குமான தலைக்கோல் விருதானது அவர்கள் இருவரதும் அயராத கலைத்தொண்டுக்காகக் கிடைத்த அதியுயர் விருதாகவும், அவர்களது வளர்ச்சிப் படிகளை மென்மேலும் வேகமும், விறுவிறுப்பும் ஊட்டி வளர்ப்பதாகவும், வளர்ந்து வரும் கலைஞர்களுக்கும் கலையார்வத்தைத் தூண்டுவதாகவும் அமைந்திருந்தது.

இதனையடுத்து நுண்கலைத்துறை மாணவர்களுக்கான விருது வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வானது 10.45 ற்கு இடம் பெற்றது.

இதன்படி மிகவும் சிறந்த முறையிலே தமது கலைத்திறன்களை வெளிப்படுத்திய மாணவர்களுக்காக 'சிறந்த நடிகர் விருது', 'சிறந்த நடிகை விருது', 'சிறந்த துணை நடிகர் விருது', 'சிறந்த துணை நடிகை விருது', 'சிறந்த நாடகத் தயாரிப்பாளர் விருது' முதலான விருதுகள் வழங்கப்பட்டன.

மாணவர்களுக்கான விருது வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வானது இவ்வருட உலக நாடக தின விழாவின் மற்றுமோர் வளர்ச்சிப் படியினைக் காட்டுவதாக அமைந்திருந்ததோடு மாணவ சமூகத்தின் கலையார்வத்தை வளர்ப்பதாகவும், வளப்படுத்துவதாகவும் அமைந்து சிறப்புப் பெற்றது.

இதனை அடுத்துப் பேராசிரியரும், உபவேந்தருமாகிய (கி.ப.கழகம்) எஸ்.ரவீந்திரநாத், சங்கரதாஸ் சுவாமிகள் நிகழ்கலைப் பள்ளியின் தலைவரும், புதுவைப் பல்கலைகழகப் பேராசிரியருமான (இந்தியா) கே.ஏ.குணசேகரன், தகவல் தொடர்பும், வர்த்தக கற்கைகளுக்கும் பொறுப்பான பீடாதிபதி திரு.ரீ.பிரபாகரன் போன்றவர்களுக்கான நினைவுப் பரிசு வழங்கும் நிகழ்வானது இடம் பெற்றது. இதனைப் பேராசிரியர் சி.மௌனகுரு அவர்கள் வழங்கிச் சிறப்பித்தார்.

இன்னிய அணி இல்லை என்றால் ''கௌரவிப்பு'' நிகழ்வானது களைகட்டியிருக்காது; கலாரசனையுடன் இருந்திருக்காது என்பதும் மறக்கவோ, மறுக்கவோ முடியாத உண்மையாகும்.

**தலைக்கோல் விருதின் தனித்துவமும் தாற்பரியமும்.**

'தலைக்கோல்' விருதென்பது சிறந்த கலைஞர்களுக்காக வழங்கப்படுகின்ற விருதாகிறது. அந்த வகையிலே இது தமிழ்ப் பாரம்பரியத்தில் தமிழ் மரபில் தனித்துவம் பெறுகிறது. நமது அடையாளமாக பண்பாட்டின் சின்னமாக, வெற்றியின் சின்னமாக 'தலைக்கோல்' சிறப்புப் பெறுகிறது.

எதிரியினது நாட்டிற்குப் படையெடுத்துச் சென்று அவனது நாட்டை வெற்றி கொண்டு அவனது கொடியை அறுத்து அல்லது குடையை எடுத்து பொன், மணி, நவரத்தினங்கள் பதிக்கப்பட்டு பெறுமதி மிக்கதாக 'தலைக்கோல்' செய்யப்படுவதாக இளங்கோவடிகள் இயற்றிய செந்தமிழ்க் காப்பியமான சிலப்பதிகாரம் சிறப்புற இதன் அருமை பெருமைகளை எடுத்துக் கூறும்.

மேலும் சிலப்பதிகாரமானது மாதவி கரிகால மன்னனுடைய அவையிலே மக்களுடைய வாழ்வியலையும், மன்னன் வரலாற்றினையும் பிரதிபலிப்பதான 11 நடனங்களை மிகவும் சிறப்புற ஆடியதாகவும், கோவலனும், கண்ணகியும் இதனைப் பார்க்கச் சென்றதாகவும், ஆடல் பாடல்களிலே வல்ல மாதவிமேல் கோவலன் மயங்கியதாகவும், சிறந்த ஆடல்களை மாதவி ஆடியமைக்காக அம்மன்னன் 'தலைக்கோல்' விருது வழங்கி அவளைக் கௌரவித்ததாகவும் சான்று பகரக் காணலாம்.

இதனைத் தவிர கலைகளின் வளர்ச்சியின் பொற்காலமாகத் திகழ்ந்த சோழப் பெருமன்னர் காலத்திலே ஆலய மண்டபமே அரங்கமாக இருந்திருக்கிறது. பாட்டும், பரதமும், கூத்தும், நடனமும் உச்ச நிலையை அடைந்திருந்தது. சாக்கைக் கூத்து, சாந்திக் கூத்து போன்ற ஆடல் பாடல்களிலே வல்ல கலைஞர்களுக்கு 'தலைக்கோல்' விருது வழங்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறாக காலம் காலமாக தமிழர் தம் பண்பாட்டிலே தலைக்கோல் விருதானது பேணப்பட்டு தனித்துவம் பெற்று வந்திருக்கிறது. இதன் மகிமையைத் தொடர்ந்தும் பேணுவதாகவே இன்றும் இந்த விருதானது வழங்கப்பட்டு வருகிறது.

பாரம்பரியமாக இருந்து வந்த கலைகளுக்கு வழங்கப்பட்ட தனித்துவத்தினையும், கலைஞர்களுக்கு வழங்கப்பட்டு வந்த முக்கியத்துவத்தினையும் இத்தலைக்கோல் விருதானது பிரதிபலிக்கக் காணலாம்.

இத்தகைய தலைக்கோல் விருதின் தனித்துவம், தாற்பரியங்கள் பற்றி 'விருது அறிமுக உரையிலே' பீடாதிபதி திரு.பாலசுகுமார் அவர்களும் 'தலைமையுரையிலே' இந்தியப் பேராசிரியர் கே.ஏ.குணசேகரன் அவர்களும் தக்க ஆதாரங்களுடன் விளக்கிக் கூறி இருந்தமை இங்கே குறிப்பிடத் தக்கதாகும்.

[பார்வை தொடரும்.....]

# பேரினவாத அழிவில் சிதைந்த புனாணை கிராமம்

கோறளைப் பற்று தெற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புனாணை 1950 ஆண்டு காலப் பகுதியில் யானைகள் மிகுந்த சோலைப் பிரதேசமாக காணப்பட்டது. அன்றைய காலப் பகுதியில் புனாணை என்ற பெயர் வழங்கப்படவில்லை. மக்கள் குடியேற்றம் இயற்கையினை சார்ந்ததாகவே ஆரம்பத்தில் மனிதன் குடியிருப்புக்களை அமைத்தான். அதாவது நதிக் கரைகள் குளக்கரைகள் போன்றவற்றினை அண்மித்ததாகவே காணப்பட்டது.

இந்தக் கிராமத்தை பொருத்தவரையில் ஆரம்பத்தில் பெரிய அளவான குடியேற்றம் இல்லாவிட்டாலும் வந்தாறுமூலையைச் சேர்ந்த மக்கள் வேளாண்மை செய்யும் நோக்கத்திற்காக 10-15 குடும்பங்கள் குடியேறினார்கள். இவர்கள் காடுகளை அழித்து மிகங்களுக்கு ஏற்றவாறு தமது குடியிருப்புக்களை அமைத்துக் கொண்டனர். இந்தக் கிராமத்திற்கான பெயர்.


ஆரம்பத்தில் கூறியவாறு காடுகள் மிக்க நிறைய யானைகளைக் கொண்ட காட்டுப் பகுதியாகும். எந்த இனமாக இருந்தாலும் பேசுவதில் ஒரு மொழியையும் எழுதுவதில் ஒரு மொழியையும் பயன்படுத்துவது வழக்கம். அந்த வகையில் நிறைய யானை என்பதற்கு ஆங்கிலத்தையும் சேர்த்து கரடட ஆனை என்றுதான் குறிப்பிட்டார்கள். இது காலப் போக்கில் மருவி கரடட ஆனை புனாணையாக மாறிவிட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் இங்கு புண்பட்ட யானை ஒன்று இருந்தது என்றும், அதனால் புண் யானை புனாணையாக மாற்றம் பெற்றதாகக் கூறப்படுகின்றது. இந்த கால கட்டத்தில் இங்கு வாழ்ந்தவர்கள் கோறளைப் பற்று பிரதேச செயலாக பிரிவில் உள்ளடக்கப்பட்டு இவர்களுக்கு நிர்வாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அரச உதவிகள் எதுவும் இன்றித்தான் வாழ்ந்தார்கள்.

குடிப்பதற்கு கூட சுத்தமான நீர் கிடைக்கவில்லை இதற்கு குளக்கரையைத் தேடிப்போனார்கள். காரணம் இந்தப் பகுதியைப் பொறுத்தவகையில் பூகோள அமைப்பினை பொருத்தவகையில் தாழ் நில வறல் வளையத்தின் வறண்ட மேட்டு நிலத்தினைக் கொண்டவையாகும். இந்த நிலைமையில் குடிப்பதற்கான நீர் எடுப்பதற்கு மிகவும் சிரமப்பட்டனர்.

அதுமாத்திரம் அன்றி இவர்கள் மருத்துவ வசதியோ, போக்குவரத்தோ, சந்தை வாய்ப்புகளோ மாணவர்க்கான பாடசாலை வசதிகள் எதுவுமே இல்லாத நிலையில் வாழ்ந்தார்கள். மாரி காலத்தில் மாத்திரம் கூடுதலான பயிர்ச் செய்கையில் ஈடுபடுவார்கள். காரணம் வருடம் முழுவதும் நீர் கிடைப்பது இல்லை. அத்துடன் உற்பத்தி செய்யும் மரக்கறிகளுக்குப் போதிய அளவு சந்தைவாய்ப்பு இல்லை. வயல் காணியைப் பொறுத்தவரையில் தலைக்கு 5ஏக்கர் திட்டம் என்பதால் நிலத்தின் அளவினை அதிகரிக்க முடியாது.

கோடை காலங்களில் பயிர்ச் செய்கையினை செய்ய முடியாது. இதனால் தமது வாழ்க்கையை சமாளிப்பதற்காக மக்கள் வேறு இடங்களுக்கு வேலை தேடிச் செல்ல வேண்டிய நிலையும் காணப்பட்டது. இதனால் கூடுதலாக இப்பகுதிக்கு குடியேறவிரும்பவில்லை. இங்கு எதுவும் இல்லாத நிலையில் வாழ்ந்த மக்கள் ஆரம்ப காலத்தில் கல்வி விருத்தியடையவில்லை. முன் பாலர் பாடசாலையாவது இயங்க வேண்டும். என்ற மக்களின் எண்ணப்பாட்டுக்கு தாமாகவே முன்நின்று தற்காலிக சிறுகுடிசை அமைத்து மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கையினை மேற்



கொண்டனர். ஆனால் அரசினால் இந்த மக்களுக்கு எவ்வித உதவியும் செய்து கொடுக்கப்படவில்லை என்பது கவலையளிக்கின்றது.

கல்விக்கும் சரி தொழில் வாய்ப்புக்கும் சரி மக்களே பாடுபட்டனர். இதே நிலையில் சிங்களக் குடியேற்றமாக இருந்தால் அந்த மக்களுக்கான சகல வசதிகளுடன் கூடிய ஒரு நவீன மாதிரிக் கிராமம் உருவாக்கியிருப்பார்கள். ஆரம்பத்தில் இருந்து தமிழர்களின் நிலப்பரப்பில் சிங்கள குடியேற்றம் செய்வதில் அரசாங்கம் முனைப்பாக இருந்தது.

மாறாக பின்தங்கிய தமிழ்க் கிராமங்களை முன்னேற்றுவதற்கான எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்தக் கால கட்டத்தில் வேறு இனத்தவர்கள் குடி இருக்கவில்லை. இருந்தும் சிங்கள இனத்தவர் 3 குடும்பம் குடியேற்ற நிலப்பரப்பு இன்றி பிரதான வீதியின் ஓரங்களில் குடியேறினார்கள். ஆனால் இவர்கள் பிரச்சினை இல்லாவிட்டாலும் இதில் பிக்கு ஒருவரிர் பெரும் நாசகார நடவடிக்கையில் ஈடுபட்டார் என்பதை மக்கள் தெரிவித்தனர். இவரின் நோக்கம் தமிழ் மக்களை வெளியேற்றி சிங்கள மக்களைக் குடியேற்றம் செய்வதில் நோக்கமாக கொண்டுயிருந்தார்.

இதற்கு ஒரு சிலர் மது போதைக்கும் சில சலுகைகளுக்கும் அவரிடத்தில் சென்றனர். இவர்கள் ஊரில் உள்ள சில முக்கியமானவர்களைகொலை செய்யும் அளவுக்கு மாறிவிட்டார்கள். மானமுள்ள தமிழ் மக்கள் அடிபணியவில்லை. மாறாக படிமலை எனும் சிறு குன்றில் முருகன் ஆலயம் ஒன்றினை அமைத்து வழிபட்டார்கள். இவ்வாறான நிலையில் 1977-78 காலப் பகுதியில் ஏற்பட்ட தமிழ் சிங்கள இனப் பிரச்சினை காரணமாக மலையகப் பகுதியில் குடியிருந்த இந்திய தமிழர்கள் படுகொலைகள் செய்யப்பட்டதுடன். சொத்துக்களும் சூறையாடப்பட்டன.

தமிழர்கள் செறிந்து வாழும் கிழக்கு மாகாணம் நோக்கி இடம் பெயர்ந்தன. இதன் முதல் கட்டமாக மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப் பகுதியில் குடியேறினார்கள். இவர்களுக்கு இங்கு இருந்தவர்கள் உதவி செய்தார்கள். இதனால் இவர்களும் தமக்கான குடியிருப்புக்களை அமைத்துக் கொண்டனர். ஆரம்பத்தில் கூலி வேலை செய்து தமது வாழ்க்கையை நடாத்தினார்கள். பின்பு படிப் படியாக காடுகளை வெட்டி வயல், காணி மற்றும் மேட்டுக் காணியை உருவாக்கிக் கொண்டார்கள். இதனால் குடியிருப்புக்களின் எண்ணிக்கையும் சனத்தொகையும் அதிகரித்தாலும் அரசினால் உதவி என்பதற்கு இடமே இல்லை.

இத்தனைக்கும் இப்பிரதேசம் 1982ம் ஆண்டு காலப் பகுதியில் மகாவலித் திட்டத்தின் கீழ் ட பிரதேசமாக கொண்டுவரப்பட்டாலும் தமிழ் என்ற காரணத்தினால் வாய்க்கால் வெட்டவும் இல்லை. தண்ணீர் வசதி செய்து கொடுக்கவும் இல்லை. மகாவலித் திட்டத்தின் நோக்கம் மலை நாட்டில் உற்பத்தியாகும் நதிகள் வீணாகக் கடலுடன் சங்கமிப்பதால் இதனைப் பயன்னுள்ளதாக மாற்றி பயிர்ச் செய்கை நடவடிக்கை மேற்கொள்வதாகும். முன்மொழியப்பட்ட திட்டம் வேறு. ஆனால் நடந்தது என்ன? தமிழ் பிரதேசத்தை அபகரித்து சிங்கள தேசமாக மாற்றுதல்.

சிறுபான்மைக்கு எந்த உரிமைகள் சலுகைகள் வழங்கப்படக் கூடாது என்ற குரோத மனப்பாங்குடன் செயல்பட்டார்கள். இதற்கு முக்கிய காரணம் இப்பிரதேசத்து மண் மிகவும் வளம் பொருந்தியது. எனவே இவற்றுக்கு நீ வசதியும் செய்து கொடுத்தால் தமிழர் பிரதேசம் மேலும் வளம் பெற்று செழிப்பாக மாறிவிடும் என்ற கபட நோக்கம் காணப்பட்டமையினால் இன்னும் செய்து கொடுக்காமல் உள்ளார்கள். கடந்த காலங்களில் யுத்தத்திற்கு என பல கோடி ரூபாய் செலவு செய்து தமிழ் மக்களின் வளம் அனைத்தையும் அழித்தவர்கள் தானே.

அது மாத்திரமல்ல எத்தனையோ தமிழ் இளைஞர்களை கைது செய்து படுகொலையும் செய்தார்கள். இதனால் வந்தாறுமூலையைச் சேர்ந்தவர்கள் தமது சொந்த இடங்களுக்கு திரும்பினார்கள். ஆரம்பக் குடியினர் ஒரு சில குடும்பத்தை தவிர படிப்படியாக குறைவடைந்தன. ஆனால் இந்திய தமிழர்களின் வருகை அதிகரித்ததனால் காரணம் சிங்கள காடையர்களினால் சிறுவர்கள், பெண்கள் என கொலை செய்யப்பட்டனர்.



(தொடரும்..........)

**சுகுணம்**

---

*ஈழநாதம் (மட்டக்களப்பு பதிப்பு) வாரம் தோறும் வழங்கும் குறுக்கெழுத்துப் போட்டியில் பங்குபெற விரும்புவோர் போட்டிப்படிவத்தைப் பூர்த்தி செய்து அஞ்சல் அட்டையில் ஒட்டி அனுப்பிவைக்கவும். சரியான விடை அனுப்பும் ஒரு அதிஸ்டசாலிக்கு 250 ரூபா பணப்பரிசும், பாராட்டுப் பெறும் 10 அதிஸ்டசாலிகளின் பெயர் விபரமும் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.*

*விடைகள் வந்து சேரவேண்டிய கடைசித் திகதி:- 24-07-2005*

## குறுக்கெழுத்துப் போட்டி 60

**குறுக்கெழுத்துப் போட்டி இல - 60**
**ஈழநாதம் (மட்டக்களப்பு பதிப்பு)**
**பிரதான வீதி,**
**கொக்கட்டிச்சோலை.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | ■ | ■ |
| | ■ | 4 | | 5 | 6 |
| 7 | 8 | | | | |
| 9 | | | | ■ | |
| ■ | 10 | | ■ | 11 | |
| 12 | ■ | ■ | 13 | | ■ |
| 14 | 15 | | ■ | 16 | 17 |
| 18 | | ■ | 19 | | |

### இடமிருந்து வலம்

1. வாழைக்கு இப்படியும் ஒரு பெயர் உண்டு
4. திறை
7. அச்சம் கொள்ளவைக்கும் தன்மை. காட்சி அல்லது சம்பவம் (குழம்பியுள்ளது)
9. இது மொய்த்த உணவை உட்கொண்டால் நோய் ஏற்படும் சாத்தியம் உண்டு. (திரும்பியுள்ளது)
10. விவசாயச் செய்கை இறுதி எழுத்தில்லாமல் உள்ளது.
11. இது கொண்ட உள்ளம் துயரத்தின் இல்லம் என்பார்கள். (திரும்பியுள்ளது)
13. பயம்
14. நெற்றி திரும்பியுள்ளது
16. பூரண சத்துள்ள திரவ உணவு (திரும்பியுள்ளது)
18. பெயராகவும் வினையாகவும் வரும் ஒரு சொல்.
19. ஞாபகத்தின் எதிரி (குழம்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

1. இவனுக்கு மவுசு வந்தால் அர்த்த ராத்திரியிலே குடை பிடிப்பான்.
2. இந்திய வம்சாவழியினர் செறிந்து வாழும் பிரதேசம் இவ்வாறு அழைக்கப்படும் (தலைகீழ்)
3. உணவு சமிபாடடையும் இடம் (தலைகீழ்)
5. பாகம். கம்பனிகள் வைத்திருக்கும் வணிக உரிமம் (இறுதி எழுத்து இல்லாமல் வருகிறது)
6. பத்துத் தேவாரங்கள் சேர்ந்து இப்படி அழைக்கப்படும். (தலைகீழ்)
8. நாட்டில் மழையை வேண்டி ஓமம் வளர்த்து இது நடத்துவார்கள் (குழம்பியுள்ளது)
11. முற்றத்திலிருக்கும் இம்மலர் மணக்காது என்பார்கள் (தலைகீழ்)
12. ஆரூடம் சொல்லும் பிராணி (தலைகீழ்)
15. கோல்
17. அரைவாசி

### குறுக்கெழுத்துப் போட்டி 58ற் கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1. முத்தமிழ்
5. விரதம்
7. இருட்டு
8. துலா
10. சிரசு
11. அல்வா
13. வாகு
14. முரசம்
16. மங்கு
18. குன்றம்

**மேலிருந்து கீழ்**

1. முகத்துவாரம்
2. தவிடு
3. மிரட்சி
4. வார இதழ்
6. சுருங்கும்
9. முல்லா
12. அம்மன்
15. சங்கு
17. குற(ள்)

### பரிசு பெறும் அதிஸ்டசாலி

க. சிவகுமார்,
இல. 41, பிரதான வீதி,
கூழாவடி,
மட்டக்களப்பு.

### பாராட்டுப் பெறும் அதிஸ்டசாலிகள்


1. ம.இராசமணி, பாலமுனை, மண்டூர்.
2. மு.கஜரூபன், மத்திய கல்லூரி, பெரியகல்லாறு
3. வ.பரமலிங்கம், பழுகாமம் - 2, திருப்பழுகாமம்.
4. பு.நிவோஜினி, சத்துருகொண்டான், மட்டக்களப்பு.
5. ர.சங்கீதா, 37, புதுநகர், மட்டக்களப்பு.
6. இ.நிரஞ்சன், தரம் - 9, மட்-மாங்காடு சரஸ்வதி வித்தி.
7. பொ.பாலசுப்பிரமணியம், பிரதான வீதி, தம்பிலுவில் - 01
8. பா. உதயதேவி, பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை.
9. நா.கலைமதி, பேராதனை வளாகம்
10. ச.சந்திரமதி மகிழவட்டவான், ஆயித்தியமலை.

# தமிழ்த் தேசிய அரசு சர்வதேச ரீதியாக அங்கிகரிக்கப்படுமா?

சர்வதேச சட்டத்தில் அரசுக ளின் அங்கீகாரம் என்பது சுவையான தும். அதே வேளை மிகச்சிக்கலானது மான ஒரு சட்டப் பிரச்சினையாக அமை கின்றது. அந்த வகையில் கால் நூற் றாண்டாய் இரத்தமும். சதையும் சிந்தி தமிழ் ம்க்களினதும். தமிழ் மண்ணின் விடுதலைக்காகவும் போராடி அரிய பல தியாகங்களைச் செய்து தமிழ்த் தேசிய பாரம்பரிய தாயகத்தின் அரைவாசிக்கு மேற்பட்ட நிலப்பரப்பை தமது கட்டுப் பாட்டின் கீழ் நிர்வகித்து வரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிருவாகக் கட்ட மைப்பு. தமிழ் தேசிய பாரம்பரிய தமிழீழ நிருவாகப் பிரதேசமும் சர்வதேச ரீதியாக வோ இல்லையெனில் சர்வதேச சட்டரீதியா கவோ அங்கீகரிக்கப்படுமா? என்பதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

அந்த வகையில் முதலில் அரசு என்றால் என்னவென்று வரைவிலக்கணப் படுத்தும் போது அரசானது பின்வரும் தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டு மென அரசுகளின் உரிமைகள். கடமை கள் மீதான மொன்ரே வீடியோ சமவாயத் தின் முதலாவது உறுப்புரை பின்வரு மாறு கூறுகின்றது. சர்வதேச சட்டத்தின் தனிநபர் என்ற அளவில் அரசானது பின்வ ரும் தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும்.

அ. நிரந்தரமான சனத்தொகை
ஆ. வரையறுக்கப்பட்ட ஆள்புலம்
இ. பயன்வலுக் கொண்ட அரசாங்கம்
ஈ. ஏனைய அரசுகளுடன் உறவுகளை



ஏற்படுத்தக் கூடிய ஆற்றல். என்பனவே இந்த நிபந்தனைகளாகும்.

அந்த வகையில் தமிழீழ அரசு இவ்வாறான தகுதிகளைக் கொண்டிருக் கின்றதா? என்பதை விட இன்றும் சர்வ தேச ரீதியாக நான் என்ற அகந்தையில் வல்லரசு என்றும். வல்லரசு என்ற நிலை யை எட்டியிருக்கின்ற நாடுகள் இந்தத் தகுதியைக் கொண்டிருக்கின்றனவா? 1947 இல் பாகிஸ்தான் உருவாகிய போது அங்கு ஒரு நிரந்தர மானதொரு சனத்தொ கை இருக்கவில்லை. இலட்சக்கணக் கான மக்கள் அங்கும் இங்கும் இடம் மாறிக் கொண்டிருந்தார்கள்.

அதே போல அதே ஆண்டில் உருவாகிய இஸ்ரேலைப் பொறுத்தளவில் அன்றிலிருந்து இன்றுவரை அதன் சனத் தொகை என்ன? அது நிரந்தரமானதா என்பதை உறுதிப்படக் கூறமுடியாது ள்ளது. இந்த நிலையில் இந்த நாடுகள் சர்வதேச ரீதியாக மற்ற நாடுகளை எச்சரி த்தும். விரட்டியும் வருகின்றன. இவற் றை எல்லாம் வைத்துப் பார்க்கும் போது தமிழீழ நிருவாக பிரதேசமானது எவ்வள வோ மேலானது. இங்கு நிரந்தரமானதும் தனித்துவம் மிக்கதுமான சனத்தொகை உண்டு. அது போல வரையறுக்கப்பட்ட ஆள்புலம். மற்றும் பயன்வலுக் கொண்ட அரசாங்கம் என்பனவும். ஏனைய அரசு களுடன் உறவுகளை ஏற்படுத்தக் கூடி ய ஆற்றல். இதில் முதல் மூன்றும் எமது தாயக அரசில் சீரானதாகவும் செம்மையாக வும் சிறிலங்கா அரசை விட ஒருபடி மே லானதாகவும் நடை பெற்று வருகின்றது.

எனினும் நான்காவதாக அமை யும் ஏனைய அரசுகளுடன் உறவுகளை ஏற்படுத்தக் கூடிய ஆற்றல் இது தொடர் பாக மொன்றி வீடியோ சமவாயத்தின் நான் காவதாக அமைவது பின்வருமாறு அமைகின்றது. முன்னைய மூன்று. அம்ச ங்களும் இந்த அமைப்பு கொண்டிருக் கும் தகுதிகள் எனலாம். ஆனால் நான்கா வதாக அமைவது பிறநாடுகளுடன் உறவு களை வைத்திருக்கக் கூடிய தகமையா கும். ஆனால் இந்த அமைப்பு ஏனைய அரசுகளோடு தொடர்புகளை வைத்திரு க்க முயன்றாலும் மற்றைய அரசுகள் முன் வராத போது அது சாத்தியமில்லை.

இது ஒரு தரப்பால் தன்னிச் சையாக ஏற்படுத்திக் கொள்ளக்கூடிய ஒரு விடயமல்ல. இதை நான்காவது தகு தி என்று கூறுவதைவிட முதல் மூன்று தகுதிகளும் சிறப்பாக உள்ளது என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான நற்சான் றிதழ் என்றே கூறவேண்டும். ஏனெனில் இந்த அமைப்பு சரியாக இயங்கினால் மட் டுமே இது சாத்தியப்படும். இந்த விட யத்தில் தமிழீழ நிழலரசு எந்த வகையில் செயற்படுகின்றது? எவ்வாறு தொடர்பு களை ஏனைய அரசுகளுடன் பேணுகின் றது என்பதே முக்கியமானதாகும்.

அந்த வகையில் தமிழீழ நிழ லரசு அண்மைக் காலமாக மேற் கொண்டு வரும் சர்வதேச உறவுகள் இன்னும் ஆழ மானதாகவும். அழுத்தமானதாகவும். விரை வாகவும். விவேகமானதாகவும் அமைய வேண்டிய தேவை முற்றுமுழுதாக தமி ழீழ நிழலரசுக்கு அதாவது தமிழீழ விடுத லைப் புலிகளுக்கு உண்டு. ஏனெனில் புதி ய நாட்டை உருவாக்கப் போராடும் எம க்கு இந்த நான்காவது அம்சம் மிகவும் அத்தியாவசியமானது.

இந்த இடத்தில் இன்னுமொ ன்றைப் தெளிவுபடுத்த வேண்டிய சூழ் நிலையொன்று இங்கே தோன்றுகின்றது. அதாவது தமிழீழ விடுதலைப் புலிகளும் அங்கீகாரம் பெறமுடியுமா? என்பதே ஆகும். எனினும் தமிழ் மக்களின் பிரதிநி திகள் தமிழீழ விடுதலைப் புலிகள் என்ப தை ஏற்றுக் கொண்ட அமெரிக்கா. இந்தி யா ஏன்? ஐ.நா. சபை கூட இன்னும் விடு தலைப் புலிகளை சர்வதேச பயங்கரவாதப் பட்டியலில் அடக்கியிருக்கின்ற சூழ்நிலை யில் அங்கீகாரம் என்பது அத்தியாவசி யமாகின்றது. அங்கீகாரம் என்பது ஒரு கிளர்ச்சிக் குழுவோ அல்லது ஒரு விடுத லை அமைப்போ ஆள்புலத்தின் பெரும் பகுதியைத் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரும் போது அல்லது அர சாங்கப் படைகள் சரணடையத் தொடங் கும் போது சர்வதேச அரசுகள் உண்மை நிலையை ஒத்துக் கொள்வதாக அமை ந்து விடும்.

இந்த நிலையில்தான் ''அங்கீ காரம்'' என்பது ஆரம்பமாகும். இது எமது தாயகப் பிரதேசத்தில் நாம் கண் முன்னே கண்ட வரலாறு. எமது மண் எம்மிடம் வந்தபோது. அதாவது எமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்ட போதும். எதிரியவன் எம்மிடம் சரண டைந்த போதும் சர்வதேச சமூகம் எம் மையும். எம் விடுதலைப் போரையும் அங் கீகரித்ததோடு நேரடியாகவே சமாதானம் என்ற போர்வையில் களத்தில் குதித்தன.

ஏனெனில் அந்த நாடுகளின் பொருளாதார நோக்கமே எனலாம். இந்த வகையில் எமது போர்நிலையானது சர்வ தேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஏனெனில் எல்லா உள்நாட்டுப் போர்களும். கிளர்ச்சிகளும் போர் நிலைகள் என்ற அந்த ஸ்தைப் பெற்று விட முடியாது. வெளியர சுகளின் கவனத்தைத் திசை திருப்பும் அளவுக்கு பாரிய போரும். திட்டவட்ட மாக ஒழுங்கமைக்கப்பட்ட குழுவாகவும். அதியுயர் ஆணை வழங்கும் ஒருவரின் நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்கும் போது அங்கீகாரம் பெறுவது இலகுவானது.

இவ்வாறானதொரு நிலையி னை தமிழீழ விடுதலைப் புலிகளிடம் காணலாம். ஒரு சிறப்பான தலைமைத் துவம். சர்வதேசமே வியக்கும் வண்ணம் நகர்வுகளையும்.போரியல் இராணுவ இராஜ தந்திரங்களும் கொண்ட ஒரு தலைசிறந்த இராணுவம். உலகை வியக்கவைக்கும் அளவிற்கு தாக்குதல் நடாத்தி சர்வதேச த்தின் கவனத்தைத் திசை திருப்பிய தமிழீ விடுதலைப் புலிகளை ஏன் சர்வதேச ரீதி யாக அங்கீகரிக்க முடியாது. பிற அரசுகள் புதிய அரசாங்கத்தை அங்கீகரிப்பதில் மிக அவதானமாகச் செயற்பட வேண்டியிருக் கும்.

அது போல விடுதலை அமை

**குணரெத்தினம்-உமாறமணன்**
**மட்.செட்டிபாளையம் ம.வி**

ப்புக்களையும் அங்கீகரிக்கும் போது மிக அவதானமாகவும். தமது நன்மை கருதி யுமே சில சர்வதேச நாடுகள் புதிய அரசை யும். விடுதலை அமைப்புக்களையும் அல் லது கிளர்ச்சிக் குழுக்களையும் அங்கீகரிக் கின்றன. இவ்வாறான புதிய அரசை அல் லது அமைப்பை அங்கீகரிப்பதற்கு வெளி யரசுகளுக்கு சட்டஅதிகாரம் எதுவும் கிடையாது. இந்த நிலையில் விடுதலைப் புலிகள் சர்வதேச அரசுகளின் ஆதரவை இப்போதிருந்து தக்கவைத்துக் கொண் டால் மாத்திரமே சுதந்திர தமிழீழ தனியரசு உருவாகும் போது ஆதரவு என்பது கிடைக்கக் கூடியதாயிருக்கும்.

எனினும் அண்மைக் காலமா க அரசாங்கத்தை அங்கீகரித்தலில். அது போல அரசுகளை அங்கீகரித்தலில் பல் வேறு பிரச்சினைகள் தற்போது எழுந்து ள்ளதால் பித்தானிய(1980). மற்றும் அமெரிக்கா (1977) போன்ற நாடுகள் அங்கீ காரத்தில் என்ற நிலையைக் கை விட்டுள் ளன. இந்நிலையில் நாம் இந்த நாடுகளிடம் எம்மை ஆதரியுங்கள். எமது தாயகத்தை ஆதரியுங்கள் என்று கோருவது பொருத்த மற்றது. அது சாத்தியமற்றதும் கூட. ஏனெனில் இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியாவின் நிலைப் பாட்டையே அமெரி க்காவும் கொண்டுள்ளது. இப்படியிருக் கையில் நாமும் சந்தர்ப்பவாதிகளாக மாறு வது என்பது அவசியமானது.

அது மாத்திரமின்றி அது தவி ர்க்க முடியாததும் கூட. அந்த வகையில் எம்முடன் இந்த வல்லரசுகள் வசை பாடிக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் நாம் அதன் எதிர்த் துருவங்களின் பக்கம் சாய் வதே சாலப் பொருத்தமானது. எனினும் விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் பிரதி நிகள் என்பதை ஏற்றுக்கொண்ட நாடுகள் மறைமுகமாக தமிழீழ விடுதலைப் புலிக ளின் போர் நிலையையும் அங்கீகரித்துள்ள து என்றே கூறவேண்டும்.

இந் நிலையில் விடுதலைப் புலிகள் சர்வதேச அமைப்பொன்றாக உரு வாகி விட்டார்கள் என்பதே கண்கூடு. இந் நிலையில் அவர்களுக்கு பல உரிமைகளு ம். கடப்பாடுகளும் சுமத்தப்படும் நிலை உள்ளது. இதேவேளை விடுதலைப் புலிக ளை சர்வதேச நாடுகள் அங்கீகரித்தால் அந் நாடு விடுதலைப் புலிகளுக்கு சமமான இராணுவ இராஜதந்திர உதவிகளை வழ ங்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். கணிச மான அளவு ஆள்புலத்தையும். அப்பகுதி மக்களின் பெரும்பான்மையோரின் ஆதரவு ம் கொண்ட விடுதலைப் புலிகள் எதிர்கால சுதந்திர தனியரசுக்கு அதாவது ''பாதுகா ப்புரிமை அரசுக்கு'' தகுந்த இராஜதந்திர நகர்வுகளை மேற்கொள்வதன் மூலம் எதிர் கால விடுதலை இலட்சியத்தை விரைவா க்கிக் கொள்ளலாம்.

## மறுபடியும் மாமனிதனாய்.... சிவராமனாய்....

கல்லாகிப் போனது
மனம்.
அழவில்லை
நாங்கள்.
அதனால்
விழிகளைச் சுற்றி
வீக்கத்தின்
வளையங்கள்!

ஏட்டிக்குப் போட்டியான
படுகொலைகளால்
எத்தனை நாளைக்கு
எத்தனை பேருக்கு
அழுதழுது
வீரத்தை எங்களிடமிருந்து
விரட்டிவிடுவது!!

எழுத்துக்காய்
கழுத்தைக் கொடுத்தவனின்
கழுத்துக்கு
மாலை வாங்கினோம்.
ஆனால்.....
மாட்டிய தென்னவோ
தொங்கிப்போன~ அவன்
புகைப்படத்தில்தான்.

''மை'' கொண்ட
தூரிகையால்
மெய் மட்டும் எழுதினான்.
இறுதியில்
''மெய்''யே இவன் உயிருக்கு
மெய்யில்லாமல் போய்விட்டது

சாவுக்கு
சங்கீதம் தெரியாது
இல்லையென்றால்
ஒரு
புல்லாங்குழலையே
புதைத்திருக்குமா?

சாவென்பது
சோகமறியாது
இல்லை யென்றால்
சிக்கனமாய்
சேமித்து வைத்திருந்த
சிறுதுளி கண்ணீரை
சிந்த வைத்திருக்குமா?

மாமனிதனே!
சிவராமனே!
அடிமை இருளுக்குள்
அடைபட்டுக் கிடந்த
எங்களுக்கு
வெளிச்சம் கொடுக்க
தூரிகையின் முனையில்
விடுதலை என்னும்
தீக்குச்சி உரசினாய்!!

சிறுபான்மை இனமாய்
சிதறிக் கிடந்தோம்
எழுத்துச் சரத்தில்
ஒன்றாய் கோர்த்தாய்!!
இறுதியில்
ஆன தென்ன?

கேட்டதோ~உன்
மரணச் செய்தி.
ஆனால்......
மரித்துப் போனது
நாங்களல்லவா?

வறுமைக் கோடுகளோ
வாழ்க்கையின் பாதை
வரைந்தது.
கண்ணீர் துளிகளோ~உன்
கல்லறைச் சாந்துக்கு
கலவி குழைத்தது.

அன்று
அழுதபோது
விரல் நீட்டி
எங்கள்
விழி துடைத்தாய்!
விம்மிய விக்கலுக்கு
தெம்புத் தண்ணீர்
புகட்டினாய்!

இன்று
விழி துடைக்க~உன்
விரல்கள் வேண்டும்.
துயர் போக்க~உனது
துணை வேண்டும்!!

உன் சிந்தனை
எங்களுக்கு வாசிகசாலை!
உன் அருள் வாக்கு
எங்களுக்கு கலாசாலை!
உன் போதனைகள்
எங்களுக்கு போதிமரம்.

மொழிகளை
மொழி பெயர்த்தாய்
இலக்கண இலக்கியங்கள்
உன்
சட்டைப்பைக்குள்
சங்கமமானது.
பகைப் பாம்புகளின்
பல் பிடுங்கி
எழுத்தின் வசீகரத்தால்
மகுடியின்றி
மயங்க வைத்தாய்!

முடிவில்
பால்குடித்த
பாம்புகளோ~உன்
வாழ்க்கையின்
வரைவிலக்கணத்தை
நஞ்சு கொண்டு
நலிய வைத்து விட்டதே.

தினமும்
உன் கல்லறைக்
கதவுகளைத்
தட்டுகிறோம்
மறுபடியும்
மாமனிதனாய்.......
சிவராமனாய்........
இம் மண்ணில்
அவதரிக்க வேண்டும் மென்று!!!!!!!

''கவிப்பித்தன்''
கமால்தீன். அல். ஆஸாத்
ஏறாவூர்-03

# வானவில்லே! ஒரு கவிதை கேளு......

தொடர் நவீனமாக வரும் ஒரு நவீன தொடர்....

**எட்டாவது நிறம் வெள்ளை**

வானவில்லில் இல்லை வெள்ளை. ஆயின், வெள்ளை இல்லாமல் வானவில்லே இல்லை. வெள்ளை தூய்மையானது. வெள்ளை வண்ணங்களின் அன்னை. உண்மையில், இன்மைதான் வெண்மையின் தண்மை. வெள்ளை மலர் அர்ச்சிப்புக்குரியது. வெள்ளை உள்ளம் கள்ளம் இல்லாதது. வெள்ளைப் பால் இனிமையானது. வெண்புறா சமாதானத்திற்குரியது. வெள்ளைப் பிரம்பு விழியிழந்தோருக்குரியது.

பூண்டு வகைகள் வெள்ளை நிறத்திற்குரியன... வெள்ளைப் பூண்டில் விள்ள முடியா மருத்துவம் உள்ளபடியால், சமையல் உள்ளே தனியிடம் உள்ளது. அள்ள அள்ளக் குறையாத 'ஆர்கனினோஸல் பைப்ளவ னொய்ட்ஸ்' உயிர்ச்சத்துள்ளதால், குருதி உறைதல் இல்லை. மாரடைப்பு இல்லை. வாயுத்தொல்லை இல்லவேயில்லை.

'வெள்ளை மனம் கொண்ட பிள்ளை ஒண்ணு... வேடிக்கை காட்..'டியதை கவிதையாக்கினான் கண்ணதாஸன். 'மேகம் ஒண்ணு வானில் அலைகிறதே வெண்மையிலே. வானத்திற்கு வெள்ளையடிக்கிறதா உண்மையிலே....?' எனச் சந்தேகப்பட்டான் வைரமுத்து..

டெலிகாவின் வெள்ளைக் கண்ணாடி வழியே மேல்த்திசையில் அகன்று, வளைந்து. விரிந்து தெரிந்த வானவில்லைப் பார்த்தாள் ஆக்கிலா. தமிழில் வானவில்.... ஆங்கிலத்தில் ரெயின்போ.... சிங்களத்தில் தேதுனு... அரபியில் கவ்ஸூன்.... பிரஞ்சில் டெபார்ஸோவ்.... உலகின் எல்லா மொழிகளிலும் பேசப்படும் வானவில்..

'ஆக்கீ... அழகிய கூர் மூக்கீ... வானவில்லை நோக்கினாயா..?

'வானவில்லுடன் வாழ்கின்றேன் கமலீ....'

'யூரிவர்ஸிற்றியில் உம்மட புனை பெயர் வானவில் அல்லவா..?' 'உண்மை.'

'வானவில் பற்றி தமிழ்ச் சங்கத்தில் ஒரு வசனவில் எழுதினீரே ஞாபகமிருக்கிறதா...?'

'கொஞ்சமிருக்கும்....'

'நெஞ்சிலிருக்கும் வரையும் சொல்லேன்.. ஊர்வரும் வரைக்கும்... நாவினிக்கும்.... காதினிக்கும்....'

சீர் வேகத்தில் டெலிகா விரைந்தது.. ஏஸிக்குளிர் நாசிக்குள்ளேறியது.. ஆக்கிலாவின் தலைமுக்காடு சற்றுத் தளர, அவளது உச்சிவகிட்டு வெண்மை தெரிந்தது.. சுருண்டு தெரிந்தது கருங் கூந்தல்.. உருண்டை விழி மூடி தானெழுதிய கவிதையை நினைவு கூர்ந்தாள்... கமலினியும் சற்றுச் சாய்ந்து சொகு சாய் அமர்ந்தாள்.. வானவில்லின் பின்னணியில் கமலினி வானரசி போலிருந்தாள். ஆக்கிலாவைப் பார்த்தாள்... எப்பேர்ப்பட்ட புத்திசாலிப் பெண்ணிவள்.... பின் அவளிடம் கேட்டாள்.....

'ஆக்கீ... வானவில் என்றால் என்ன?

'வானவில் காலக்கிளி அணிந்த கழுத்து ஆரம்....' - முதலடி சொன்னாள் ஆக்கிலா....

'அடடா... அப்புறம்....?'

வியந்து இரஸித்தாள் கமலினி.

'மாலைப் பெண்ணின் மசக்கை மருதாணி.'

'அட'

'வானவில், உடுக்கள் சுற்றும் குடை ராட்டினம்... வான ஐயரின் வர்ணப் பூநூல்......'

'ஐயோடா ஆக்கீ... இன்

**என்.ஏ.தீரன்**

னும்...'

'வானவில், ஆதி எறிந்த பாதி உடைந்த வர்ணப் பம்பரம்..'

'ஓஹ்....!'

'ஹை.........'

'வானவில் திசைக் கோணம் வளர்க்க பரிதி வைத்த பாகைமானி'

'வானவில், கண்களுக்கு கதிர்கள் எழுதிய ஏழ்சீர் விருத்தம்'

'அம்மாடியோவ்....'

'வானவில், மழைக் காதலனின் மின்னஞ்சல் முகவரி....'

'ஹட.....'

'வானவில், குளிர்காலக் கணவன் அனுப்பிய வெளிநாட்டுக் கடிதம்...'

'ச்சூ......'

அந்த அதிசய வில்லைக் கெணர்ந்து கைவளையாய் உனக்குத்தர அண்ணார்ந்து பார்த்தேன் காணவில்லை வானவில்லை...'

'ஐயோடா ஆக்கீ. அந்த நேரம் எங்கட பேக்கல்ற்றியில இந்தக் கவிதை தான் எங்களின்ர தேசிய கீதம்.'

'புகழாதே சிட்டு.... இதற்குப் பதில் சொல்..... அத்தியாவசிய உத்தியோகம் பற்றியாகிவிட்டது. எப்படியாகும் இனி உன் வாழ்வு ....?'

'டிஸிஸன்ஸ் போல் இஸ் நொட் இன் மை கிரவுண்ட் ஆக்கீ.'

'வ்வாட் எ புவர் ரிப்ளை...... ஷிட்.... சீச்சி....'

'ஆக்கீ.. நீ சொல்... உன் வா ழ்வு... என்ன செய்யப் போகிறாய்....?'

'ஒரு வானவில் வாங்கப் போகிறேன் கமலினி.'

'ஓக்கே.... வாங்கி... வீடு கட்டப் போகிறாயா......?'

'ஜீக்கே வங்கியில் ஈடுவைக்கப் போகிறேன்.....'

கிக்கிலீரென இருவரும் சிரித்தனர்... வெகு காலங்களின் பின்னர் மனம் விட்டுச் சிரித்த போது தாழையடிச் சந்தி திரும்பியது டெலிகா... அதே நேரத்தில் பின்னால் வெகு வேகமாக ஒரு அதிரடி ஜீப் இவர்களை விரைந்து நெருங்கியது. முந்திச் செல்ல அவசரப் பட்டது. நீ...ட்டொலி எழுப்பியது. டெலிகா வேகம் குறைக்க அதிரடிப் படை ஜீப் வலது பக்கமாக முடுகலெடுத்தது. முந்திச் சீறியது. அந்தச் சாரதி இந்தச் சாரதிக்கு சிநேகிதமாய் தலையசைத்தது தெரிந்தது. முந்திய அதிரடி ஜீப் நடு வீதிக்கு வந்து சர்வ சுதந்திரமாகப் பறந்தது...... ஆனால்...... இருபதடி? தூரத்திலேயே அதன் விதி முடிந்தது. மிகப் பயங்கரமாக.... மிகப் பரிதாபமாக.....

நெஞ்சு திடுக்கிடும் பேரிடி ஒன்று கேட்டது.... திடீரென விளையாட்டுப் பொம்மை ஜீப்பு போல பத்தடி உயரே தூக்கி வீசப்பட்ட அதிரடி ஜீப் அதிவேகத்தில் பின் வந்த இவர்களின் டெலிகாவின் மீது மோதி விசிறியடித்துச் சிதறியது.... சட்டென டெலிகா தன் கட்டுப் பாட்டை இழந்து சாய்வுக் கோணத்தில் அரைபட்டு எரிபொருள் தாங்கி உஸ்ணத்தில் வெடித்துச் சிதற... பேரிடிச் சத்தத்துடன் இரு வாகனங்களும் தாழையடிச் சந்தியில் ஒரு கும்பமாய் ஜூவாலிட்டு செந்தீயாய் எழுந்தன... எரிந்து விழுந்தன.... விழுந்து சிதறின..... சிதறியும் எரிந்தன....

இந்தப் பயங்கரக் கோரத்தையும், எரிந்த பயங்கரக் கோலத்தையும் மேலே, வர்ணிக்கப்பட்ட வானவில் மட்டும், பார்த்துக் கொண்டிருந்தது தனிமையாக... அதன் வண்ணங்களும் கலைந்து கொண்டிருந்தன. வெறும் வெள்ளைக் கனவுகளாக....... (முற்றும்)

**(வானவில்லின் வர்ண ஞாபகங்கள் ஒரு போதும் அழிவதில்லை)**

# முஸ்லிம் தமிழர் கிராமியக் கவியமுதம்

சென்றவாரத் தொடர்ச்சி.....

''இறக்காமத்து மச்சாளுக்கும் ~  
நெயினாகாட்டு  
இளங்கிளியாள் மம்மதுக் காக்காவுக்கும்  
முறதப்பிப் புள்ள வந்தா ~ ஒங்கட  
முஸிமான்கள் வெட்டு வீனங்..... கா....''

என்று விபரீதங்களையும், மலர்விழியாள் பாடிக் கொண்டிருந்ததைக் கேட்டதும் பக்கத்து வயலில் களை பிடுங்கிய கைகளுடன் முத்து வேலன் வரம்புகளில் ஓடிவந்தான்.

''முஸ்லி மாக்கள் கட்டிப்புடிச்சி  
முறைகேடாக நடந்ததெல்லாம்  
மலர்விழி மச்சாளுக்கு ~ இப்ப  
மனசறியத் தெறிஞ்ச தெப்படி கா.....?''

என்று முத்துவேலன் பாடிக் கொண்டு வந்தவனைக் கண்டு மலர்விழியும் பயந்து விட்டாள். முத்துவேலன் மச்சானைச் சமாளித்துப் பாடுகிறாள்.

''அடுத்த வட்ட அல்லசத்தார்  
அந்தரங்கள அறிஞ்சிரீக்கோணுங்கா  
தொடுப்பிரிந்தா ஆவத்திலே ~ நாம  
துணை செய்யிறதும் தர்மந்தாங்க....''

என்று நீதியையும் விளக்கிப் பாடிய மலர்விழியை அருகணைத்து முத்துவேலன் பாடுகிறான்.

''மலர்விழியாள் வாய் துறந்தா ~ தமிழர்  
மரியாதயும் நீதி வருங்கா . மச்சாள்  
கலகங்கள் வந்துடாமே ~ இவகளை  
கலியாணம் கட்ட வழி செய்யணுங்கா...''

என்று ஏற்றுப் போகும் படி செல்ல முஹம்மதையும், ஆயிஷாமுத்தையும் கைகளைப் பிடித்துக் கொடுத்து கூட்டிச் சென்று கொண்டிருந்தார்கள். எங்கே?.....

-முற்றும்-

# கதிர்காமம் வந்த வரலாறு.....

கதிர் - கமம் - பெயர் கதிர்காமம் என்று இன்று பெயர் ஒரு (ா) அரவு மாற்றத்துடன், உலகமெல்லாம் பேசப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். கதிர்காம வரலாறு பற்றி, பல கதைகளும், புளுகல்களும் சிலர் எழுதியுள்ளனர். இன்று சிங்கள அரசுகளாலும் ஆக்கிரமிக்கப்பட்ட முதலுரிமை கொண்டாடி புத்தர் மா சிலை 50 அடி உயரத் தூபியும் வைத்துள்ளனர். 500 மீற்றருக்கப்பால் உள்ளது. இது பற்றிப் பின்னர் சில வரலாற்றுப் பதிவுகளை எழுதுகிறேன்.

1950ம் ஆண்டுகளில் கொண்டை வெட்டான் வட்டை வயல், சேனைக்காடுகளில், சம்மாந்துறை, வீரமுனை அடுத்தடுத்த ஊரவர்கள் வயலில் ஏத்தாள் ஆரம்பிக்கு முன் கதிர்காமக் கந்தனுக்குப் பொங்கல் படைப்பார்கள். முஸ்லிம்கள் ஹயாத்து நபி பேராலே புக்கை ஆக்கி (பால்சோறு) வாழைப் பழங்களும் வைத்துப் பகிர்ந்து, பாத்திற ஓதியும் ஏரில் காளை மாடிரண்டைப் பூட்டி உழுதுவார்கள். இந்துக்கள் பாலில் அரிசி, பயறு, வாழைப்பழம் கலந்து பொங்கி செம்பரத்திப் பூ, மல்லிகைப் பூ, வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம், தலைவாழை இலையில் பொங்கல் படைத்து நாட்டுக் கவி மந்திரமும் ஓதி, ஏர்பூட்டும் விழா நடாத்தும் வேளை

''கந்தப்பா முருகா  
கதிர்காம வடிவேலா.......  
முந்தப்பா காலம் போலே  
முழுவயலும் விளையணுமப்பா.........''

என்று பாலிப்போடியார், தன் வயலில் கவிபாடி உழுதும் சப்தம் கேட்டதும் அலிபாபா தன்வயலில் ஏர்பூட்டி உழவும் போது இப்படிப் பாடுவார்.

''காணாத்த மாடு(கள்) தேடிக்  
கனதூரம் காடுபோயும்  
காணல்லகா நாள்முழுதும் கண்ணிருட்டி  
வழிதப்பி போனதாங்கா.....''

என்று அலிபாபா கவி பாடியதைக் கேட்டதும் பாலிப்போடியும் வரலாறு பாடிக்கொண்டு ஏரும் உழுதினார்.

"கடுமிருட்டும் காற்றும்மழை  
கடுங்கூதல் கால்மேல் நடுக்கம்  
குடுகுடுத்த கிழவன் வந்து  
குந்திருக்கக் குடில் கேட்டாரங்கா...."

என்று பாடியதைக் கேட்டதும் அலிபாபாவும் வரலாற்றைப் பாடுகின்றார்.

"என்னகா கிழவரப்பா  
எங்களுக்கே இடமில்லகா........  
எத்தலஞ்சி மாடுதேடி இம்மலக் காட்டுக்கே  
சாகுறங்கா..."

என்று அலிபாபாவும் பாலிப்போடியும் பாடும்போது, புதினம் பார்க்க வந்த பொடியன்களுடன் நானும் இவர்களின் நாட்டுக் கவிகளைக் கேட்டு, கிட்ட நெருங்கி விளக்கம் பல கேட்டேன்.

"ஆமா போடிமாரே, இந்தக் கவியெல்

**கலாபூசணம்**  
**மருதூர்வாணர்**

லாம் நம்முன்னோர்கள் ஆயிரமாண்டுக்கு முன்போடியதாம். எங்களூர் மூத்தம்மா மூத்தப்பாச் சனங்களும் பாட்டுக்குப் பாட்டெறிந்தும் பாடுகின்றனர். அது சரிகா அந்தக் கிழவன் அங்கெப்படிகா, அந்தக் காட்டு மலைக்குள்ளே வந்தவர்? ஒள்ளுப்பம் விளக்கமாப் படியுங்க போடிமாரே, நானும் பாடமாக்கி, மத்தச் சனங்களும் தெரியும்படி கதிர்காம வரலாற்றைக் கவிபாடுவேன்.'' என்று கெஞ்சலாகக் கேட்டதும், பாலிப்போடியார் ஏருழுதியவாறே மாடுகளின் வாலைச் சுண்டி இழுத்துக் கதியா நடை போட்டுப் பாடினார்.

"அந்தக் கிழவன் அற்புதங்கள் பலசெஞ்சி  
காட்டினாராமடோ.....  
குந்திக்கிரீக்க குடில் கட்டிக் கேட்டாராம்  
மழபெய்யக்குள்ள...."

"பாருங்கோ தம்பிமாரே கிழவர் படுத்தின பாட்டை. கம்புதடி வெட்டலாமே மழை ஒரு பக்கம். இருட்டொரு பக்கம், கத்தியுமில்லை என்று ஏசினாங்களாம். கிழவன் விட்டபாடில்லை. பூமியில் கிடந்த கத்தியை எடுத்தும் கொடுத்தாராம். ஆ.... வானமும் வெளிச்சமாத் தெரியுது..... அந்தா பார் மக்களே சூடு போட்டு வீசிய வைக்கல் கும்பம் தெரியுது. என்றெல்லாம் அதிசயம் காட்டிக் கொண்டிருந்தாராம் அந்தக் கிழவர். பக்கத்தில் கங்கை நதி நாவலாற்றை நோக்கி ஓடிக் கொண்டிருந்ததாம்.

"கத்தியை எடுத்து நாங்கள்  
கடுகதியாய்க் கம்பு வெட்டி  
சுத்தமாக்கிப் புட்டியிலே;  
சுறுசுறுக்காக் குடிலாக்கினோங்கா..."

"மழையும் பெய்யுதுகா;  
மளமளண்டு முழங்குதுகா  
வேளையும் கும்மிருட்டு  
வெளிச்சமே இல்லையப்பா...."

என்று அந்தக் கிழவனிடம் அந்தக் காலத்திலே கேட்டாங்களாம். மாடு தேடிப் போன அந்த ரெண்டு பேரும் என்ன அதிசயமாம், கிழவரும் பாடினாராம்மே.... என்று பாலிப்போடியார் உழுதிய கலப்பையை நிலத்தில் குத்திட்டு காளைகளின் முகந்தடவிவிட்டு வரம்புக்கு மேலேறிக் கிட்டவந்து பாடினார்.

"பக்கத்திலே பாவாகுடியிருக்கார்,  
பத்த வெக்க நெருப்பிருக்கும்  
வெக்கப்படாமே போய் வேண்டிவாங்கே  
கூதல் காயுவோம்கா......."

என்று அந்தக் கிழவன் பாடினாராம். கொஞ்ச நேரத்திலே மழையும் நிண்டுதாம். வானமெல்லாம் நல்ல வெளிச்சமெல்லாம் தெரிஞ்சித்தாம். கூட இருந்த கிழவனைக் காணல்லையாம். பசி ஒரு பக்கமும் நடந்த அதிசயப் பயமொரு பக்கமும் அந்த மாடு தேடிய வீரர்கள் பாடினார்களாம்.

*தொடரும்.........*

# சுனாமி பொதுக்கட்டமைப்பை அரசியல் மேடையாக்க கூடாது

கடல்கோள் அனர்த்தம் ஏற்பட்டு 6மாதகாலம் கடந்தாலும் ''எண்ணித்துணிக கருமம்'' என்ற முதுமொழிக்கு இணங்க அரசும் விடுதலைப்புலிகள் அமைப்பினரும் பொறுப்புத்தன்மை வாய்ந்ததும், பொறுமையானதும், தெளிவனதும், அரசியல் பக்குவமும் விவேகமிக்கதுமான ஒரு அணுமுறைக்கு ஊடாக ஒரு பொதுக் கட்டமைப்பு உருவாக்கியிருப்பது பாராட்டத்தக்கது என விஸ்வகித்து பரித்த கிழக்குப் பிராந்திய இணைப்பாளரும் நம்பிக்கை பொறுப்பாளருமான வர்ணகுல சிங்கம் கமலதாஸ் விசேட பேட்டியை வழங்கினார். அவர் மேலும் பேசுகையில்.

இப் பொதுக்கட்டமைப்பின் மூலமாக அரசியலுக்கு அப்பாலும் இனவேறுபாடுகளுக்கு அப்பால் உரிமைகளுக்காக போராடுகின்ற இடம் பெயர்ந்த மக்களுக்காக தொண்டு செய்வதற்காக அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் ஒன்று பட்டு இவ்மனிதாபிமான சேவைகளை வழங்குவதற்கு முன்வந்திருப்பது மிகவும் பாராட்டத்தக்க ஒரு விடயம். இதையிட்டு இந்த மக்கள் மகிழ்வு கொள்கிறார்கள்.

இந்தச் சுனாமியானது சுனாமி அலையடித்துச் சென்ற சற்று நேரத்தில் எங்கள் தேசத்து மக்களை எல்லாம் ஒருங்கிணைத்து அவர்களது மனிதநேய பண்பாட்டை வெளிப்படுத்தியது. இதனூடாக ஒரு சமாதானம் பிறந்து விடும் என்று ஒரு அங்கலாய்ப்பும், ஆவலும் எங்கள் எல்லோருக்கும் ஏற்பட்டது. இருப்பினும் அரசியல் சதிகாரர்கள், பதவி ஆசைபிடித்தவர்கள் சுயநலம் கொண்டு மக்களைப் பிரிவினைகளுக்கு ஊடாக தங்களை வளர்த்துக் கொண்டவர்களுக்கு இந்த வாய்ப்பைப் பயன்படுத்த விரும்பாமல் அவர்கள் அரசியலில் மக்களைப் பிரித்து அவர்களை வேதனைப்படுத்தி அதனூடாக ஒரு வெறுப்புத் தன்மையை மக்களிடம் வளர்த்து அதனூடாக தாங்கள் வாழலாம் எனச் செயற்படுகின்றனர்.

ஜனாதிபதி அவர்கள் ஒதுக்கி வைத்து விட்டு இந்த பொதுக்கட்டமைப்பை அனுமதித்திருப்பது பாராட்டத்தக்க விடயம். ஆனால் அனுமதிப்பது மட்டுமல்ல அதைத் தொடர்ந்து இயங்க வைப்பதற்கு அவர்கள் ஆவண செய்ய வேண்டும் என இந்தக் கட்டத்தில் கேட்டுக்கொள்கிறோம்.



இந்த விடயத்தில் விடுதலைப்புலிகளின் பொறுமையை நாங்கள் பாராட்டாமல் இருக்க முடியாது. தெளிவான தேசியக் கண்ணோட்டத்தோடு ஒரு விவேகமிக்க அணுகு முறையை அவர்கள் எடுத்து தமிழ் மக்களுக்கும், முஸ்லிம் மக்களுக்கும் வட கிழக்கு மாகாணத்தில் ஒரு நல்ல வாய்ப்பை அமைப்பதற்கு ஒரு பாதையை அமைத்திருக்கின்றனர். இதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

முஸ்லிம் மக்களுக்காக முதலைக் கண்ணீர் வடிக்கும் சிலர் தாங்கள் வகிக்கின்ற பதவிகளை நாங்கள் அரசாங்கத்தில் பங்கு கொண்டு எடுத்துக்கொண்டு தங்கள் கையில் வைத்துக் கொண்டுள்ள அமைச்சுக்களை எல்லாம் எண்ணிப் பார்ப்பதில்லை. புனர்வாழ்வு அதிகாரசபை, வடகிழக்கு புனர்வாழ்வு அமைச்சு, உட்கட்டமைப்பு நிர்மான அமைச்சுக்கள் என இவ்வாறு பல அமைச்சுக்களை சுமார் 20வருடங்களாக



**''முஸ்லிம் மக்களுக்காக முதலைக் கண்ணீர் வடிக்கும் சிலர் தாங்கள் வகிக்கின்ற பதவிகளை நாங்கள் அரசாங்கத்தில் பங்கு கொண்டு எடுத்துக்கொண்டு தங்கள் கையில் வைத்துக் கொண்டுள்ள அமைச்சுக்களை எல்லாம் எண்ணிப் பார்ப்பதில்லை. புனர்வாழ்வு அதிகாரசபை, வடகிழக்கு புனர்வாழ்வு அமைச்சு, உ ட்கட்டமைப்பு நிர்மான அமைச்சுக்கள் என இவ்வாறு பல அமைச்சுக்களை சுமார் 20 வருடங்களாக வகித்துவருபவர்கள் இந்த முஸ்லிம் மக்களுக்காக ஏதும் செய்யவில்லை போல் தெரிகிறதா? அவர்கள் தமிழ் மக்களுக்குத் தான் செய்யவில்லை.''**

வகித்துவருபவர்கள் இந்த முஸ்லிம் மக்களுக்காக ஏதும் செய்யவில்லை போல் தெரிகிறதா? அவர்கள் தமிழ் மக்களுக்குத் தான் செய்யவில்லை.

சுனாமி நிவாரண நிதிக

**த.க.சரவணன்**

ளுக்கு ஊடாக வருகின்ற நன்மையைக் கூட தடுத்து விடுவார்கள் போல் எங்களுக்கு ஓர் அச்சம் இருக்கின்றது. நாங்கள் முஸ்லிம் மக்களைப் பார்த்துக் கேட்பது என்னவென்றால் தமிழ் மக்கள் போல் முஸ்லிம் மக்களும் அதிகளவு பாதிக்கப்பட்டு இருக்கின்றனர். இவர்கள் தவறான அரசியல் வாதிகளினால் வழிநடத்தப்படாமல் ஒற்றுமையாக இந்த சுனாமி நிவராண பொதுக் கட்டமைப்பில் பங்கெடுத்து சுனாமி அகதிகளுக்கு தேவையான சேவையைச் செய்ய வேண்டும். அது போன்று இவர்களை இந்த அரசியல் வாதிகள் சுனாமி ஒரு மனிதாபிமான செயற்பாட்டுக்குள் அரசியலைப் புகுத்தாமல் அரசியலை அரசியல் மேடைகளில் வைத்துக் கொள்ளுமாறு ஒரு நெருக்கடியை இந்த முஸ்லிம் தலைவர்களுக்குக் கொடுக்க வேண்டும். ஏன்னென்றால் இந்த சுனாமியின் நிதியினூடாக தமிழ் முஸ்லிம் உறவு வளரும். இதனூடாக அவர்களின் தனித்துவங்களும் நல்வாழ்வும் மேம்படும் என்பது எங்களுடைய கண்ணோட்டம்.

எதிர்காலத்தில் உலகம் ஒன்று பட்டு பொருளாதாரப் பிரச்சினையை வென்று வரவேண்டிய நேரத்திலே நாங்கள் தொடர்ந்தும் இவ்வாறு பேதப்பட்டுக் கொண்டு பிரச்சினைப்பட்டுக் கொண்டு இருக்கக் கூடாது. குறிப்பாக எங்களுடைய தேசத்தில் இன்னமும் 8 இலட்சம் தமிழ் மக்கள் யுத்தத்தினால் அகதியாக்கப்பட்டு அகதி முகாம்களிலும், தனியார் வீடுகளிலும் அல்லலுற்றுக் கொண்டு இருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் தாங்கள் சொந்த தாயகப்பூமிக்கு திரும்புவது இன்னமும் நடைபெறவில்லை. ஆனால் இந்த சுனாமி அகதிகளாவது தங்களுக்கென்றொரு இருப்பிடத்தை அமைத்துக் கொள்வதற்கு மீள்கட்டமைப்பதற்கு நாங்கள் வழி வகுக்க வேண்டும்.

ஆரம்பத்தில் இதைச் செய்தால் அடுத்தகட்டமாக விடுதலைப்புலிகளும், அரசும் ஒன்று பட்டு யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இந்த 8 இலட்சம் அகதிகளின் மீள்குடியேற்றப் பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியும். ஆகவே இது போன்ற பொதுக்கட்டமைப்புக்களை அமைத்து அதனூடாக நம்பிக்கை, நல்லுறவு என்பன பிரிந்து கிடக்கின்ற இனங்களுக்குமத்தியில் உருவாக்கி அதனூடாக இந்த நாட்டில் இந்த மக்கள் மத்தியில் சாந்தியும் சமாதானமும் நிலவ வேண்டுமென எதிர்பார்க்கின்றோம்.

## மாணவர் பரிசுக் குவியல்

**தமிழ் பேசும் மாணவச் செல்வங்களுக்கு!**

*ஈழநாதம் மட்டக்களப்பு பதிப்பு மாணவர்களின் அறிவுத்திறனை விருத்தி செய்யும் வகையில் வாரந்தோறும் பரிசுத்திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது . மட்டக்களப்பு ராஜாஸ் புத்தக நிலையத்தின் அனுசரணையுடன் நடாத்தப்படும் இந்தப் பரிசுக் குவியலில் நீங்களும் அதிஷ்டசாலியாகத் தெரிவு செய்யப்படுமிடத்து பெறுமதி மிக்க அறிவு நூல்கள், பாடசாலை உபகரணங்கள், பரிசுகளாக வழங்கப்படும்.*

*நீங்கள் செய்யவேண்டியது இவை தான்,*

*கீழ்வரும் வினாக்களுக்கு சரியான விடையை எழுதி – பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தி முகவரியை வெட்டியொட்டி அனுப்புதல் வேண்டும்.*

*முதலாவது அதிஷ்டசாலிக்கு பரிசும், பாராட்டுப் பெறும் ஐந்து மாணவர்களின் பெயர், பாடசாலை விபரங்களும் பிரசுரிக்கப்படும்.*

**விடைகள் வந்து சேர வேண்டிய இறுதித் திகதி:-25.07.2005**

*அனுப்பவேண்டிய முகவரி*

**மாணவர் பரிசுக்குவியல்-42**
**ஈழநாதம் (மட். பதிப்பு), பிரதான வீதி,**
**கொக்கட்டிச்சோலை.**

**இவ்வார வினாக்கள்:-**

01. கடந்தவாரம் தொடர்குண்டுத் தாக்குதல் இடம் பெற்ற நாடு எது?
02. சர்வதேச தொழிலாளர் தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?
03. உலகில் மிகநீளமான புகையிரதப் பாதை எங்குள்ளது?
04. கிரி விகாரையைக் கட்டிய மன்னன் யார்?
05. மகாத்மா காந்தியின் சமாதி கட்டப்பட்டுள்ள இடம் எது?

### பரிசுக்குவியல் 40 இற்கான சரியான விடைகள்

01. 24 ஜூன் 2005ம் திகதி 02. குவங்கோ நதி
03. மகரகம 04. ஒக்டோபர்-15 05. றியாத்

### பரிசுபெறும் அதிஸ்டசாலி

ந.மேகநாதன்
தரம்-12 கலை
மட்.கன்னன்குடா மகாவித்தியாலயம்

### பாராட்டுப்பெறுவோர்

*01. தே. கார்த்திகாயினி*
*தரம்–12 கலை*
*மட். நாவற்காடு நாமகள் வித்.*

*02. த. ஜிவசங்கரி*
*தரம்–4 V*
*மட். விவேகானந்தா ம.ம.வி கல்லடி*

*03. ச. விஜயராஜ்*
*தரம்–9*
*மட். மாங்காடு சரஸ்வதி வித்தியாலயம்*

*04. வி. கனிஸ்ரன்*
*தரம்–6 C*
*மட். மெதடிஸ்த மத்திய கல்லூரி*

*05. நி. நிலுஜா*
*தரம்–4 V*
*மட். விவேகானந்தா ம.ம.வி கல்லடி.*

**மட்டு நகரில் சகலவிதமான பாடசாலை உபகரணங்கள் மற்றும் அப்பியாசக் கொப்பிகள் அறிவு நூல்களுக்கு :-**




**தொ.பே.இல:- 065-2222371 065-2225341**




**என் இதயநாதமே!**
**நீ சுமந்து வரும்**
**சுமையோ அற்புதம்.**
**அதிலும் நாளிதழில்**
**சுடச்சுடத் தருகின்ற**
**செய்தி எங்களை வியக்க**
**வைக்கின்றது.**
**நீ வெள்ளி தோறும்**
**வெள்ளி நாதமாய் எனது**
**இல்லத்தில் வெள்ளிக்**
**கொலுசாய் கலகலக்க**
**வைக்கிறாய்.**
**உலகஅதிசயங்களைச்**
**சுமந்து வந்து எங்களை**
**உலுக்குகிறாய். ஒவ்வொரு**
**வாரமும் ஒவ்வொருவருக்கு**
**நீ சுமந்து வரும் மடல்**
**சூப்பர். மொத்தத்தில் நீ**
**ஒரு வெள்ளி ரசம்.**
**பருகப்பருக**
**சுவைக்கிறதே தவிர**
**கசப்பதாயில்லை.**
**அரசியல், கட்டுரை,**
**கவிதை, சிறுகதை,**
**தொடர் நாவல் என பல**
**படைப்புக்களைத் தந்து**
**நாட்டு நடப்புக்களை**
**அறியத்தருகிறாய்.**
**தொடர்ந்தும் உன்பணி**
**தொடர வாழ்த்தி**
**விடைபெறுகிறேன்.**
*என்.ஜெயவதி*
*அக்கரைப்பற்று*

---

என் அன்பின் ஈழநாதமே!
என்றும் அன்புடன்
வாசகன். உனது
வாசகர்களில் நானும்
ஒருவன். உனது
வாரஇதழுக்கு சில
சிறுகதைகள், நமது
சமுதாயத்தின்
அவலங்களையும் யதார்த்த
நிலைகளையும் என் மனதில்
எழும் சிந்தனைகளையும்
எழுதுகிறேன். எத்தனையோ
பெரிய புகழ் பெற்ற
எழுத்தாளர்களை நீ
உருவாக்கியிருப்பாய். நான்
இப்போதுதான் அரும்பு விடும்
மொட்டுக்களில் ஒருவன்.
எனது எழுத்துக்கு,
சிந்தனைக்கு களம்
அமைத்துக் கொடுப்பாயா?
நாதமே உன்
ஊக்குவிப்பும்,
உற்சாகப்படுத்தலுமே எனதும்,
என்னைப் போன்றவர்களுக்கும்
நன்மையாக அமையும் என
எதிர்பார்த்து காத்திருக்கும்
இவன்.
***பாண்டியூர்***
***புலேந்திரா.***

# இலங்கையில் கீர்த்தி மிகு நாகதம்பிரான் வழிபாடு

ஆதிகால மனிதத் தோற்றத்துடன் வளர்ச்சியடைந்த வழிபாட்டு முறைகளுள் ஒன்றுதான் நாக தெய்வ வழிபாட்டு முறையாகும். இவ்வழிபாடு பண்டைய காலங்களில் உலகெங்கும் பரவலாகக் காணப்பட்டது. குறிப்பாக நாகதெய்வ வழிபாட்டுக்கும் திராவிட மக்களுக்குமிடையே ஒரு நெருக்கமான தொடர்பு அல்லது உறவு இருந்து வந்துள்ளது. திராவிட சமூகத்தில் ஒரு பகுதியினர் 'நாகர்கள் என்றே அழைக்கப்பட்டுள்ளனர். இலங்கையில் பரவலாக வாழ்ந்த பூர்வீக ஆதிக் குடிகளுள் இயக்கர்களைவிட நாகர்களே மிக அதிகமாக வாழ்ந்துள்ளனர். இவர்களிடமிருந்தே பிற்பட்ட காலங்களில் இலங்கையில் வாழ்ந்த தமிழர்கள் நாக வழிபாட்டைத் தொடர்ந்து பேணிப் பாதுகாத்து வந்துள்ளார்கள் என்பதை அறியக் கூடியதாகவுள்ளது.

மட்டக்களப்பில் ஆரம்பத்தில் புராதன குடிகளான 'நாகர்கள்' செறிந்து வாழ்ந்துள்ளார்கள் என்றே கருதப்படுகிறது. இதனால் பழங்காலந்தொட்டே மட்டக்களப்புப் பிரதேசத்திலே நாகதெய்வ வழிபாட்டின் தோற்றமும் வளர்ச்சியும் உருவாகியுள்ளது. பிற்பட்ட காலங்களில் நாக வழிபாடு வயல்களில் காணப்படும் புற்று வழிபாடாகவும், பின்னர் ஆலய வழிபாடாகவும் தோற்றம் பெற்று பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

இப்பிரதேசங்களில் வாழும் ஒவ்வொரு விவசாயியும் ஒவ்வொரு போக நெல்வயல், சேனைப்பயிர் செய்கையின் போதும் தத்தமது வயல்களில் குறைந்தது இரு தடவையாவது பொங்கல் பொங்கி பால்,பழ கரைசல் தயாரித்து வயல்வெளிகளில் காணப்படும் புற்றினுள் ஊற்றி நாகதெய்வத்தை பயபக்தியுடன் வழிபடுவதைக் இன்னும் காணக்கூடியதாகவுள்ளது.

மட்டக்களப்பில் நாக தெய்வத்திற்குரிய கோயில்கள் காணப்பட்டாலும் இதில் வரலாற்றுத் தொன்மையும், திருவருள் சிறப்பும் மிக்க ஆலயம் பண்டாரியவெளி நாகதம்பிரான் ஆலயம் ஆகும்.

இவ் வரலாற்று சிறப்புமிக்க ஆலயம் மட்டக்களப்பு நகருக்கு தென்மேற்கே நகரிலிருந்து சுமார் 15கிலோ மீற்றர் தொலைவிலுள்ள பட்டிப்பளை பிரதேச செயலக பிரிவில் கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றிஸ்வரர் ஆலயத்திலிருந்து கிழக்கே சுமார் இரண்டு கிலோமீற்றர் தொலைவில் வயலும் வயல் சூழ்ந்த பரந்த வயல் வெளியிலே அமைந்துள்ளது இவ் ஆலயத்தின் சிறப்பை மேலும் எடுத்துக் காட்டுகிறது.

இவ் ஆலயத்தின் இரு மருங்கிலும் பண்டாரியாவெளி, படையாண்டவெளி எனும் இரு பழமைமிக்க கிராமங்கள் காணப்படுகின்றது. மட்டக்களப்பின் முதுசமாகிய (முது பெரும்) விஷ வைத்தியத்தையும், மாந்திரீகத்தையும் பரம்பரை பரம்பரையாக பேணி பாதுகாத்து இன்னும்

**பாரிசிலிருந்து**
**ஜீ.ஏ.நல்லரெத்தினம்**

நடைமுறைப்படுத்தி மேற்படி வைத்திய மாந்திரீக முறைகளை அழிய விடாது பாதுகாத்து வருகிறார்கள். இவ் இரு கிராமங்களின் இடையிலுள்ள கரையோரங்களில் அடர்ந்த பற்றைக்காடுகளும், நாகமரங்களும், புதுர்களும் இயற்கையாகவே காணப்படுவதால் நாகங்கள் சுகந்திரமாக நடமடுவதைக் இன்றும் நேரடியாக காணக் கூடியதாகவே உள்ளது. இவ்வாறன இயற்கை எழில் மிக்க காட்டுப்பிரதேசத்தின் மத்தியில் அமைந்துள்ளதே இவ் ஆலயத்தின் இயற்கை எழிலுக்கு மேலும் வலுச் சேர்க்கிறது.

இவ்வாலயம் இற்றைக்கு சுமார் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட காலவரலாற்றை கொண்டுள்ளதாக கருதப்படுகிறது. முன்னொரு காலத்தில் எழுச்சி பெற்றிருந்த "மண்முனை" நகரத்தோடு இவ்வாலயத்தின் ஆரம்ப தோற்றம் தொடர்பு படுத்தப்படுகிறது. இவ் ஆலயத்திலிருந்து சுமார் மூன்று கிலோமீற்றர் தொலைவிலுள்ள மட்டக்களப்பு பிரதான வாவியை கடந்து சென்றவுடன் காணப்படும் பிரதே சமே அக்கால சிற்றரசர்களின் நகரமான மண்முனை நகராகும். இங்கு வாழ்ந்த "கொம்சி" எனும் அம்மையாருக்கு இரட்டை குழந்தையாக கூடப்பிறந்ததாக கூறப்படும் நாகமே இவ் ஆலயத்தின் ஆரம்பத்தில் குடி கொண்டிருந்ததாக அக்காலத்திலிருந்தே கூறப்பட்டு வருகிறது.

இக் கொம்சியம்மையின் பரம்பரையின் வழிவந்தவர்களே இவ் ஆலயத்தின் பூசகர்களாகவும் இவ் ஆலயத்தை பாரமரிப்பவர்களாகவும் வருடாவருடம் வரும் ஆனிஉத்தரத்தன்று பால் பழக் கரைசல் வைப்பவர்களாகவும் காணப்படுவது இவ் வரலாற்று தொன்மைக்கும் மண்முனை நகர கொம்சி அம்மையாரது தொடர்பையும் மேலும் வலுப்படுத்துவதாகவேயுள்ளது.

மட்டக்களப்பின் பண்டைய ஆட்சியளார்களின் அல்லது சிற்றரசர்களின் மானியங்களையும் சீர்வரிகளையும் பெற்று வந்த ஆலயங்கள் இங்கு "தேசத்து" கோயில்கள் என அழைக்கப்பட்டன. அதேபோல மட்டக்களப்பு சிற்றரசர்களின் அல்லது ஆட்சியாளர்களின் அங்கீகாரம் பெற்று இங்குள்ள மக்களாலும் போற்றப்பட்டு வழிபட்டு வந்த நாகட்டு பொங்கல் தேசத்துப் பொங்கல் எனவும் போற்றப்படுகிறது. 10.07.2005 திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 17.07.2005திகதி வெள்ளிக்கிழமை தேசத்துப் பொங்களுடன் நிறைவாகிறது.

# ஆறுமோ உன் நினைவு

**லெப்.கேணல் சேனாதிராஜா அவர்களின் 1ம் ஆண்டு நினைவிற்கு இக்கவிதை சமர்ப்பணம்**



ஆண்டொன்று சென்றாலும்
ஆறுமோ உன் நினைவு
நீ செய்த பணிகளெல்லாம் – பல
ஆண்டு சென்றாலும் மாறாது – எம்
தமிழீழத்தில்..............
தமிழ்த் தேசியம் காக்கவென
தலைவனவன் பாதையிலே நீ நடந்தாய்!
தேசியம் பார்க்கப் பொறுக்காத – தேசத்துரோகிகள்
எம் மக்களுக்காய் இன்னும் பணிசெய்ய உன்னை
விட்டனரோ இவ் வையகத்துள்...........

வாங்க வாங்க என்று அழைக்கும் உன்குணம் எங்கே?
எமைக் கண்டவுடன் சிரிக்கும் அந்த சிரிப்பெங்கே?
எமக்கெல்லாம் அறிவுரைகள் பல சொல்வாய்
அவ் அறிவுரைகளை இனி எப்போ நாம்
கேட்போம் இம் மானிலத்தே.
தோழ் தட்டிக் கொடுக்கும் உன் அரவணைப்பு
ஆஹா ஆஹா எத்தனை! எத்தனை!
இவையெல்லாம் பார்க்கப் பொறுக்காத–அவ்
ஈனப் பயல்கள் உன்னை விட்டனரோ
எம் தாயகத்துள்...........

நீ வென்று விட்டாய்! வென்று விட்டாய்!
உன் பணிகளெல்லாம் வென்று விட்டதடா!
ஆனால் நீதான் இல்லையடா எம் அருகில்
நாங்கள் கற்பிப்போம் உன் நினைவாய்
அவர்களுக்குப் புதுப்பாடம்.
நீ செய்த பணிகளெல்லாம் நிலைத்த
நிற்கும் வரையும் தோற்பார்கள்! தோற்பார்கள்
அந்தத் தேசத் துரோகிகள்............

உங்கள் தியாகங்கள் பொய்க்காது
அழித்து விடும் எதிரிகளை
சும்மாவா? எத்தனை மாவீரர்களை – நாம்
இழந்தோம் இம்மாவீரர்களின் அர்ப்பணிப்பு
விடாது விடாது அந்தத் துரோகிகளை.
மாவீரர் உங்களின் தியாகங்களை – கண்டு
உலகமே வியந்து நிற்குதடா!
இவையெல்லாம் எங்கே புரியப் போகுது
அந்த எதிரிகள் அவர்களுக்கு.

யாருக்காகச் செய்தார்கள் எம் – மாவீரர்கள்
அந்த புனிதமான ''தியாகத்தை, அர்ப்பணிப்பை''
எம் மக்களுக்காய்! எதிர்கால சந்ததிக்காய்!!!
சிந்தியுங்கள்! சிந்தியுங்கள்!
ஒரு கணம் சிந்தியுங்கள்.
உங்களின் தியாகங்கள் நிலைத்து – எமக்கு
வழிகாட்டும் வரைக்கும்...........
எம்பணி தொடரும் ஈழம் கிடைக்கும்
வரைக்கும்.

**போராளி**
**க.சுபத்.**

# உலகை: கவர்ந்த.........

மூன்று ஆயுதம் தாங்கிய வாகனங்கள் சிதறடிக்கப்பட்டன. பதினெட்டு சிங்களப் படையினர் தாக்கப்பட்ட நிலையில் இராணுவத்தின் ஆயுதங்களையும், படைக் கருவிகளையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்)

அன்ரன் பாலசிங்கம் அவர்களின் ''போரும் அமைதியும்'' [War and peace - Anton Balasingham. page 97] என்ற நூலில் பின்வருமாறு செய்தி தரப்பட்டுள்ளது.

(இலங்கை இராணுவத்திற்கெதிராக முதன்முறையாக விடுதலைப் புலிகள் உருவாக்கிய கரும்புலித் தற்கொலைப் படை சிங்கள ராணுவப்படை மீது பேரழிவை ஏற்படுத்தும் முறையில் தாக்குதலை நடாத்தியது. நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் முகாம் அமைத்திருந்த இலங்கைப் படையினர் மீது வெடி குண்டுகள் நிரம்பிய சுமை வண்டியை (லொறி) உள்ளே செலுத்தி அடையாளம் தெரியாத அளவிற்கு இராணுவ முகாமைத் தாக்கி தரைமட்ட மாக்கினார். இத்தாக்குதலின் விளைவாக இராணுவ முகாம் சுக்கு நூறாக்கப்பட்டது. இத்தாக்குதலினால் அதிர்ச்சியடைந்த குடியரசுத் தலைவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவும், படைத் தலைமைப் பீடமும் வீரர்கள் தோல்வி மனப்பான்மைக்கு ஆளாகாதிருக்க இக்கசப்பான உண்மை நிகழ்ச்சிகள் வெளி உலகம் அறியாது மூடி மறைத்தனர். அதே வேளையில் இத்தாக்குதலினால் ஏற்பட்ட பேரழிவை அறிந்த இந்திய புலனாய்வுப் பிரிவினர் உவகை உற்றனர். இத்தாக்குதலின் வாயிலாகத்தான் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவை பேச்சு வார்த்தை மேசைக்கு அழைத்து வரமுடியும் என்று தனக்கு ஒரு இந்திய புலனாய்வு அலுவலர் கூறியுள்ளதாக அன்ரன் பாலசிங்கம் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

சுருங்கக் கூறின் 1987 யூலை 5ல் மாவீரன் மில்லரின் தலைமையில் நடாத்திய கரும்புலித் தாக்குதல் ஈழத்தமிழ் மக்களோடு சிங்களவராகிய தம்மால் நேரடியாக மோதி வெற்றி பெற முடியாது என்பதை உணர்ந்து 20ம் நூற்றாண்டின் மிகப் பெரிய குள்ளநரியாகிய ஜே.ஆர்.ஜெயவர்த்தனா வேறு வழியற்ற நிலையில் தனது நிரந்தர எதிரியான இந்தியாவின் காலில் விழுந்து தம்மைக் காப்பாற்றும்படி கேட்கும் நிலையை ஏற்படுத்தியது. இத் தாக்குதலின் விளைவாகத்தான் அதே மாதம் யூலை 29ம் திகதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா – ராஜீவ் இடையில் இந்திய அரசுடன் இலங்கை – இந்திய ஒப்பந்தத்தைச் செய்ய வேண்டிய நிலையை உருவாக்கியது. இவற்றின் விளைவை நாம் ஆராய விரும்பினாலும் நாளிதழ்களின் இடைச்சிக்கலை நினைவில் கொண்டு 1987 யூலை 5 இல் கரும்புலி நடாத்திய மாபெரும் தாக்குதல் எம் நெஞ்சிலும் எம் வழித் தோன்றல்களின் நெஞ்சிலும் நிலைத்து இடம் பெறுவது உறுதி என்று கூறி விடை பெறுகின்றோம்.

# தனி மனித வீரத்தால்........

எனது துப்பாக்கியைக் கொண்டு போய்க் கொடு. சிங்கள நாய்களிடம் பிடிபடக் கூடாது. இரகசியத்தைக் காக்க வேண்டுமெனச் சொல்ல... ஆனந் அழுது குழறி சீலனைச் சுடுகின்றான். விடுதலைக்காய் உண்மையான தேசப்பற்றுடன் உழைத்த வீரனின் உயிர் மீசாலை மண்ணை முத்தமிட்டு தமிழீழ தாயக சுதந்திரக் காற்றுடன் கலக்கவே, சீலனின் ஆயுதமுடன் ஆனந் எழுந்து ஓட முற்படும் போது அவனும் எதிரியின் குண்டுகளால் துளைக்கப்பட ஆனந்தும் தனது தோழனின் வழியில் செல்லத் தீர்மானிக்கிறான். தன்னோடு வந்த சகோதரனிடம் எண்ணையும் சுட்டு விட்டு அண்ணையிட்ட றைபிளைக் கொண்டு போய் கொடு என்கிறான். அத்தோழனும் கட்டளையை நிறைவேற்ற ஆனந்தும் தமிழீழ மண்ணுடன் சங்கமிக்கிறான். உலக வரலாற்றில் அதியுயர்ந்த மனித தியாகம் ஒன்றுடன் மீசாலை மண்ணில் அரங்கேறியது.

லெப்.சீலன் ஓர் அற்புதமானவன். எதிலும் முதன்மையாக நிற்கும் அவனது தூய்மையான வீரத்தினை தலைவர் அடிக்கடி நினைவுகூறுவதோடு, அந்தப் புனிதமான வீரனின் பெயரால் மரபுவழிப்படையணி ஒன்றை உருவாக்கினார். கரந்தடிப் படையணியாக இருந்த எமது இயக்கம் மரபுவழிப் போர்ப் படையாக சீலனின் நாமத்திலேயே முதன் முதலாக ஆரம்பமானது. எதிலும் முதன்மையானவனின் பெயர் சொல்லி சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியாக உருவாகி தமிழீழ விடுதலைப்போரரங்கில் சுமார் 85 களங்களாடி பாரிய துரோகத்தனத்தை தனது ஆற்றலால் முறியடித்து தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு உந்து சக்தியாக நின்று சீலன் எனும் பெரும் வீரனின் உயிர்த் துடிப்பால் தமிழீழம் காண அணிவகுத்து நிற்கின்றது.இதுவே சீலனின் வீரத்திற்குச் சாட்சியாகும்.

# காலக்கெடுக்குள் அகப்பட்டு..........

சிறிலங்கா பாதுகாப்பு படைகளின் அதிகரிக்கப்பட்ட பலம் பற்றி Sri Lanka's Military: The Search For A Mission என்கின்ற ஒரு கைநூல் 2004 டிசம்பரில் அமெரிக்காவில் வெளியிடப்பட்டது. அமெரிக்காவின் பிரபல இராணுவ ஆய்வாளரான பிரையன் புளொட்கெட் இந்த நூலை எழுதியிருந்தார். அவரது கூற்றுப்படி, ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படையானது இந்தச் சமாதான காலப்பகுதியில் தனது படைப்பலத்தை பலமடங்கு அதிகரித்திருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். விடுதலைப் புலிகளுடனான யுத்த நிறுத்திற்கு சற்று முன்னர்வரை 10,000 வீரர்களைக் கொண்டிருந்த ஸ்ரீலங்கா வான் படை தற்பொழுது 19,300 வீரர்களைக் கொண்டிருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். சமாதான ஒப்பந்திற்கு முன்னர் 18,000 வீரர்களைக் கொண்டிருந்த ஸ்ரீலங்காக் கடற்படை தற்பொழுது 20,600 கடற்படையினரைக் கொண்டு செயற்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இந்த சமாதான காலப்பகுதியில் ஸ்ரீலங்காப் படைத்துறை தனது ஆயுத பலத்தையும் பலமடங்கு அதிகரித்துள்ளதாக அவர் தனது ஆய்வில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இவது கணிப்பின் படி, இந்த சமாதான காலப்பகுதியில் ஸ்ரீலங்கா வான்படை பத்து எம்.ஐ.-35(MI-35) ரக தாக்குதல் உலங்கு வானூர்திகளையும், மேலும் பத்து போக்குவரத்து உலங்கு வானூர்த்திகளையும் புதிதாக கொள்வனவு செய்துள்ளது. ஏற்கனவே 97 ஆக இருந்த ஸ்ரீலங்கா இராணுவத்தின் ஆட்டிலறிகள், இந்த சமாதான காலத்தில் 187 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீலங்காப் படையினரிடம் முன்னர் 158 ஆக இருந்த கவச வாகனங்கள், இந்தச் சமாதான காலத்தில் 204 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்தக் காலப்பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் 40 யுத்த தாங்கிகளையும் கொள்வனவு செய்துள்ளது.

அமெரிக்கா, இந்தியா, இஸ்ரேல் போன்ற நாடுகளிடம் இருந்து பல யுத்தக் கப்பல்களையும், போர் தளபாடங்களையும் ஸ்ரீலங்கா அரசு பெற்றுக்கொண்டுள்ளது. இதனைவிட செக் குடியரசிடம் இருந்து விமான எதிர்ப்பு ஏவுகணைகளையும், இந்தியாவிடம் இருந்து நவீன வான் பாதுகாப்பு தொழில்நுட்பத்தையும் (Air Defence System) பெற்றுக்கொள்ள உள்ளது.

கடைசியில் இந்தியாவுடனான இராணுவ ஒப்பந்தமும் தற்பொழுது கைச்சாத்திடப்படத் தயாரக உள்ளது. ஆக மொத்தத்தில் ஸ்ரீலங்கா அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் மேற்கொண்டதாகக் கூறப்பட்ட 'சமாதான' நடவடிக்கை உண்மையிலேயே 'சமாதான' முலாம் பூசப்பட்ட ஒரு இராணுவ நகர்வு என்றே எண்ணத் தோன்றுகின்றது.

ஆனால் ஒரு விடயத்தை ஸ்ரீலங்கா அரசு மறந்துவிட்டு செயற்படுகின்றது என்பது மட்டும் தெளிவாகத் தெரிகின்றது. தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம் என்கின்ற உணர்வு ரீதியான நியாயப்பாட்டை, வெறும் ஆயுதங்களின் பலத்தை மட்டும் கொண்டு அடக்கிவிடலாம் என்று ஸ்ரீலங்கா அரசு மறுபடியும் நினைக்குமேயானால், வழமை போலவே இம் முறையும் அது மண் கௌவுவது உறுதி என்பதில் எந்தவிதச் சந்தேகமும் இல்லை.





விடுதலைப் புலிகளின் போர்ப்படை அணியின் இளநிலை அதிகாரிகளின் பயிற்சிநெறி நிறைவு நாளில் தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார். இளநிலை அதிகாரிகள் பயிற்சி நெறி மாணவப் போராளிகளின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பயிற்சி நெறியை நிறைவு செய்த போராளிகளுக்கான சான்றிதழ்களையும் தேசியத் தலைவர் அவர்கள் வழங்கிக் கௌரவித்தார். இதன்போது பயிற்சி நெறிகளை வழங்கிய ஆசிரியப் போராளிகளுக்கும் சிறப்புப் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்படுவதைப் படத்தில் காணலாம்.






போரினால் பாதிப்புற்ற குடும்பங்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மானியம் வழங்கும் நிகழ்வு அண்மையில் கரடியனாறு தேனகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்ட மட்டக்களப்பு மாவட்டக் கட்டளைத்தளபதி கேணல் பானு , மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் இளந்திரையன், தளபதி பிரபா, தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் சீசர், மற்றும் பொறுப்பாளர்கள், கலந்துகொண்ட பொது மக்கள்.



போரினால் பாதிப்புற்ற மக்களுக்கு துரித புனர்வாழ்வுத்திட்டம் வெல்லாவெளியில் இடம்பெற்ற போது :-



கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பட்டப்படிப்பு மாணவர்களின் முதலாம் வருட மாணவர்களை வரவேற்பது மற்றும் பட்டம் முடித்து வெளியேறும் மாணவர்களுக்கு பிரியாவிடை அளிக்கும் நிகழ்வு மட். அரசினர் கலாசாலையில் நடைபெற்றபோது.

## நான்காவது ஆண்டு அகவை தின வாழ்த்துக்கள்



## புஸ்பராஜா-சிவானுஹா

மட்டக்களப்பு அருள்நேசபுரத்தைச் சேர்ந்த புஸ்பராஜா-பிறேமலதா தம்பதிகளின் செல்வப் புதல்வி சிவானுஹா தனது நான்காவது பிறந்ததினத்தை 13.07.2005 புதன்கிழமை தனதில்லத்தில் கொண்டாடினார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பம்மா, மாமாமார், மாமிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், ஜேர்மன் புவி சித்தப்பா, ஜேர்மன் ஆசை அப்பப்பா குடும்பம் அண்ணாமார் அக்காமார் தம்பிமார், மச்சான்மார், மச்சாள்மார் அனைவரும் மஞ்சவணா மரத்தடி விநாயகர் அருள் பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்தினர்.

தகவல்
திரு.திருமதி.புஸ்பராஜா
மெயின் வீதிஇ அருள்நேசபுரம்

இப்பத்திரிகை நித்தி பதிப்பகத்தில் 15- 07- 2005 அன்று அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது